S. 349

சித்தர்நூல் பதிப்புக் கழகத்தின் வெளியீடு, 2-ம் புத்தகம்.

ஓம்.

திரு வள்ளுவ நாயனார்,

வகுத் தருளிய,

பஞ்ச ரெத்தினம் நூல்.

சென்னை - சமரசஞான சங்கத்தலைவரும் - சித்தர் நூல்
பதிப்புக்கழகத்துக்கும் சித்தவைத்திய சங்கத்துக்கும்
அமைச்சரு மாகிய

உயர்திரு - சண்முகானந்த சாமிகளால்,

குறிப்புரையும் முகவுரையும் எழுதி அச்சிடப்பட்டது

சித்தர் அச்சுக்கூடம்,
வண்ணாரப்பேட்டை,
சென்னை.

1927 ஸு,
மார்ச்சுமீ
விலை ரூ. 2.

காபிரைட் ரிஜிஸ்டர்.

கழக வுறுப்பினருக்கு மாத்திரம் விலை ரூபா 1.

S.349



திருவள்ளுவ நாயனார்.

S. 349

ஓம்.

முகவுரை.

சித்துருவாமோரு சித்தர் தஞ்சேவடி
சித்தத்திருத்திச் செப்புவன் சிறிதே.

சித்தர் — சித்து×அர். சித்தர்எனவும். அன்விகுதிகூட்டிச்சித்தன்எனவும்பேசியும் எழுதியும் வருவதுஇயல்பு, சித்து என்றால்சிறிது, அறிவு, என்றுபொருள். சிறிதாவது-பழைய அணுவாதியர்களும், மேனாட்டு ஆராயச்சிப் புலவர்களும், எந்தப்பொருளைச் சிறிதென்று கூறுவார்களோ, அதற்குஞ் சிறியதெதுவோ அதற்கே சித்தென்று பொருள் கூறலாம். காரணம் – அணுவுக்கணுவென்று எப்பொருளைக் கூறினார்களோ, எப்பொருட்டுணைகொண்டு யாவையும்பிரித்து அணுவாக்கவியன்றதோ அதுசித்தாதல்துணிபு. அதுவும், காலத்தாலும், இடத்தாலும், செயலாலும், *மக்களாலும், அரியவுபாயங்களாலும், மாறாதுஎக்காலத்தும், எவ்விடத்தும், எச்செயலாலும்,எவராலும்,எவ்வுளவாலும், மாறாதபேரறிவுவடிவாகவுள்ள பொருளையே சித்தென்பர். இவ்வியலினை இயல்பாகவுள்ள பொருள் சகலத்தையுங் கடந்து நிற்றலால் கடவுளென்றும். இங்ஙனமில்லாது காலமாதிகளால் மாறுகின்றதோடு உடலில் காணும் படியாக விளங்கியும் உயிர்ப்பாலறியுந் தன்மையுடைமையால் உயிர்களென்றும் † சித்து இருவகைப்படும்.

காரியவடிவாகிய உலகமும் அதன்காரணமும் இருப்பது கண்கூடு. ஆக முப்பொருளும் கலந்த ஒரு தோற்றத்தையே உலகமென்பது வழக்கு. ஆயினும் உயிர்என்ற பொருளானது காலமுதலியவசத்தால் மாறுதலாகிய செயலை அறியாதிருப்பது - சட்டு, (பந்தம்) தெரிந்துகொள்வது அதிகாரம். தெரிந்தவாறே அனுபவித்து மேலானநிலைபெறுவதே முத்தி.

இந்த உயிருக்குள்ள குற்றமாகிய பிறப்பு, இருப்பு, இறப்புக்களைமாற்றுவதை அறிந்து அனுபவித்தும் பிறருக்கும் கூறினவர்களே, தென்னாட்டுப் பெரியார் என்னும் சித்தர்என்க.

---

* சத்தையும் ஆனந்தத்தையும்கூட்டிச் சச்சிதானந்தமென்பர்.

† தேவர்களும் அடங்குவர் (உயிராதலால்)

அங்ஙனந்தோன்றிய பெரியாரும் பலராவரென்க.
அவர்கள்கூறியவாறு பலருங்கூடி ஒழுகுவதே * மதம்என்க.

நிற்க, காலமாதிகளால் சித்துக்குமாறுதல் காணப்படுவதே பந்தம். ஆனதால், மாறுதலற்ற இயற்கைச் சித்திற்கு ஒப்பச்செயற்கையால் மாறுதலாகிய குற்றங்களை யுணர்ந்து நாளடைவில் முயன்று நீக்கி இயல்பான சித்திற்குச் சமானமாகிய நிலையடைதலே சித்தி-ஆனதால் சித்தானவர்கள் சித்தர். என்பது மரபு. அன்றியும்

1. உலகினைவிட்டு உயிரும், உலகும், உயிர்களையும் விட்டுக் கடவுளையும், பிரித்துக் காணவியலாது. உருவமாகவோ, அருவமாகவோ கலந்தே நிற்குமென்க. ஆனதால் இயற்கைச் சித்தின் குணங்களை உயிரானது உடலுடன் கூடி இருக்கும் போதே செயற்கையால் கருதிய சகல நலங்களையும் பெறுவதே சித்தி என்பதால் இவைகளைப் பெற்றோரே சித்தர். என்க. இன்னும் சித்தியென்றால் தான் கருதிய சகல நலங்களையும் பெற்றும் தன்னையடைந்து வேண்டினவர்களுக்கும் பெறும்படி செய்வது சித்தி (வல்லமை) யென்பர்.

அருவமாகிய மனத்தால் எண்ணிய எண்ணங்கள் கருமமென்றும் வினையென்றும் ஊழ் என்றும் பெயர் பெற்று உருவமாகிய உடலாகவும் உண்பொருட்களாகவும் வந்து எவ்வாறு மக்களை வறுத்துகின்றதோ அவ்வாறே, உருவமாகவுள்ள வுடலை மனவலுவின் துணையால் அருவமாக்கிக் கொள்வதுதான் சித்தர்களின் செயற்கருஞ் செயல்கள். இவற்றிற்கே சித்தியென்று பெயர்.

2. சித்தர் என்றால் சிறியவர். குழந்தை-சிறுவர் — அதாவது மக்களாக இயல்பிற் பிறந்து வளர்ந்து பெரியவுடலான பின்பு

---

* இந்திய நாட்டில் ஆரியர்-தமிழர். என்று இருவகுப்பினரும், தலைவர். இருடிகள், சித்தர்கள் எனவும். மொழி ஆரியம்தமிழ் எனவும், நூல், வேதம், †ஆகமம் (சித்தர் நூற்கள்) எனவும் இதற்கு மாறுபெயர்-வைதீகம்,தாந்திரீகம் எனவும் ஆசாரங்களுக்கு வைதீக ஆசாரம் தாந்திரீக ஆசாரம் என்றும் இவ்விரு வகையில் மேலே கூறிய யாவும் கலந்த பொதுப்பெயருக்குத்தான் இந்துமதமென்றுபெயர் இவ்வகையானவிபரம்தெரியாமல் தென்னிந்தியாவில்சமயத்தை வளர்த்தல் (பிள்ளையாரைப்பிடிக்கக் குரங்காய்முடிந்த) தென்றபடி ஒருசாரார் பிழைப்புக்கு வழியாகுமன்றி, யாவருக்கும் நன்மையுண்டாகாது.

†சித்தர். இயக்கர். கந்தருவர். உய்யும் பரிசு மற்றுள்ளோர் உரைத்த ஆகமங்கட்கும். என்னும் சூதசம்மிதை வசனத்தாலறிக. அன்றியும்வடமொழியில் சைவ வயிணவ ஆகமங்கள் எழுதியது பிறகென்க.

செயற்கை வல்லபத்தால் * சிறுவர் வடிவாக ஆகி விளங்குகின்றவர்களே சித்தர். இத்தகைய நிலையையே உருவசித்தியென்றும். அருவமாகவுடலைச் செய்வது அருவசித்தி யெனவும். உருவமாகவோ, அருவமாகவோ தான் கருதுமாறு உடல் நிற்றலை உருவாருவ சித்தியெனவும் கூறுவர்.இம் † மூவகைச் சித்திகளில் ஒன்றையாவது பெற்றவர்களால் அனுபவிப்பது தான் பேரின்ப சித்திப்பெருவாழ்வென்க. ஏனையோரால் இயலாதென்க.

அறிவின் குறைவு விரிவுக்கேற்றவாறு சிற்றின்பம் பேரின்பமென்றிருப்பதும் அறிஞரறிந்ததே. இதனல்-செயலும் குணமும், கரணமும் கலந்த அறிவும், சிறிதாக இருக்கு மளவும் அனுபவித்து வருமின்பமும் சிறிதாக இருப்பதும், செயல், குணம், கரணம் கலந்த அறிவையும் ‡ பெரிதாக்குவதே பெரியார் செயலெனவும் அப்போது வருமின்பம் பேரின்பமெனவும், கூறுவதால் எவ்வகையில் குணமும், செயலும், கரணமும் அமைந்து தொழில் புரிகின்றனவோ, அவ்வகையில் இன்பமும் சிறிது பெரிதாமென்க.

இன்னும் உடலில் கரணமும், கரணத்தில் குணமும், குணத்தில் செயலும், (ஒவ்வொன்றிலும் அறிவுங்கலந்து) இன்பமும் பெரிது சிறிதாகுமென்பது உண்மையே. பூதபரிணாமமாகிய வுடலுடலிலிருந்து கொண்டு சித்தியடையாமல் இருக்கும்போதே அகண்ட இன்பானுபவம் வாய்க்குமென்பது பொருந்தாது? அதனல் உடல் சித்தியும் அதனல் பூரண இன்பானுபவமும் இந்த நிலையே சொரூபமுத்தியென்னும் ஜீவன்முத்தி யென்றும். வெறு வெளியாகின்ற நிலையினை அருவமுத்தியாகிய விதேக முத்தி யென்னுங் கூறுவர், இதனல் முத்தியென்பது பேரின்ப சித்தியென்றும் பேரின்பத்தினையே பூரண இன்பமெனவும் பூரண இன்பத்தைப் பெறவேண்டினல் அவ்வின்பத்தினை யேற்று அனுபவிக்கத் தக்க வகையில் உடலை, ** நித்தியதேகமாக்கிக் கொள்வதே உடற்சித்தி யெனவும் இவ்வுடற் சித்தியே அமிர்த சித்தி யாவதென்றும்

---

* விருத்தர்களும் பாலராவர்-எனவும். பதினாறுமாற்றுப்போற் பாலனு முன்றேகம் எனவும் வருதல் காண்க.

† முத்தியிலும் தேகமிசை மூவிதமாஞ் சித்திபெற்றோர்-என்றார்:

‡ அன்பைப்பெருக்கி எனது ஆருயிரைக்காக்கவந்த இன்பப்பெருக்கே-என்றார்.

** என் உடலுயிராதிய வெல்லாம் நீயெடுத்துக்கொண்டுன் உடலுயிராதியவெல்லாம் உகந்தெனக்கே யளிப்பாய். என்றார்.

* அமிர்த சித்தியாவதற்கு மணி மருந்துக்களின் துணைமுக்கிய மென்றும் மணி மருந்துக்களை முடிப்பதற்கு முப்பு முடியவே ண்டுமென்றும், முப்புவும், யோகமும், அனுபவித்த ஆசானாகிய சித்தன்வாயிலாகவே பெறவேண்டுமன்றி, ஏனையோரால் முழுப்பயனும் அடைய முடியாதென்க.

அடையு முபாயம்.

சித்தனைக் காணவும் அவன் காற்கீழ்ப்பணிபுரியவும், அவனருளைப் பெறவும், மாருத ஆவல்கொண்டும், ஓங்காரத்துள் ளொளியினைமனத்தில் இருத்தியும், தன்னால் பிறவுயிர்களுக்கு இயன்றவளவு, துன்பம் நேராமல் இன்பமுண்டாக வுதவிசெய்து கொண்டும், பெரியாரிடத்தில் பத்தியுடையவனாக நடந்து வந்தால், தேவனைக் காணுமாப்போல், ஒரு காலத்தில் சித்தரைக்கண்டு, அவர்கருணையினால், சித்தனாகலாமன்றி, வேறு வழியில்லை யென்றுணரவேண்டும்.

முடிப்பு.

ஞானிகளின் குணங்களைக் கூறுமிடங்களில் முதலில் பாலர் இயல்பையேபலவிடங்களில் கூறியிருப்பது, சிவர்களுக்கு மானம், அவமானம், உயர்வு, தாழ்வு, நான், எனது சாதி, சமயம், பகையுறவு முதலிய, குணங்களில்லாமையா லென்க. மக்களுக்கு இயல்பாகிய தீயகுணங்கள் செயற்கையால் எவ்வாறுமாறியதோ, அவ்வாறே உடலும் சிறுவர்க்குறியதாக மாறுவதே பொருத்தமென்று கருதியே உடற்சித்தியை முதலில் விரும்பிப் பெற்றவர்களைச் சித்தர் என்பது மரபு. இவர்களிலும், பாலவர்க்கம் மூலவர்க்கம் † கயிலாசவர்க்க மென்பதுண்டு. அல்லாமல், விண்ணுலகவாசிகளில்எவ்வாறுசென்மதேவரெனவும் கர்மதேவரெனவும் பிறிவுண்டோ, அவ்வாறே, இயற்கைச்சித்தர்களும் ஒரு கூட்டம் விண்ணகத்துள்ளார்கள். அவர்களும்சிறுவர்வடிவத்துடன் இறகுள்ளவர்களாகவும் இருப்பதாகக் கண்டவர் கூறக் கேட்டுள்ளேன். இக்கருத்திற் கிசையச் சித்தர்கள் ‡ சூரியவெப்ப

---

* உடலில் இரத்தஓட்டம் அமிர்தமா (வெண்ணீரா)கமாறி ஓடுவது.

† கயிலாசமென்பது பொதிகைமலைக்கே பெயரிருந்ததாக அறியப்படுகின்றது. தென்கயிலாசம் வடகயிலாசமென்ற வழக்குஇன்றைக்குமுண்டு.

‡ விண்செலன்மரபின் ஐயற்கேந்தியதொருகை என்ற திருமுருகாற்றுப்படையின் அடியின் உரையால் தெளிக.

த்தினைத் தங்களுடம்பில் தாங்கிவிடுவதர்க்காகவே விண்ணில் பறக்கின்றார்கள் என்றுபொருளாகின்ற வசனமும் இவர்களையே குறிக்குமென்க.

விண்ணகத் தேவரிலும் சித்தரிலும் இயற்கையாகிய தேவருஞ் சித்தரும் எங்ஙனமிருக்கின்றார்களோ அவ்வாறே மண்ணகத்திலும் இயற்கைச் சித்தரை யொப்பமுதற் சித்தர்கள் குமரன் குமரி என்னும் இருவருமென்று கருதுகின்றார்கள். இவர்கள் அருள்த்திருமேனியுடையவர்கள். இவ்விருவர்களுக்கும் வாலை. முருகன், என்ற பெயருமுண்டு. இவ்விருவர்களையும் தேவர்களுடன் கூட்டி ஆறுசமயங்கள்செய்தும் ஆறும் ஆறாயிரமாகப் பெருகிச் சமயப்போர் அதிகரித்து நாளுக்குநாள் வாய்வாதமும் சாதிக்கொதிப்புந் தோன்றிச் சித்தர் என்றபெயர் கூடத் தமிழ்மக்கள் உணராத நிலைக்கு வந்துவிட்டது ஆ? கொடுமை? கொடுமை? இவர்களில் ஒன்பதின்மர் ஒரு கூட்டத்தார் இவர்களுக்கு நவநாதசித்தர் என்றும்பெயர். *பதினெண்மர் ஒருபிரிவினர் † அறுபத்து நால்வர்கள் ஒருகூட்டம். இவர்களைப் பலபிரிவினராகக் கூறினும் ஒருவர்கூறியதுபோலவே வழலை, முப்பு, காரம், சாரம், கற்பம, மணி, விந்து, நாதம், சத்தி, சிவம், தாய், அருள், அம்மை, வாலைமுதலிய பெயர்களை யோசிக்கு மிடத்துத் தமிழ் நாட்டில் இலக்கண வரம்பு பாஷைக்கு ஏற்படுவதற்கு முன்னுள்ளவர்களெனவும், அவர்களால் செய்தருளியதே தமிழ் மொழியென்று கூறும். மாகறல் கார்த்திகேய முதலியார்மொழிநூல் கருத்து மிகவும் பொருத்தமாகவே காணப்படுகின்றது. னேர்ந்துழி விரிப்பாம்.

திருவள்ளுவர்.

இத்தகையாருள் திருவள்ளுவரும் ஒருவரே – இவர் தன்னை அகத்தியர் மாணுக்கரென்று கூறுவதுடன் யோகமும் கற்பசாதனையும் உடல்சித்திக்குவேண்டிய வுபாயங்களுங்கூறியதோடு முப்பு சுத்தகெங்கை, மருந்து,மணி, வாலை,முதலியசொற் களுடன் வைத்தியமும், கூறிச் சித்தர்கள், தொகை, வகை, விரிவில், நூற்கள் கூறியவாறு இவரும் ஞான வெட்டி 1500-ம். நவரெத்தின சிந்தாமணி. 800-ம். பஞ்சரெத்தினம் 500-ம். பிறகு 300 - 200

* ஒன்பதிற்று இரட்டி உயர் நிலைபெறீயர் என்று திருமுருகாற்றுப்படை கூறும்

† எட்டெட்டாமரபிலுள்ள நாதாக்கள்பாதம் எனவருவனவற்றாலுணர்க.

100 - 60 - 30 - 1ட என்றமுறையாக * நூல்கூறியிருப்பதால் மேற்கூறியசித்தர் மரபில்வந்த ஒருபெரியாரென்று பலரும் கருதுவார்கள். நிற்க, சித்தர் நூல் ஆராயச்சியுடையார் பலரும் ஞானவெட்டியிலுள்ளவசனப்படிக்குத் திருக்குறள் செய்தவரும் இவரேயென்று காரணம் பலகூறி வாதிடுகின்றார்கள். சமயவாதிகள் திருக்குறளாசிரியரும் ஞானவெட்டி யாசிரியரும் வேறுதான் என்று பல காரணம் கூறிவாதிக்கின்றார்கள். இருவர்களுக்கும்வள்ளுவர் சரித்திரம் ஒன்றுதானிருக்கிறது. இருகூட்டத்தார்களும் சரித்திரம் முழுவதும் ஒப்புவதில்லை. சிலவற்றைக்கொண்டுஞ் சிலவற்றைத் தள்ளிவிடுகின்றார்கள். வள்ளுவ ரிருவரென்றால் வாதமே கிடையாது. அதையொப்பாமலே சண்டையிடுகின்றார்கள். அதில் எமக்கு விருப்பமில்லை. ஒருவராயினும். இருவராயினும். சம்மதமே. நமது நாட்டுப் பெரியார் என்று கூறி இத்துடன் நிறுத்தி இந்த நூலைக்குறித்துச் சிறிது கூறுகின்றேன்.

பஞ்ச ரெத்தினம் நூ.

இந்த நூலைப்பற்றித் தமிழ் நாட்டில் வாதம், வைத்தியம், கற்பம்,யோகம், ஞானம் என்றவகையில் பழகுகின்ற பலருங்காணுவதர்க்காகப் பலகாலமும் பொருளும் செலவு செய்து திகைத்திருக்கின்றார்கள். சித்தர் கொள்கையைப் பரவச்செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் தொடங்கிய சித்தர் நூற்பதிப்புக்கழகத்தில், திருமூலர்கருக்கிடை வைத்தியம் 600. அச்சிட்டு வெளிவந்ததைக் கண்ட பலரும் நேரிலும் கடிதமூலமாகவும் பஞ்சரெத்தினம் 500-ரைத் தேடிக்கண்டு அச்சிட்டால் பேருதவியாக இருக்குமென்று விரும்பியதர்க்கு இசைந்து இடைவிடாது. மூன்று வருட முயற்சித்துப் பலருக்கும் பொருள் கொடுத்தும் முடிவில் கிடைத்து, அச்சாகி வெளியிடுமளவும் நேர்ந்த கஷ்டத்துக்குத் திருவள்ளுவரே உணர்ந்து ஆறுதல் செய்ய வேண்டியதன்றிச் சொல்லியும் எழுதியும் யாதுபயன். இதனால் தமிழ் மக்கள் தங்கள் முன்னோர்களுடைய நூற்கள் வெளிவரவேண்டும் நமது நாகரீகமும் பிறவும் பலரும் அறியும்படி செய்வது உபகாரமென்று கருதினால் இவ்விதம் செய்திருக்கமாட்டார்களென்பது திண்ணம். ஆயினும் தொடங்கிய

* சோதிடமும். வேறுபலவும்கூறியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

வேலை ஒருவாறு முடிவுற்றதற்குச் சித்தர்கள் திருவடிகளை வணங்குகின்றேன்.

பொருட்செலவு அதிகமானதால் இதற்கு விலை. ரூ. 2. ஆக ஏற்படுத்தியதன்றி வேறில்லை. இப்போதும் பலர் 5-ரூ. விலைக்கு விற்கலாமென்றும் கூறினார்கள். கூறுகின்றார்கள். பலரும்படிக்கவேண்டுமென்ற நோக்கத்தால் குறைந்த விலை வைத்ததென்றுணரவேண்டும். சித்தர் செந்நெறி வாழ்க. இங்ஙனம்சித்தரடிப்பொடி,

மூவிருமுகச்சுகம்.

(21-3-27) சி, நூ, ப, க, ம். யோகானந் தாச்சிரமம்

வண்ணாரப்பேட்டை, சென்னை.

ஓம்

தமிழ்மக்களாகிய சித்த வைத்தியர்களுக்கு,

*அறிவிப்பு.

உடன்பிறந்தோர்களே சிறிது கவனியுங்கள்:—

இந்தியநாடென்னும் சிறந்த நிலப்பரப்பினையும் அதில்வாழ்ந்த வாழுகின்றமக்களின் மொழி- இசை- மருத்துவம் யோகம் (வளிநிலை) ஞானம் (மெய்யுணர்தல்) முதலிய நாகரீகங்களைப்பற்றியும் மேனாட்டவரும் வடநாட்டவரும் தென்னாட்டவரும் பற்பலதுறைகளில் ஆராய்ந்தும் நூற்கள்எழுதியும் பேசியும் தங்கள்கருத்தினை வெளியிட்டுவருகின்றார்கள்- இவர்களின்கருத்துக்களையுற்று நோக்குமிடத்து ஒன்று புலனாகின்றது அதாவது ஆரியர்களும்- அவர்களுடைய மொழியாகிய † ஆரியமும் இசையும் வைத்திய மாதிகளும் தோன்றுவதற்க்கு முன்னமே ஒருகூட்டத்தார்க ளிருந்தார்களென்றும்- அவர்களுடைய நாகரீகமே இந்தியாவெங்கணும் பரவிஇருந்ததென்றும் அவர்களே தமிழர்களென்றுங் கூறுவதோடு — அவர்களும் அவர்களுடையநாகரீகங்களும் பலகாரணங்களால் நாளடைவில் குறைந்திருக்கிறதென்றும் எண்ணியும் பேசியும் எழுதியும் வருகின்றார்கள். இதனால் நாமுணர்ந்துகொள்ளவேண்டியது யாதென்றால் இப்போதுவந்து அரசுபுரிகின்ற ஆங்கிலேயர்களும் முன்வந்து அரசுநடத்திய முகமதியர் (துருக்கியர்) களும் எப்படி வெளிநாட்டிலிருந்துவந்து தங்களுடைய நன்மையைப் பாதுகாத்துக்கொண்டு அரசுநடத்தி நம்மை (தமிழ் மக்களை) அடக்கி ஆண்டுவந்தார்களோ - வருகின்றார்களோ, அதுபோலவே இவ்விருகூட்டத்தார்களுக்கு முன்வந்து நம்

---

*இவ்வறிவிப்பால் நாம்தாழ்ந்துள்ள நிலையினையுணர்ந்துவிலகி நமது பெரியோர்களின்நாகரீகங்களைக் கைப்பற்றி நன்னிலைபடைவதற்க்கு எழுதியதன்றி ஒருவரையாவது இழித்துக்கூறுங் கருத்துக்கிடையாது என்றுணரவேண்டும்.

†ஆரியம் - வேதகாலமொழி சம்ஸ்கிருதமோ பிறகு பலமொழிகளின் துணைகொண்டுதிருத்தஞ் செய்யப்பட்டதென்றுணர்க.

மைப்பலவகைகளிலும் அடக்கி, மேலேறவிடாமல், ஆண்டுவந்த ஒருகூட்டத்தார்களை ஒப்புக்கொள்ளவேண்டி யிருப்பதால் அவர்களே ஆரியரென்று உணரவேண்டும். ஆங்கிலேய (கிருத்தவ)ரும் முகமதியரும் தங்கள் மதத்துக்குப் புறம்பானவர்களை எவ்வாறு-அஞ்ஞானி, பாபி (காபர்) என்று அழைக்கின்றார்களோ, அவ்வாறே' ஆரியர்களும் தங்கள்கொள்கைக்கு உட்படாதவர்களைச் சூத்திரர்களென்று அழைக்கின்றார்கள். விபரந்தெரியாதவர்கள். கிருஸ்தவர்கள் கொடுத்த அஞ்ஞானியென்னும் பட்டத்தைத் தாங்களேதங்களை அஞ்ஞானி என்றுகூறுவதுபோலவே, தமிழர்கள் தங்களைச் சூத்திரர் என்று பேசியும் எழுதியும் வருகின்றார்கள் என்னே? கொடுமை? கொடுமை? ஆ? சிறந்தநாகரீகமுடையநாட்டில் பிறந்தமக்கள் தங்களை இன்னாரென்றுணர்ந்து கொள்ளவியலாமல்செய்த சூட்சுகிகளை எண்ணுந்தோரும் யாவர்தான்மன வருத்தப்படாமலிருக்கவியலும். நிற்க இவ்வளவு கூறியதன்கருத்து இந்தியாவில் இப்போதுள்ள கூட்டத்தார்கள் 1. ஆங்கிலேயர் 2 முகமதியர் 3. ஆரியர் 4. தமிழர் (திராவிடர்) ஆவர் இதில், ஒவ்வொரு வருக்கத்தாரும் தங்கள் தங்கள் மொழியும், வைத்தியமாதிகளையும் அபிமானித்துப் போற்றுவது போலத் தமிழ்மக்கள் இனியாவது தங்கள்நாட்டுக்கும் மொழியாதி கலைகளுக்கும் தலைவர்கள் சித்தர் என்றும் அவர்கள்வகுத்தருளிய வைத்தியமே. நமது சித்தவைத்தியமென்பதை யுணர்ந்து தமிழ்ஆயுர்வேதவைத்தியம். சித்தாயுள்வேதவைத்தியம்-தென்னிந்தியா ஆயுள்வேதவைத்தியம் ஆயுள்வேதசித்தவைத்தியமென்னும் மயக்கப்பெயரிட்டழைக்காமல் தனியாகச்சித்தவைத்தியமென்று எண்ணியும்பேசியும்எழுதியும் பெயரிட்டும்வந்தால் தமிழ்மக்களுக்குப் பெருஞ்சிறப்பினைக்கொடுக்குமென்று கருதியே இக்கொள்கைகளை வெளியிடவே இக்கழகம்(21 - 4 - 23) தோன்றுவதாயிற்று இதில் ஓருரூபாய்கட்டி உறுப்பினராகச்சேர்ந்து பிறரையும்சேரும்படிசெய்தும் கழகத்தைவலுக்கச்செய்தும் அவ்வப்போதுவெளிவரும் புத்தகங்களைவாங்கி ஆராய்ச்சிவடிவிலெழுதிவரும் முகவுரையும்குறிப்புரைகளையும் பார்த்துமகிழ்ந்து சித்தர்கருணையினால் சித்திமுத்திபெற்றுவாழவிரும்பும் அன்புள்ள அமைச்சர். சி, நா, ப, க, ம்.

உறிமை அறிவிப்பு,

சித்தர்நூற்கள் திருத்தமான பதிப்பின்மையால் மொழியும், சமயமும், உணர்ந்தவர்கள் அருவெறுக்கின்றார்கள் அதனைஒழிக்கவே இக்கழகம் வேலை செய்வதால் இதினின்று வெளிவரும் புத்தகங்களைக் கழகச் சம்மதமின்றி ஒருபகுதியோ முழுதுமோ வேறுஎவரும் அச்சிடக்கூடாது என்பதாக அரசாங்கத்தில்பதிவும் (ரிஜிஸ்டரும்) செய்துள்ளது மீறி அச்சிட்டால் நஷ்டஈடு சட்டப்படிக்கு வாங்கநேருமென்பதை இதனால் அறிவிக்கின்றேன்.

இப்படிக்கு அமைச்சர்
சண்முகானந்த சுவாமி.
(21 - 3 - 27) வண்ணாரப்பேட்டை, சென்னை.

ஓம்

திருவள்ளுவ நாயனார்,

பஞ்ச ரெத்தினம்.

நூல.

வாலாம்பிகை துதி.

பாயிரம்.

மஞ்சு தவழ்மலை மாநில மீதினில்
பஞ்ச ரெத்தினம் பனுவல் புகலவே
அஞ்ச லெனத் திருவருளை யுதவிடும்
வஞ்சி வாலாம்பிகை மாதைப் பணிகுவாம். (க)

பராபரம்.

நாதாந்த சோதி நாநிலத்தில் நவிலுதற்குப்
போதாந்த வேதமது புந்திதனிற் பூரித்தாங்கே
வேதாந்த விந்துவுடன் வித்தைபெறக் கூடிநின்று
பாதார விந்தத்தில் பணிபுரியும் பரங்காப்பே. (உ)

நூல்.

ஞான வெட்டி நவிலாயிரத் தைந்நூறும்
ஆனநவ ரெத்தினமும் அறிவரோ — தானுமிது
பஞ்ச ரெத்தினத்தில் பகர்ந்திடவே சூட்சமங்கள்
நெஞ் சறிவிப் பதுவும் நேர். (௩)

---

* இவர் திருக்குறள் வகுத்தவரன்று என்பதை முன்னுரையிற்காண்க

வேறு.

ஓடி ஓடி உலகங்கள் சுற்றிய
பேடிகட்காகுமோ பேசரும் சித்தியும்
வாடி வாடி வருந்தினல் வாய்க்குமோ
தேடிநின்ற திருவிளக் காடலே. (௪)

வேறு.

செம்பொ னிருபதமலரில் திகழ்பெறவே ஒளிசெய்ஞான
அம்பிகையின் அருளுற்ருர் அடைவார்கள் அநந்தயோகம்
இன்பமுடன் இந்நூலை இகழ்ந்தார்க்குக் கிட்டாதென்றே
நம்பினர்க் காதாரமாக நானவின்று விட்டேனே. (௫)

வேறு.

விந்துவிட்டால் நாதமது கிட்டாதென்றே
வேறுபல விதமாகச் சொன்னுர்சித்தர்
சிந்தைதனில் கற்பமுண்ணக் கலங்குகின்ருர்
தெளிவாகக் கூருத குற்றத்தாலே
நொந்துகெட்டார் ஞாலமதில் மாந்தர்கோடி
நுட்பமது இன்னதென் றறியவில்லை
சிந்தைதனில் பெண்மயக்கம் கொண்டாலன்றே
சிதறிப்போம் காயமுடன் யோகசித்தி. (௬)

யோகசித்தி யாவதற்கு உலகத்துள்ளே
உத்தமனு யிருப்பார்க்கு அருளுண்டாகும்
மோகமுடன் மெய்ந்நாறும் யோனிக்குள்ளே
மூழ்கினவர்க் காவதுதான் நரகமாகும்
வாகுடனே காயமது யிருக்கவென்ருல்
வரையாகக் கற்பமதை யுண்ணவேண்டும்
வேகமுடன் வாலையவள் அருளும்வேண்டும்
வீணன உலகமதை மறக்கவேண்டும். (௭)

வேண்டுமென்ற உலகமதை மறந்துமேதான்
மெய்யான சற்குருவை நாடிநின்று
தூண்டுகின்ற சிந்தைதனை யுள்ளடக்கித்
தொடுகுறியில் சூக்ஷமத்தைக் கண்டறிந்து

தாண்டுகின்ற வகங்காரந் தனைக்கடிந்து
தற்பரமாம் *சுழுத்திதன்னில் சுகித்திருக்க
ஆண்டுமினி யேதுபிழை அறிந்தபேர்க்கு
ஆகாசகற்பமது தானே எய்தும். (அ)

எய்துவதற் கானதொரு மார்க்கந் தன்னை
இழிவெனவே நினைப்பார்க்குக் கற்பமில்லை
வைதவற்கு வகையதுவும் கிட்டாதென்று
வழங்கினர் ஞானப்பா லுண்டவர்க்குக்
கைதவமாய்க் கிடைக்குமருட் கடாக்ஷத்தாலே
கண்மூடி மெஞ்ஞானந் தன்னுக்குள்ளே
செய்தவமாய் செய்பவர்க்குக் கற்பமுண்டு
சிலைபோலே அசைவற்றால் சித்தியாமே. (௯)

சித்தியென்றால் வாசியது நிலைக்கவேண்டும்
சிகாரத்திற் கும்பித்து இருத்தவேண்டும்
பத்தியுடன் யிருகலையு மாறவேண்டும்
பந்தடித்த தனைப்போலப் பார்க்கவேண்டும்
சத்தியவள் வீடுதனைக் காணவேண்டும்
* சரியான சுழிமுனையை அறியவேண்டும்
நித்தியமு மதன்வழியே செல்லவேண்டும்
நீடித்து நிரந்தரமாய் நிற்கத்தானே. (௰)

தானாக முளைத்ததொரு சோதிகாணத்
தட்டாத முக்கோண வீட்டுக்குள்ளே
மானாகக்குதித்தோட வழியைக் கண்டால்
மதிரவியு மதற்குள்ளே ஒடுங்கிப்போகும்
ஊனான காயமதை உறுதியாக்கி
உற்றதொரு இருமூன்று தலமுந்தாண்டித்
தேனான கற்பமதை யுண்டுநாளுந்
தெளிவுற்றால் இல்லையினிப் பிறப்பிறப்பே. (௧௧)

---

* சுழுத்தி - நனவிற்சுழுத்தி என்க. † மேல்வாசல் - ஊசி வழி.

வேறு.

பிறப்பிறப்பற்றுப் பிர்மானந்த போகத்தில்
பேர்பெற் றிருக்க மகாமூலி
நிறப்பழுதற்ற மயமாய் மலைமேலோங்கி
நிச்சயமாய் நிலைத்திருக்கும் உண்மையாகத்
துறப்பதற்கு முற்றதுணை தன்னைக்கண்டு
தொடர்ந்துசென்றால் தூரமில்லை துணிவுற்றார்க்கு
இறப்பதற்று இன்பமுடனிருக்க வென்றால்
இனிதான ஏகவஸ்து அறிவாய்நீயே. (௧௨)

வேறு.

அறிவிற்கிடந்து ததும்பி வழிந்து
அந்தரத் தோங்கி அடர்ந்து படர்ந்து
நெறியிற் செறிந்த நிலையாளர்கட்கு
நிதியதுவாகும் நெடுமுடி ஜோதி
குறியிற்கண்டு குணம்விட்டுக் கும்பித்துக்
கொடுவரையுச்சிப் பச்சை மரத்தின்
பொறியிற்கிடக்கும் புதையலைக் கண்டார்
போக்கில்லைகாயம் நிலைத்தலு மாகுமே. (௧௩)

வேறு.

குன்றத்தில் ஏறியுங் கூத்ததனைக் கண்டாலும்
குன்றத்தில் இல்லைக் கூறியதே - மன்றத்தின்
ஓடிட்டிருக்கும் வெள்ளை யொள்விரை மலர்தோற்றும்
காடிட்டிருக்கு மதைக் காண். (௧௪)

ஒட்டத் திருக்கும் ஒண்முடியைக் காணார்க்கு
எட்டிப் பறிக்க இயலாதே- பொட்டல்
நிலத்திலே பூத்திருக்கும நிலைமைதனை யாரறிவார்
தலத்து நீரதுபோலே தான். (௧௫)

நற்கடுக்காய் வன்னிநிறம் நானிலத்தில் தர்னெடுத்துப்
பற்கடுக்காய்த் தானுண்டாற் பாலிக்கும் – சொற்கடுக்காய்
தோற்றாது போகிக்குத் தூயவர்க்கே கைகூடும்
மாற்றான் மாமூலி மருந்து. (௧௬)

அரிதரிது கற்பற்திற் காதிகரு நெல்லி
துரிதமுட னதனைத் தூசகற்றி-இருமுறையாய்த்
தானுண்டால் ஆறுதலம் தானகத் தோற்றுவிக்கும்
வானுண்டால் மழை யுண்டுமா. (கஎ)

கோலத்திற் காயத்தைக் கொண்டிருத்த வல்லார்கள்
மூலப் புளியருந்த முந்திடுவார்-ஞாலத்தில்
அன்னையவள் காரத்தடி மடியில் தான்வளரும்
சொர்ண மதைக் கண்டார் சுகம். (கஅ)

வேறு.

காரம் கண்டார்க்குக் கனகமும் சித்திக்கும்
சாரம் கண்டார்க்குச் சண்டனு மிங்கில்லை
காரமொடு சாரம் கைவிட்டா லுலகத்தில்
சீரதுகெட்டுத் திசை மாறிப் போவாரே. (கசு)

இடைகலை பின்கலை இருக்கும் சுழிமுனை
நடுகலை யென்றிடும் நாதவிந் ததிகாரம்
தொடுகலை பனிரெண்டின் தொகைநாலு குறைந்திட்டால்
முடுகிடும் காரம் சாரம் மொழிந்தேனே. (உ0)

ஆடும் சரக்குகள் ஆறுரு பத்துநான்கும்
ஓடும் காரசாரக் குருவதனைக் கண்டார்க்கு
நாடும் யோகமும் நானிலத் தினுடல் சித்தி
ஓடுமி தன்பெருமை யோகிகள் தங்கட்க்கே (உக)

வேறு.

அண்டமென்றும் அவனியிலே பலர்
அங்குமிங்கு மலைந்து தயங்கினர்
பிண்டமென்று முயிர்தனைக் கொன்றுதாம்
பேதையாகி நரகத்தி லாழ்ந்தினர்
துண்டமிட்டுத் துலைக்குந் தரும்பொருள்
சொல்லரிய பேரண்டமு மாகுமோ
கண்ட கண்டபடி வெளிகாண்கிலார்
கருத்தறிந்து கலப்பர்கள் ஞானியே (உஉ)

ஆதியான வென்னன்னையின் அண்டத்தில்
    ஆனவைம்பத் தோரக்ஷரத் தோடுசேர்
சோதியான சுருதி முடியது
    சொல்வொண்ணாத சுத்தச் சுடரொளி
*சாதிமதமொடு சமயத்திற் சண்டைசெய்
    தன்மையர்கட்கது தானது கிட்டுமோ
ஓதிநூல்களின் நுட்பந் தானறிவரோ
    உண்மையிலண்ட முனக்குள்ளு மாகுமே. (உ௩)

நாதமென்பது மண்டமதென் றுமே
    நானிலந்தனி லாருரை செப்பினர்
பேதம்பேதமென் றேயுணர் பேதைகள்
    பேசுவதற் கெளிதாகுமோ அண்டமும்
போதமதுதரு மென்னப் புகன்றவர்
    புத்தியிற்சென்று புலப்படு மாதலால்
வெதமறைமுடி யண்டமும் நாதமே
    மேலுமிகமதி பிண்டமும் விந்துவே. (உ௪)

வேறு.

அகிலத்தில் அண்டபிண்டம் அதுவாகு நாதவிந்து
சகலத்தி னுக்குமது தானதி – புகலும்
அண்டபிண்ட நாதவிந்து ஆகுங் காரசாரம்
கண்ட வர்களே யோகிகள். (உ௫)

வேறு.

உப்பைவிட்டு உலகத்து வாதிகள்
    ஓடிநூல்தனைப் பொய்யென் றிகழ்வர்கள்
அப்பை உப்பதில்விட்டு அகற்றுவார்
    ஆசையென்னும் பொய்க்கைப்பும் விலகிடக்
கைப்பையோட்டிக் கவின்பெறச் செய்ததால்
    கண்டுகொண்டார் கனகமாம் வேதைதான்
சொற்படிப்பின் தொகுத்திட்ட நூன்மறை
    தோற்றுமோ அப்புமுப்பு மறிந்திடே. (உ௬)

---

* சாதிமதம் - மெய்த்தகுலங் கல்வியொடு வேடமெல்லாம் ஓடவிட்ட சித்தர். என்றார் தாயமானார்.

சிவயோகமுத்தி சித்திக்கச் செய்தார்
பதினெண் சித்தர்கள் முப்புவின்பாகம்
பவயோகமது கண்டால் பலிக்காது
பாழாகும் ஞானமுட லழிந்துபோகும்
தவயோக முற்று ரவிமதிசுழிமுனை
தன்னை நாடோறு முணர்ந்து
விவகார மற்றஞானிக்கு வாய்க்கும்
வீணருக் காகா தாண்டே. (உஎ)

வெட்டிஞான மாயிரத் தைந்நூறில்
விரித்துமே உரைத்திட்டதோர் கல்லுப்பு
கட்டியாகவே காணும் கடற்குள்ளே
கதிரவன் றன்கருணை விதத்தினால்
கெட்டியான கல்லுப்பது கட்டினால்
கேவலம்மினி யில்லையிப் பூவினில்
அட்டியேதினி முப்பு முடிந்திடும்
அம்மைவாலை யருளினா லாண்டையே. (உஅ)

வேறு.

மங்கையர் மகுடமன்னர் மதித்திடு மந்தமுத்தும்
பொங்கிடுஞ் சிப்பியாக அகரநீர் நடுவேயாழி
முங்கியே எடுக்கும்போது முத்தினும் ஜோதியென்னக்
கங்கையிற் கிட்டும்கிட்டும் அதீதகல்லுப் பிதாண்டே. (உகூ)

வேறு.

பஞ்ச ரெத்தினத்திற் பகர்ந்திட்ட சூக்ஷமம்
சஞ்சல மகற்றிடும் தனிவழி காட்டிடும்
கஞ்சனில்லை வேதை கல்லுப்பறிந்த வர்க்குப்
பஞ்சுபோல் நவலோகநீறும் பார்தனில் குறியிதே. (௩௰)

வேறு.

மூலமா மறுறியுப் பதுரெண்டு
முடித்திடுவார் முப்புச் சுண்ணமும்
ஆலகால விஷம் போலவே
அறுபத்து நான்கையும் நீற்றிடும்

வாலைமாது காத தீக்ஷையால்
　　மாசுநீங்கிப் பரம மாகிடும்
கோலமாங் குருகடாக்ஷமும் பெறக்
　　கூடிடு மிந்தச் சுன்னமே. (௩௧)

வேறு.

செக மெங்கும் சீவசெந்துகட் காதாரம்
உக மெங்குங் கறியுப்பென் றறிகிலார்
இக மெங்கும் எரிவாரியிலு முண்டு
சுகந் தரும் சொரூப மீதாண்டையே. (௩௨)

வேறு.

பானமென்றும் அமுறியென்றும் பாரில்சித்தர் செப்பிய
ஞானமா மதுவுமென்ற நாட்டமும் நற்காடியே
ஊனமான உடலைநீட்ட வுபாயமான மாதநீர்
பானையிற் கிடந்துசீறிப் படிந்திருக்கு மாண்டையே (௩௩)

வேறு.

புத்திமானறிவன் பூநீரின்உப்பு பூதலத்திலா றறிவார்கடான்
சித்திமுத்தி வைராக்கியம் தேர்ந்திடில் உடன்கிட்டிடும்
சத்தியுமை சடலத்திதழ்தனில் சதுர்க்கோண வட்டமாகவே
வித்தியாசமறவேகிடைக்குமது விண்டிட்டேனதுதெரிந்திடே.

விந்தமுரி வேகமேயறிந்து செயவேணும் குருபலனதுவே
இந்திரனுப்பு இதுவெனவே இகத்திலே யினியறிவாரார்
சுந்திரச் சொரூபஉப்பது தோற்றுமே சிவயோகிக்கே
இந்தஉப்பி னுலும்முப்பது இகத்திலே சித்திஆண்டையே. ()

வேறு.

துதிபெருகும் புவிதனிலே சுகா தீதமான
கதிபெறவும் கனிவுடனே பாரைஉப்புக் காண்பரோ
மதிநீரினடி தனிலே வதிக்துறையு முப்பு
அதிசயமீ தாரறிவர் அகத்திய னருளாலே. (௩௬)

வாயுவுடன் வன்னிகூடி வையகத்து நீரில்
தாயுந்தந்தை யாகச்சேர்ந்த வாறுபோற் சனிக்கும்
ஆயும்போது பாரையுப்பு ஆனதித ளாலே
மாயுமேசரக்கு எல்லாம் மகிதலத்தி னுப்பே. (கஎ)

வேறு.

சித்தராலும் காண்கிலாத தேவவுப்புஉவர்சத்திதன்
வித்துங்கூடிச் சாரையுப்பு மேவின விரண் டாச்சுது
சுத்தநீர் சலக்காடியால் தூய்மையாமது சுண்ணமே
இத்தரையி லிந்நூலைப்போல் யாருரை செய்வாராண்டே. ()

தீக்ஷைநீர்தனை யாரறிவார்காண் தீம்புனலது சாகரக்
காக்ஷிநீரதுகாடியே யிதைக கண்டயாவரும் விண்டிலார்
ஆக்ஷியாகவே மறைத்ததாலிந்த அம்புவியிலநேகர்கள்
தாக்ஷியாகக் கைவிட்டனர் தன்மையாக விந்நூன்முறை. (கக)

மாதுநாத மெனச்சிறந்தது மங்கை மார்தினக்கூடியே
நீதியாகவே கூட்டுவாரிது நேர்மைகண் டுணர்வாரிலே
சேதியேதெரியாத தாலிதிற் றேர்ந்தவர்புவிமீதிலே
ஆதியாகம தன்னையாள் அண்ட நீர தறிந்திடே. (சஶ)

வாசிபோலவும் உன்னுள்ளேயிடைபின்கலையெனவாய்மையால்
ஊசிநீரது ஓடுமேயினி உய்த்துணர்ந்திடு வீட்டிலே
கூசிடாமலே தினந்தினம் கொண்டு உண்டிடக்காயமே
நாசமாயழியாது நாதநீர் நவிலுறும் சுத்தக் கெங்கையே (சக)

சுத்த கெங்கைமாதுநாதம் சுயம்ப்ரகாச சோதிரூபம்
சித்தியாகித்தெளிந்ததாமிது தீக்ஷைநீரென்றுரைப்பாரகடாம்
சத்தி வாலையென் அன்னையாள் சடமூன்கருவானதால்
சுத்தி புத்தியுந் தொடத்தகும் தோஷமில்லை கேளாண்டையே

மறைத்ததிசுத்தகெங்கை தீக்ஷைநீர்மாதுநாதமமுரிகள்ளுதான்
நிறைத்தது கருங்குருவை கொண்டுமது நெல்லினுமிநீக்கியே
கறைத்துநற்பருவ வன்னியிட்டுமே காய்ச்சியேவிடுசோடசம்
இறைத்த காடியது ஏகமே சிவநீரென்று குருஉதினர். (சங)

அச்சலநீர் சுத்தசல மெனப்புகல்வார் அறிவினுல்
மெச்சுமென் குருவகத்தியர் சொன்ன மேன்மையால்
இச்சையாகவே தீக்ஷை செய்துமே இயற்றினேன்
அச்சமேது மில்லாமலே ஆனமுப் பூவின் சுண்ணமே. (சச)

கும்பமுனி யருளினுல் கூறினேன் ஞானவெட்டி
அம்புவியி லுள்ளோர்க்கா வறைந்தேன் எண்ணூர்சுருக்கி
நம்பினபேருக்காக நவின்ற பஞ்சரெத்தின நூல்
வம்பில்லை பிசகுமில்லை வழியது சுருக்கமாண்டே. (சரு)

வேறு.

காடி விட்டுக் கடைச் சரக்குகளை
நாடி விட்டுப் புடமிட நன்மையாம்
கூடிக் கெட்டுக் குடிகெடும் வாதிகள்
வாடி நட்டமிட்டு நலிவார்களே. (சசா)

ஆறு திங்கள் அறுசுவைக் காடிதான்
நீறிடும் நவலோகத்தை நீற்றிடும்
வீறுயர் பெறும் மேனி பொன்னுகிடும்
கூறு கெட்டவர் கொண்டிடார் உண்மையே. (சஎ)

வேறு.

கங்குல் விடியாமே கதிபெறவும் காத்திருந்து
பொங்கியதைத் தானெடுப்பார் பூதலத்தில் - தங்குமது
மாசியிலும் சித்திரையும் மன்னு பங்குனிதனிலும்
மாசறு பூநீரை மதித்து. (சஅ)

உவர்சாரம் என்றே ஓதிவரும் பூநீரை
எவர்க்காயும் தோற்றுது இவ்வுலகில் — சவர்க்காரம்
கண்டாரேகண்டார் கலிவிலக வண்ணுரே
அண் டாருக் காகா தது. (சகூ)

வேறு.

ஆதிப் பூநீரும் அத்துடன் கல்லுப்பும்
பாதிப் பாலைப் பனியுப்பும் சுத்தநீர்
வேதிப் பாருக்கு மேதினியி லிம்மூன்றும்
பாதிக் காதகற் பாதைகா ணண்டையே. (ருய)

வேறு

சோமன் விந்துநீர் பூமி நாத மெனச்
சொல்லிய புளி சுண்ணநீர்
தாமலேந்து தவியா விதந் தனக்குத்
தன்மையான நிறம் வெண்மையே
கோமகன் தொழுமகத் தீசன்வர்க்கமெனில்
குடிசை கட்டியு மெடுத்திடும்
க்ஷேம மாகுமினித் தீமை ஓடிவிடும்
* தீக்ஷை யாகவு மிதித் திடே. (ருக)

செகமாய்கை யது தீர்ந்திடா விடிலே
செய்வதேது நல் யோகமும்
வெகுமாய்கை மனம் யோனியாசை தனில்
வெம்பியே கீழிழுத்திடும்
சுகமாகமனம் அலையாதிருக்கச்
சொல்லினர் பதினெண் சித்தர்தாம்
அகமாய்கை தனை நீங்கினல் வரும்
ஆத்ம ஞானப் பூசீரதே. (ருஉ)

வெள்ளையான நில வுப்பிதற்கு நிகர்
வேறுஎது இது மேதினிக்
கள்ளமே யகலக் காட்டினர் சுத்தக்
காக்ஷியாகவே மதியினல்
துள்ளு மம்புவியில் தோன்றியே யெழும்பும்
தூய்மையான தோ ருப்பதைச்
சள்ளையே யறவும் கைப்பு நீக்கியே
சந்திப் பார்கடா மாண்டையே. (ருங)

சித்தமொடு புத்தி யகங்காரம் போமே
சிற்றறி விலாது மனந்தன்னை நோக்கி
இத்தரையில் உய்த்த இடர் களுக்காக
இசைந்திடாமலு மசையா மலுமே

* தீட்சையாக - பத்திமுறையாக.

முத்திமோன வைராக்யந் தன்னிலே
    முச்சுடர்க் குறி வைத்துமே
நத்தியே யிருந்தானுடன் வரும்
    நாயன் சொல் திருவருளுமே. (ருச)

இச்சை யென்ன இகபர மிரண்டிலும்
    இதமாய் மனதை வைத்தால்
உச்சிதமான உலக ஆசையது
    உற்பவமா யிருக்கையினுல்
அச்சமேது இரண்டுமற்ற
    ஆனந்தம பரி பூரணமே
பக்ஷமேவிப் பதிந்திருந்தால் வரும்
    பாக்கியமீ தாண்டையே. (ருரு

சந்திர புஷ்கரணி தீர்த்தமும்
    சலியாத பானமமுரி கள்ளுதான்
சுந்திர மாகவும் பிண்டத்தில்
    தோன்றுமே கண்டத்தானமே
சிந்தையாலறி சிவராஜ யோகமாம்
    சித்விலாச நற் சாதனே
புந்தியோடு புரிந்ததால் சுத்தப்
    புனித னுகவும் வாழலாம். (ருசு)

வேறு.

முப்பு முப்பென்று முன்னமே செப்பிய
வைப்பு இப்புவிமீ தறிவார்களோ
அப்பு முப்புவும் ஒன்றென் றுணர்வரேல்
கைப்பு முப்புக் கசடற முப்புவே. (ருஎ)

கண்டு கொண்டு களர் நிலமீதினில்
பண்டு நின்றபடி யந்தத் தாயினை
மொண்டு வந்து முழுவதும் காய்ச்சினுல்
விண்ட உப்பும் வெடியுப்பு மானதே. (ருஅ)

வெடிஉப்போடு விகசித வாலைக்கல்
பொடிசெய்தே தினம் போட்டிடு மூசிநீர்
வடிவதாகவே வன்னியை மூட்டுமே
படியதாகநீ காய்ச்சிப் பணிந்திடே. (௬௯)

ஊசிநீர் என்றும் ஓதிடும் சுத்தநீர்
காசினிதனில் காடியென்றே தினம்
யோசியாமலேழ் உலகங்கள் சுற்றினல்
கூசிடாது குடிகெடு வார்களே. (௭௰)

உப்பு வென்றதை உதரிநீர் விட்டிடில்
தப்புமோ சடலந் தரியாதுகாண்
செப்புமார்க்கந் தெளிவுறத் தேர்கிலார்
இப்புவிப்புரி வாளடியி னியக்கத்தால். (௭௧)

வேறு.

போற்றும் புவிக்ஷாரதம் பொங்கும் கடலுப்பும்
ஊற்றுநீர் பாறையுப்பும் உட்கூட்டித்-தேற்றமாய்
* கைப்பாகந் தானறிந்து காரணத்தாற் செய்தக்கால்
மெய்ப் பாக முப்பா குமே. (௭௨)

வேறு.

இடைகலை பின்கலை எதிர்சுழி முனைதனில்
தொடுகலைநெறிதனைச் சொற்குரு வருளினல்
படுகலை யிதன்பயன் பாக்கிய சாலிகள்
திடகலை யெனத்தினந் தேர்ந்து மிருப்பரே. (௭௩)

வேறு.

முப்புச்சுண்ணம் முடித்தார்க்கு ஆயிசுமுடிவுமில்லை
இப்புவிப் பாசமில்லை இகலோகசாதக மிதுவுமாகத்
தப்பிடாது தனியாஞ் சொரூப சுயஞ்சோதி யிதுகண்டார்
செப்பிடார்கள்யோகபாகமும் செய்பாகமுமாண்டையே. (௭௪)

---

* கைபாகமென்பது - சந்தநோக்கிக் கைப்பாகம் என வந்தது.

வேறு.

குருமுனி யருளினல் கொண்டே ஞன்
    மூப்புவும் கொடுமை நீங்கத்
திருமுனி சொன்ன மார்க்கம்
    திகைப்பில்லை திசைஎட்டும் காட்டிடும
கருவினியேது மூப்புவின் கைவல்ய
    மநுபோகம் விட்டால்
கருமமோடுமே கருணகர ஞான
    காரணன் கிருபையே. (௬௫)

வேறு.

பொழியுமே ரவிமதி பூதலந்தனிற் புணர்ந்தநீரால்
அழியுமோ சடலம் அதையறிந்து தினமுண்டால்
பழியுமேது படர்பவமோடிக் கடல் புக்கிடும்பாரிது
இழிவினோர்கட்கிது கைகூடாது எண்ணூறைந் நூறே. (௬௬)

எண்ணூறைந்நூறு முலகதனில் யோகிக்கே எய்தும்
பொய்ந்நூல் என்று தள்ளினல் சாவுவரும் உண்மையே
முன்னூலா மென்னூல் மூவைந்நூறும் முழுதறிந்தார்க்குப்
பின்னூலா மின்னூல் பிசகில்லை தப்பாதாண்டே. (௬௭)

கதிரொளியால் ஆனதொரு விந்து நாதம்காரமீறிப்
பதிதனிலே மதிவிந்துவுடன் கூடிப் பிள்ளையாக
உதித்திடும் அதின் சூக்ஷமம் உய்த்துணர்ந்தால்
விதியேது வினையேது மெஞ்ஞானி தானண்டே. (௬௮)

சுக்கிலஞ் சுரோணித மென்று சுருதிகளரைந்திடும்
கக்கிடும்எண்ணெய் கழட்டறியாப்பதர்களொன்றுகூடி
மக்கிடும் மங்கையர் ஊன்தேடி மதியழிந்துபோனர்
எக்கலிட்ட நதிபோல் இவர்வாழ்வு இற்றதினலாண்டே. (௬௯)

இப்படியாகவும் கண்டவர் இகமதிலே வெகுவாயில்லை
சொற்படி கேட்டுச்சுட்டுச்சுட்டுச் சுருதியை இகழ்ந்துநிற்பார்
செப்பிடு வித்தையீதாச்சு செகதலமயக்க மிதனலல்லோ
கைப்பதுநீக்கிக் கசடதுபோக்கிக் கனிந்துநில்லே. (௭௰)

நெருப்பாறு என்றுமே நெறியாய்ச்சொன்ன நூல்களுக்கு
விருப்போடு உறையுணர்ந்து விண்ணிற்கப்பால் ஊசலாடும்
அருப்போடுமயிர்ப்பாலம் அதனைத்தாண்டிஅகண்டத்துள்ளே
பொருப்பாரு மதியமுதம் புசித்தார்க்கன்றே காயசித்தி.(எக)

வேறு.

மதியமுதம் என்று பலர் மறைப்பாய்ச்
சொன்னார் மனிதற்காக
மதியமுதம் மதியற்றார் வண்ணனைக்
கேட்டறிந்தால் கிட்டிப் போகும்
பொதிசுமர்த கழுதைபோல் பூரணத்தை
யறியாமல் அலைந்தாலந்தோ
விதிவிட்டுப் போமோ மேனோக்கிக்
கும்பிக்கத் தெரியா தாண்டே. (எ௨)

வேறு.

வாசியென்றும் வழலையென்றும்கெங்கையென்றும் வன்னியென்
ஊசியென்ற உதகமென்றும் உவரென்றும் பூநீரென்றும் [றும்
தேசியென்றும் காரமென்றும் செயநீரும் சாரமென்றும்
பேசிப்பேசிச்செத்தாருலகோர் பேதிக்கவகையறியாதாண்டே

வேறு.

தன்னையறிந்தவர்க்குத் தானன்றே வானத்துள்
அன்னையவள் வந்து ஆதரித்து-முன்னைப்
பவமோட்டிப்பாலூட்டிப் பக்குவமாய் மேற்கூட்டிச்
சிவநிலையைச் சேர்ப்பாள் சிறந்து. (எச)

பிண்டத்தின் மேற்குப் பிரிதிவு தான்கிழக்கு
அண்டத்தில் அடிமுடி யென்றருச்சிப்பார் - விண்டுமுள்ளே
காணுச்சுழி முனையைக் கண்டார்க்குப் பிண்டத்தில்
மாணு *மண்டலிக்கும் மருந்து. (எரு)

*மண்டலிக்கும் - சூழ்ந்துகொள்ளும்.

வேறு.

பூத்தவுவர்க் களத்தில் — ஆண்டே
பூரண மோங்கி நிற்கும்
ஆத்தாள் தனையறியா — தாண்டே
அறிவு கெட்டு மாண்டாரே.

மாசுமரு வறியா — ளாண்டே
மக்கட் பிறப் பறியாள்
ஆசை விடுத்த வர்க்கு — ஆண்டே
அன்பாய் உபசரிப் பாள்.

ஊற்றைச் சடலமிது — ஆண்டே
ஓடோடப் பார்க்கிறது
நாற்ற மெடுத்தவர்க்கு — ஆண்டே
ஞாயம் பிரக்குமது.

காத்தை அடைத்த கப்பல் — ஆண்டே
கறை காண மாட்டாமலே
பார்த்த பெரு வெளியில் — ஆண்டே
பாய் மரந்தான் முறிய.

தாயை மகன்மறந்து — ஆண்டே
தாரத்திலே கிடந்தால்
மாயும்வகை பதின்மர் — ஆண்டே
மாயை மயக்கத்தினால்.

காயத்தின் பொக்கி ஷத்தை — ஆண்டே
காண வகை யறியார்
வாயைத் திறந்த பிள்ளை — ஆண்டே
வர்மம் தெரிந்ததுவே.

எண்சா ணுயரமது — ஆண்டே
ஏறவகையு மில்லை
பெண்சாதி ஆசையல்லோ — ஆண்டே
பின்னுக் கிழுக்கு திங்கே.

வேறு.

நட்டகம்ப மீதிலே நாட்டியங்கள் செய்குவார்
வட்டமிட்ட வாசியை *வழியதாய்த் தெரிந்திடில்
எட்டும் ரெண்டும் இன்னதென்று ஏகமாய்த் தெரிந்திடும்
அட்டியில்லை யெங்களகத் தீசனாணை உண்மையே. (எஎ)

உண்மை யென்றஅக்ஷரம் ஓங்கிநின்ற குண்டலி
பெண்மை யென்றடிபணிந்து பேணிமேலு மேற்றினல்
தண்மையான யோகமுக்கால் தானும்வந்து வாய்த்திடும்
வெண்மையான உவர்நிலத்து உப்பறிந்து மேவிடே (எஅ)

பஞ்சபூத மொன்றுசேர்ந்து பார்தனிற் படிந்துமே
மஞ்சுலாவு வாசியோக வாழ்வினிற்கு ளாதியாய்
மிஞ்சியே படர்ந்தமூலி வேதையிற்கு மேகுமே
வஞ்சமும் மனறப்புமில்லை வழலையின்றன் போக்கிதே. ( )

போக்கினைத் தெரிந்து மூவர்பூத்த மண்ணிலத்திலே
நோக்கிடவே நீலவர்ணம் நட்பமீது வெண்மையை
நீக்கியே எடுத்திடில் நிச்சயம் கைகூடிடும்
† மூக்கியம் நிலவளத்தை முன்புநீ அறிந்திடே. (அ0)

அறிந்தநீல உப்பதும் ஆண்டையே பூநீரது
சிறந்தநீல உப்பைநீக்கிச் செய்யவீண் பாடாகுமே
உறைந்த பஞ்சவர்ணமாம் உப்பதில் விளைந்தது
நிறைந்தநீல உப்பதென்று நிகழ்த்தினேன் கேளாண்டையே

ஆண்டையேநீ யந்தவுப்பு அறிந்துமே எடுத்திடில்
தாண்டுவாய் பகிரண்டமெல்லாம் தஞ்சமென்று முந்தனை
வேண்டிச்சிவ யோகியோடு விஞ்சையரும் மேவுவார்
‡ காண்டிவம் போலிந்தவுப்புக் கைதனில் மறைந்திடே. ()

---

* வழியதாய் - சற்குரு மூலமாக.
† முக்கியம் என்பது மூக்கியமாக நீண்டது.
‡ காண்டிவம் - வில்.

உப்புடனு மானைக்கல்லை ஓதியாறு திங்களாய்
வைப்பறிந்து வைத்தகாடி வானநீரில் சுத்தியாம்
செப்பிய வீரைந்துதீக்ஷை சீருடன் முடித்திடில்
கைப்புநின்ற கசிவுநீங்கிக் காரசார மானதே. (அங)

காரசார மானவுப்பே கருதிமுன்னம் சாற்றிய
பாரஞான வெட்டிதன்னில் பகர்ந்தனம் நல்முப்புவென்று
தேற சொற் பதத்தைக்கண்ட தீக்ஷையின் பெருமையால்
பாரில்முப்புவை முடித்துப் பார்த்தனர் சிவயோகரே (அச)

வேறு.

மூலப்புளிச்சுன்னம் முப்புவென்று மொழிந்தோம்
மூவுலகில் யிதன்பெருமை யாரறிவார்
ஞாலத்தினில் நீலவுப்பின்நன்மை நிலவளம்கண்டு
நாடியே நாதவிந்து கூட்டிக்
கோலத்துடன் * வெட்டிசொன்ன குறிப்புணர்ந்து
கூறிய முப்புச் சுண்ணமாக்கி
சாலத்திடம்பெறச் சடலத்தில் தினமுண்டால்
சாற்றிய சாவுதானேது ஆண்டே. (அரு)

பூமிநாதமெனும் பூநீரதுதான் புகலும்நீலநிறம்
புனித முடனதைச் சாடிநீரதில்
சாமிநாதகுரு பரனருளால் அதைத்தான்கலக்கிச்
சாமமூன்று வைத்துத்தெளி விறுத்துக்
காமிவாலையருள் விந்துவையும் கொண்டுதாக்கிக்
கடிதினிற் கூட்டிடு †கெங்கையால்
நேமமாகவே பூநீருடன்சேர்த்துச் சமாதிவைத்து
நேரதாகவே எடுத்திடு மாண்டையே. (அசு)

* வெட்டி - ஞானவெட்டி

†கெங்கை - நாதநீர். அதுஉப்பின் கசிவைமாற்றும் வலுவுள்ளது - இதனை கங்கைநதியாடினுல் வினைபோமென்று காசினியோ ருரைத்தமொழி கேட்டிலயோ என்று கூறினுர் அகத்தீசர்.

விந்துநாதமது காரசாரப்பெருமையா லொன்றுகூடி
விகசிதம்செய் முப்புவாய் முடிந்ததிகாண்
சந்திரனொளியாலே கடலினுப்பது நாதமே
தாரணியி லதினடியில்தோற்றும் சிவவிந்துவும்
முந்திக்கொண்ட முறைப்படிக்கு நாதவிந்தும்
முற்றிலும் சுத்தகெங்கையால் சுண்ணம்
இங்கிதன்சூக்ஷமமறிவார் ஞானவெட்டி மூவைந்நூறதில்
ஏகவஸ்து அதை ஆரறிவாராண்டே. (அஎ)

வேறு.

ஏகமென்ற முப்புவிற்கு எழிலானசுத்தசலம் இதனால்தீக்ஷை
யூகமென்ற குருவருளால் யோகிகட்கே யிதெய்துமானலிது
ஆகுமென்றுசொன்னேன் ஆசையால் ஆடியோடி மாய்தலின்றி
போகமென்றமயக்கம்நீக்கிப் பூரித்துக்கும்பித்து ரேசியே [யே

வேறு.

அப்புவுடன் வன்னியும் ஆனதோர் காற்றுமே
இப்புவியில் ஏகமாய் இருந்திட — ஓப்பியதோர்
ஆதி வழலை ஆகுமே யீதறியும்
சேதியிந் நூலினற் செய். (அகூ)

பூதங்கள் ஐந்தும் புலனைந்தும் ஒன்ருக
ஏதங்கமின்றி எரி போல் — ஆதங்கம்
நீங்குமொரு வாரிதியாய் நேர்மை யுடனேயிருக்க
ஈங்குஇனி வறுமை என். (கூ0)

சாகர நீரைச் சடுதியிற் ருனறிந்து
பாகமதா யுப்பைப் பண்படுத்திச் — சாகசமாய்த்
தீக்ஷதச பத்தும் தீவிரமாய் நீமுடித்துக்
காக்ஷி வழியிலே காண். (கூக)

சுத்தப் பெருவழியாய்த் தோற்றும் துரியாதீத
வித்தைக் கிலக்காய் மெய்யினுக்குள் — எத்தைக்
கொண்டால் குவலயத்தில் கூத்தன் வாரானென்று
விண்டார்கள் ஞானிகளின் மேல். (கூஉ

காயத்திற் கன்னம் கனமாய்ப் பிரதானம்
ஞாயத்திற் கிதுவும் கனினமே — ஆயத்தில்
திங்கள் இருமூன்றில் சேதுமாய்ச் சுத்தசலம்
பொங்கும் வழியதனைப் போற்று. (கூங)

வேறு.

அடிமுடியிரண்டும்போக ஆதாரம் நடுவிருக்கும்
ஆகமத்தைத் தான்மறந்து ஆதியிலே
கொடுமுடியென்றுமனம் கொண்டுமே சித்தர்கள்
கூறியதோர் நான்மறைப் பதனுற்றுமே
நெடுமுடி வாலாம்பிகை நீலியவள்பாதம்
நிலையாக மறந்துபல போக்குமுற்றார்
படுமுடிபாதாளமூலியது பரந்து பாருலகில்
பதிந்திருக்கும் சூக்ஷமத்தை யாரறிவாராண்டே (கூச)

அறிந்தவரேசித்தர்முதல் விஞ்சையர் யோகிகள்
அந்தரர் வித்யாதரர் அவர்கள்ஆனூர்
செறிந்துமணற் பாங்குதனில் செகசோதிநீலமாம்
செனித்ததோ ரானைக்கல் லதனலன்றோ
நிறைந்ததோர்பூமிநாத வழலையென்று பூத்திருக்கும்
நிலைதனிலே மெய்மறந்து வீணதாகக்
குறைந்துமேகெட்டார்கள் குவலயத்தில் குண்டலியாள்
குறியறியாச் சண்டாள ராண்டே. (கூரு)

நகாரமதேநாயகியாள் நிலைபெற்ற வீடதாகும்
நானிலத்தில் அதன்மேலே நவின்றிட்ட
மகாரமே அவளூசல் ஆடும்வாசல் அதற்கப்பால்
வதிந்ததொரு மணிபூரகம் சிகாரமாச்சு
வகாரமேவழலையாச்சு மணிநடந் தான்புரியும்
வர்ணமா மண்டபமு மதுவேயாச்சு
யகாரமேமுப்புவின் அடைவுமாச்சு அரிமாலீசன்
அம்மூவர் அதற்கப்பால் ஏகமாண்டே. (கூசு)

வேறு.

அண்டத்தில் முப்புவாய் முடித்து அறிவுடனே
பிண்டத்திற் கொண்டால் பிலக்குமே வாசியது
மண்டலத்தி லிதன்மாக்ஷி யறிந்த மானிடர்க்கு
எண்டிசையும் கிருகிரென்று நடுங்கு மென்ருண்டே. (கஎ)

சுண்ணநீரது பின்னமில்லை சுருக்கான வழியது
மண்ணிலே யோகசித்தியோடு வாதவைத்தியஞ் சித்தியாம்
கண்ணிலே மைபோட்ட கசடருக்குக் கிடைக்காது
விண்ணிலே யிருந்து விளையாடு மாகாசமாண்டே. (கஅ)

வேறு.

விந்துநாத மென்றுசொன்ன மேதினிப் புறட்டெலாம்
வந்தவிதமேது இரண்டு வாறதாக வாய்க்குமே
அந்தநாதமே அறிந்தால் விந்துவேறு யில்லையே
இந்தவாதமே மறைத்த பூட்டறியு மாண்டையே. (கக)

விந்துவோடு நாதங்கூடி விளைந்துமே யிருக்கையில்
நொந்துமேவி வேறதாக நோக்கிஞல் கிடைக்குமோ.
சந்திரன் கலையினல் சனித்தநாதம் விந்துவாம்
அந்தகன் போல்சுற்றினல் அகப்படுவ தில்லையே. (௨)

ஏகவஸ்த்து என்றுமே நாம்இனியும் ஞானவெட்டியில்
பாகமாகச் செப்பிய பனுவலை மறந்துமே
நாகம்போலச் சீரியே நானிலத்தில் சுற்றினல்
ஆகுமோநன் முப்புமுறை ஆண்டே முடியாததே. (௨க)

வேறு.

உலகதனிலே உப்பும் புளியுமதைக்
கைவிட்டால் உடலதழியு மென்று
உச்சிதமாகக் காரசாரமதை நாடியே
உணவினிற் பெருக்க ஊட்டி
இலகு மானிடர்க்கிது ஏற்றதென்றுமே
ஏந்திழை மார்கள் சமைப்பார்
இதனையறியாமலே மதிகெட்டுப் போனவர்கள்
இகம்தனிலும் கோடா கோடி

அலகைபோல் புவிதனிலே சுற்றியே சரக்குகளை
அடுப்பிட்டு வன்னி மூட்டி
அவித்தவர்கள் எத்தனைபேர் அறைவதார் அவர்சிறுமை
அநந்தஉடல் நீத்து மாண்டார்
கலகமலர் பொருதுமதன் கணைக்கிலக் கியமானார்
கதியற்று வீணி லாழ்ந்தார்
கருதுகுண்டலி யன்னை கருணை பெற்றார்களே
கற்ப தேகிக ளாண்டையே. (௩௨)

வேறு.

நாற்சதுரக் குழிவெட்டி நல்லஇருள் தனைநீக்கி
நடுமதி பூர்ண நிலவிலே
ஆச்சரிய மெண்சாண் அளவு குழியதுசெய்து
அடுக் கடுக்காய் மிதித்தே
பூச்சதுர மதுநின்று பூத்த நாதமது
பொங்கிவரு மஞ்சு வர்ணம்
நீச்சலறி யாதவர் நிலைதவறி மாண்டனர்கள்
நேர்மையறி யாமலாண்டே. (௩௩)

பாய்ச்சலது நாலையது பார்த்தால் பசுவாகப்
பாலித் திருக்கு மடங்கி
மூச்சதுவே வாசிநுனி முன்பின் பிறழாது
முனைநடுவில் தாரை போல
வீச்செனவே ஓங்காரச் சங்கொலி நாதமூட்டும்
வித்தகர் நிட்டை தனிலே
ஏச்சுமிலை அகத்தீசர் அருளினால் பாடினேன்
அறிவாளிகட் கெய்து மாண்டே. (௩௪)

வேறு.

உவர்சாரமது சலமுவர்நீர் உலகினில் சத்தசாகரநீர்
நவச்சாரமென்று பலரேங்கினர் நாதநீர் வாரிதிநீர்காண்
தவச்சாரல் மலைநாடுவான்முகில் தண்ணெனக் குளிர்ந்த
உவப்பேது இதுபோல உண்மை யைந்நூற்றிலாண்டே. (௩௫)

வானொடு முகிலும்கூடி வன்னியின் பெருமையாலே
கானொடு காற்றினுப்பண் கட்டியே விந்துமாச்சு
மானெடுங் கண்ணிவாலை மதியமுதினை யருந்தித்
தேனொடுங் காயசித்தித் திடமான வுடலமாண்டே. (௱௬)

பார்த்தார் பரிதியொடு மதிமயங்கிப் பரவிப்பூத்துக்
காத்தால் கண்களிற்படும் காடதில் குடிசைகட்டி
* வேர்த்தார்க் கன்றோ விதிதொலைந் தறிவுமேவும்
ஆத்தாள் அம்பிகை யோகியானவர்க் கருளுமிதே. (௱௭)

வேறு.

நச்ச னிருத்தன் நாயகன் கண்டமே
இச்ச கந்தனி லின்னதென் றறிவரோ
பச்சை மேனிப் பகவதி யானவள்
மெச்சு மருளினல் மேவித் தெரிவரே. (௱௮)

ஆலகால விஷமமுரி அதுதான் பானமும்
சீலமாக அதன்நஞ்சு நீக்கியே தெளிவதாய்
காலமீதி லனுதினம் காலைமாலைநீ உண்டிடில்
ஓலமிட்டு மறலியோடு மோடுமீ திண்மையே. (௱௯)

வேறு.

சுத்த கெங்கைச் சுகாதீதச் சுருதிகள்
மெத்த மெத்த விதங்கள் விளம்பிடும்
நித்தம் நமதில்லில் நிலவிய நீரெனச்
சித்தர் செப்பும் மறைப்பது ஆண்மையே. (௱௰)

வேறு.

அந்திசந்தி அமுரிமூலப் புளிஉண்டு
அட்டாங்க யோக நியமமும்
உந்திமூலச் சுழியறிந்து கும்பித்து
ஓங்கி ஏகவஸ்து தன்னில்

---

* வேர்த்தார் - கஷ்டப் பட்டவர்.

சுந்திரக்கனல் மண்டையோடதனில் தாக்கிட
சுடர்த் தாரம தாகவே.
முந்திநின்ற வர்க்கன்றே முத்திசித்திக்கும்
மோக்ஷ வழி யாண்டே. (௱கக)

வேறு.

அன்றுரைத்த ஞானவெட்டி மூவைந்நூறும் அகத்திலோதி
நன்றெனப் பின்புகலு மெண்ணூறும் ஆராய்ந்து
மன்றுளாடும் வாலாம்பிகை பாதம்பூசித்துத் தெளிந்து
கன்றுபோல் கைதேர்ந்தெடுப் பார்காண் ஐந்நூற்றே. (௱கஉ)

குளகமாகவும் பாடியவெந்நூலெலாம் இலக்கணக்குறிப்பாளர்
அளகமாகவும் காண்பர்காண் அஞ்சனக்கண்போற்கற்றறிவார்
தளகமாகவும் தள்ளாடிக் கண்மூடித் தவறிதைச்சேர்வார்
புளகமாகும் புலவோர்க்கிது குறிப்புணர்ந்தால் புண்ணியமே.

கன்னியபிராமி யருள்கடைக் கணேக்கம் கருத்திலுண்டு
பின்னமின்றி யிந்நூலைந்நூறும் பிரித்துணர்ந்து தேர்ந்து
வன்னியொடு கால்மீறவும் வதனமாதர் தமைநீக்கியே
உன்னினர்க்கிது வாய்த்திடும்ஒண்முத்திசித்தி யீதாண்டையே

வேறு.

சூதவிந்து கன்னிநாத கெந்திசுத்த சலத்திறல்
வாதம்வந்து பலிதமாகு வண்ணத் தீக்ஷையால்
பேதமேது பிசகொன்று மில்லையினிப் பேசவே
ஆதிவிந்து அமுரிநாத மென்றதும் அநாதியே. (௱கரு)

வேறு.

சூதமெனும் விந்துவதன் சூக்ஷமத்தைத் தானறிந்து
நாதமுடன் தான்கூட்டி நானிலத்தில் — மாதருளால்
வாதமுடன் வைத்தியமும் வாசிமுதல் வான்குளிகை
நீதிபெறவே பெருகும் நேர். (௱கசு)

வேறு.

ரசசூதவிந்து மூலிபானமதால் நவின்றஎண் சித்திகூடும்
பிசகாதுயிது அறுபத்திநாலும் பெருமித மாகவேநீறும்
அசையாத நாதம்அத னோடுவிந்து அமுரியிட்டு
வசையோடச்செய்ய வாய்க்குமே காயசித்தி யாண்டே (௱கஎ)

வேறு.

விந்துவுடன் நாதமது மேவியேநற் கெங்கையொடு
சுந்தர * காசசமாதியில் தோன்றிவரும் — அந்தவுப்பு
முப்புவென்றே யறிவார் மூதலத்திலே தெளிந்தோர்
அப்பு முப்பு மொன்றானதால். (௱கஅ)

அலைகடல் மேவியே ஆனதுகாண் சாகரம்
விலையற்ற மாணிக்கம் வேறேது — கலைகற்று
ஆய்ந்த சிவயோகி அன்பாலதன் பெருமை
தோய்ந்துணர்வா னிச்சை துறந்து. (௱கக)

வேறு.

மங்கையர்க் கணிகலம் வாரிதிவாழ் கிளிஞ்சியதில்
தங்கியமுத்து வாணிகர் தராதலந்தனி லெடுப்பார்
பொங்கியகடலில் விளையும் நுரையே பூதலந்தன்னில்
சங்கையிலாத கல்லுப்பிதை யாரறிவார் தன்மையமே. ( )

மேவும்கல்லுப்பதனை விந்தையாய் விரவி யெடுத்துத்
† தாவுதனையறிந்து தன்மையாய் நாதமுடன் கூட்டி
ஓய்விலாமல் சுத்தசலம் விட்டுத்திரிநாள் உய்த்தெடுக்க
ஏய்வுமேது யிதுசமாதி இருநில முப்புவாண்டையே. ( )

வேறு.

முப்புச் சுண்ணம் முடிந்தவர்கட் கன்றோ
இப்புவிச் சரக் கெல்லாம் இரங்கிடும்
தப்பிலாத சடல உப்பதை யறிந்து
சொற் பிரகாரம் சுருதி காணுமரோ. (௱உ௨)

---

* காசம் - பிரகாசம். † தாவு - வழி.

வேறு.

அம்பிகை பாதத்தடிமலர் அநுதினம் பூரணமாய்
நம்பிக்கும் பித்தேரேசிக்க நாடுமோவினை நாட்டினில்
வெம்பி வாடி வீணிலுழைத்திடும் வேதியர்க்குச்
*செம்பினூறல் செகதலத் தோடுமோ சிறிதாண்டே.(௱௨௫)

வேறு.

உன்னில் ஒடுங்கும் உதகநீர் தன்னையுநீ
இன்னிலத்தில் கண்டால் எய்துமே-பன்னியதோர்
காயத்தில் சட்டை கருத்திலது தான்தள்ளித்
தேயத்தில் உருதிசெயம் தேர். (௱௨௬)

வேறு.

செகமதில்சித்தர் சொன்னஇறப்பது மனிதர்கள் ஏமாந்து
இகமதில் கோடாகோடி இட்டமதாய் சரக்கதனைநீற்று
வகைபெற வழியறியாது மயங்கினர் வழலைதனையறிந்து
சுகமுறத்துறைதனைக்கண்டார் துரிசற்றார்க்கிது தானுண்டே.

வாய்த்ததோர் வழலைதன்னை வன்னியில் சலம்விட்டுக் காய்ச்சி
மாய்த்திட மறுபிரவி அதீதசுத்தநீரில் மதிப்பெய்தும்
காய்த்திடாமூலி கபாலவழலை கருத்தி லுணர்ந்துகொண்டு
தேய்த்ததனை வாங்கிக் கற்பமோராண்டு தேறச்சித்திக்குமே

ஏறுமீரெட்டு என்றுமே இறுமாந்து கும்பித்து
மாறுதலறியாது வாய்ப்பது குடல்போய் † வலித்துச்
சிறியகுறியால் சூலைபோல் வாட்டுமது தேர்கிலார்
ஆறுவிதகற்பம் அற்பமோ யிதுதான் ஆண்டையே.(௱௨௭)

---

* தன்தேகம் ஊறல் அற்றால் தாம்பூரம் ஊறலறும். என்றபழமொழி சுத்ததேகிகட்கா மென்க. இங்ஙனஞ் சுத்தாசுத்த முணராமல் பிறப்பினால் சாதி யுயர்வென்பார் சொல்லுக்குப் பொருளில்லை யென்க· இக்கருத்தின் படியே இராமலிங்க சுவாமிகளும், நரையரண மூப்பறியா நல்லவுடம்பினரே நற்குலத்தாரென வறிமின்; என்றுகூறுவாராயினர்.

† குருவருளால் கும்பித்தால் மாற்றவகை யுறைப்பர்.

வாமப்பால்என்று மறைத்துவைத்தார் வாயாற் சுத்தகெங்கை
நாமத்தால்சொல்லாது நவின்றூரதன் மகுத்திவ மாரறிவார்
காமத்தால்சடலம்வெந்து கதிமாறிக் கருத்த கசடர்தாம்
சேமத்தால்வாழ உதகநீர்சித்திக்கும் சமாதி வைப்பதாலே

வேறு.

காமத்தினுல் காயமதழிந்த கசடர் கடாம்
* ஏமத்தினுல் ஏதுகாண்பர்காண் நாதமெனும்
ஓம்த்தினுல் உதகம் பொங்கியே ஊசிநீராம்
நாமத்தினுல் வழங்கும் நாரியர் கைப்பாகமீதே. (௱உ௯)

பத்துவயது கௌரி பகர்வாலாம்பிகை மூலி
சித்தர்மோக்ஷ யோகசிவநிலை வதியும்நீலி
பித்தர்கள் பாலர்போலப் பிதற்றியே ஊர்திரிந்தால்
எத்ததுகாண் கிலார்கள் எய்திய பத்துத்தீக்ஷை. (௱௩௰)

முக்கோணவட்டம் முதிராப் பருவம் முளைத்தெழுந்த
இக்காய நட்ட நடுவிருக்கும் எழிற்றுயம்மாள்
விக்காமலேறி விளையாடஓதும் வேதபாகமோர்ந்த
அக்கால மன்றோ அடைவார்கள் அட்டசித்தி. (௱௩௧)

வேறு.

அமுத மென்னும் அச்சலம் நீரதும்
திமிர்த மிட்டுமுள் தேகத்திற் றேங்கிடும்
உமிழும் நீரதென் றுலுணர் வார்களோ
குமிழி நீரது போலக் குறிப்பினுல். (௱௩௨)

வேறு.

வீரமாம் வெள்ளைக் கல்லுப்பறிந்து விரைவதாகச்
சாரமீதென்று சமுசய மற்றுச் சலிப்பற்றுக்
காரமென்ற நாதநீர் கலக்கியே தெளிவிறுத்து
வாரிநீரதுவான விபரமிது வழுத்துவார்க ளாண்டே. (௱௩௩)

---

* ஏமம் - பொன்.

வேறு.

இந்த விந்தினை யாரறிவார்கள் காண்
மந்த மாருத மானதும் வன்னியும்
சொந்த மாகச் சுருக்கினில் கூடியே
வந்த உப்பது முப்புவென் றோதிடே. (௱௩௪)

வேறு.

எண்ணத் தொலையாது ஏரிநீர் மேவியபேர்
பண்ணத் தொலையாத பாதகர்தாம் — விண்ணதிலே
தாமொடுங்கித் தாரையாய்த் தவத்தோருக் காய்வீழும்
வானுதகம் வந்த திதுவாம். (௱௩௫)

பஞ்சமா பாதகத்தில் பாரினுளே வாய்மடுத்துப்
பஞ்சைப்போல் * வண்டிலைத்து மாதர்கடம் — மிஞ்சியெழு
மாதனத்தில் வீழ்ந்தாலே வாய்க்குமோ யோகமெனும்
ஆதனத்தில் ஆவதுதான் அன்று. (௱௩௬)

வேறு.

நிலத்தினின் நேர்மையை அறிந்து நெறியதாம்
தலத்திடைத் தோன்றும் சாதகமாய் நாதமதின்
மலத்தினைப் போக்கி மாண்புடன் கொண்டவர்க்குச்
சலத்துடன் மலம்கட்டிச் சாதிக்கும் கற்பமாண்டையே ()

மலசலவாழ்வினால் மாய்ந்தனர் மண்ணினில் பலகோடி
நிலசல மிதுவென்றுணர்ந்து நிலமதில் வெடியுப்பறிந்து
கலசலமாலை காலையினு மருந்திக் கருத்திலுய்த்துச்
சலனமதற்று நிற்பார் சதாகோடிகாலம் சமாதிதனிலே. ()

வழலையின் போக்கறிந்தால் வழங்கிடும் வாதமாகும்
† நிழல்என நின்றுநானும் நீடூழிவாழ எண்ணிக்
சுழல்விழிமாதர் நோக்கில் சுற்றியே மடியும்பேய்க்கு
அழலது மூலத்தாமோ அகத்தீசனருள் தானுண்டே. (௱௩௭)

* வண்டிலைத்து - சிறுவர் மண்வீடுகட்டி விளையாடுவது.
† நிழல் - அருவவுடம்பு, அதிகைக்குட் படாதது.

வேறு.

எங்கள்குரு அகத்தீசன் இன்னருளால் நாதமது
பொங்கிவழி நிலமடைந்து பூரணத்தை நானறிந்து
கங்குலுடன் பிசகற்ற கருநிலத்தில் தான்வாழ்ந்து
எங்குமொரு சத்தியென இகமதனிற் கண்டேனே. (௱௪௰)

வேறு.

சத்திநாதமது வழலையெனச் சாற்றினார் சத்தியாவது
எத்திலாது மாதருணர்வர்க ளிவ்வையகத்தி லின்பமுடன்
முத்தியோக பூர்வமது மோனவழியறிந்து முன்பாசச்
சித்தியாகும் சிவயோகம் சிலாக்கியமீ தாண்டையே (௱௪௧)

முச்சந்தி வீதிமுனைமாராதிது மயிற்பால வாசல்முடிவற்ற
இச்சந்தி யறியசசசமதனில் இயலாது விருப்புற்றார்க்குத்
தற்சந்திர னொளிமேவிய பனியினால் நாதமுவர்சாரமாய்ப்
பொற்சந்தி யாகும்வெகு வேதைமேவும் பூவுலகிலாண்டே.

வேறு.

யோனியது நான்குவகை யோசிக்கில் தோற்றமேழ்
மானிலத்தி லித்தை மதிப்பார்யார் — வானிலத்தில்
வீழ்ந்த உதகநீர் மெய்கருக்கும் கற்பமாம்
ஆழ்ந்திதனை ஆய்ந்தார்க் கமை. (௱௪௩)

பூரித்து ரேசித்துப் பூரணமாய்க் கும்பித்து
ஏரிட்டிருக்க யார்க்கும் ஏலாது — வீரிட்ட
விந்ததனைக் கட்டறியார் மேதினியில் வீணர்கடாம்
அந்தகனுக் காளாகு வார். (௱௪௪)

வேறு.

அலைவழங்கிடும் மதஜலந்தனில் ஆதியா மகத்தீசனார்
கலைமுழங்கிட நாதநீரதில் கருதியே முன்விளக்கினார்
நிலைவிளங்கிடச் சித்தர்கள்தினம் நேர்மையாயதன் உப்பினால்
மலைவழங்கிடத் தீக்ஷைபத்துமே மதிப்பதாக முடிந்ததே.

வேறு.

சுருதியாமொழி மூத்திரம் மெனச்சொல்லும் சாகரமமுரியே
வருதியேதிதன் மார்க்கமேகண்டு வாய்மையா யுலகெய்தினால்
நிருதிமேவி யிழைக்குமே யிதன்நிட்சயம் பதினெண்சித்தர்
கருதியேசெய்த கபடுகண்டவர் காக்ஷிகூடுவ ராண்டையே.

கலசகற்சல மதுவுமூசிநீர் கரகமாமுனி யருளிய
நிலசலத்தினில் நிலைவதாகவும் நித்தமும் பலபுத்தியாய்
அலைசலந்தனை அறிவினால்தினம் அண்டிக்கொண்டிட வாகுமே
விலையிதற்கிணை யேதுபூமியில் வித்தைவாதமு யாண்டையே

வேறு.

அப்பதனை விட்டால் அட்டமா சித்தியேது
உப்புஎன்று கடல்உவறி னாற்கைக் கூடுமோ
முப்புவானது அப்புவென்று மொழிவா ருண்மையாய்ச்
செப்பினாலுமே சித்தராவரோ ஜெகதலப்புரட் டாண்டையே

பூதலத்தில் அநேகங்கோடி புண்ணியராய்ப் போவாரென்று
வாதவித்தை என்றதொரு மாய்கைதனைக் காட்டிவைத்தார்
சாதகத்திலே தெளிந்த தன்மையோரிது தான்தொடார்
பாதகத்தி லாழ்ந்தினோர் பாரிற்காண்கவு * மாகுமோ.(௱௪௯)

சாத்திரத்தி லநேகம்பேர் சாதித்தார் தயவதாகப்
பாத்திரத்தில் கோடிபேர் பண்டையினில் சித்தராக
ஆத்திரத்திற் சொன்னநூல் ஆதியில் மொழிந்தார்காண்
காத்திரத்திற் காயசித்தி கற்பமிதி லாண்டையே. (௱௫௰)

கற்பமென்று மேமொழிந்த காக்ஷியையார் காண்குவார்
அற்பமென்று இதனைவிட்டு அமர்ந்தபேர்கட் காகுமோ
சொற்பதங்கள் சூக்ஷியாகச் சோதித் தறியாமலே
பற்பலதுறை ஏகினார்கள் பண்பினாலுல காண்டையே. ()

---

* குவித்திருக்கவேணுமடா மலைபோல் தங்கம்கொண்ட பொண்டாட்டி யர்க்கோ கூத்தியர்க்கோ, தவத்தை யனுசரிப்பார்க்குச் சொன்னவித்தை, யென்றார்பிரரும்

வேறு.

வழலைதொட்டு வாதம்கண்டு வானமாமலை யேரியே
உழலுமாந்தர்க ளுய்த்துமே உணர்வார்களோ கனசோதியை
அழலுமேவிய குண்டலியருள் அன்பினால்வரும் சாகரக்
கழலிதைத்தெரியாதுகாக்ஷியில் கண்டுமெலிவர்கள் கசடரே

சோதித் துரியாதீதச் சுடரொளியில் தோன்றிவரும்
ஆதிப் பராபரையை அம்புவியில் ஆரறிவார்
சீதத்திரு வைச்சடலத் திகைப்பற்றுருக் கிதுவே
காதற்றவூசி கடைத்தெருவில் விலையானதே. (௱௫௩)

ஆனைக்கல் என்று ஆதியுப்பைத் தானறிந்து
ஊனக் கைப்பதனை உருதியாய் போக்குவித்து
மானக்கிருபை வாய்க்க மதுவுண்ட வண்டதுபோல்
தானுந் திருந்தினர்க்குச் சடலமது வீழாதாண்டே. (௱௫௪)

வாதகுரு விந்துநீர் வாய்க்குமது நாதநீர்
பாதையிது நீரறியப் பாகம்வர மோனவிழிப்
போதமுற வந்துதிக்கும் போகம்விட வேயழியும்
நீதமிதைத் தானறிந்து நிட்டையுங் கைகூடிடவே. (௱௫௫)

வேறு

விந்துநாத மென்றவிரு மேம்படு நற்பாகமே
இந்தவேதை தானுணர எற்குமே — சந்ததமும்
யோகமெனும் சுழிமுனையில் யுக்தியுடன் சாதிக்கத்
தேகமது திடமுள்ளதே. (௱௫௬)

தேடித் திரிவார்க்குச் *சேவியிலே சித்தியது
நாடி யிருக்குமதை நாடுசிலார் — பாடிக்
கறக்கும்வகை யறியாக் காதகர்க்குப் பாலேது
இறக்கும் துறை யறியாரே. (௱௫௭)

ஆதியென்ற நாதமது அண்டமதிற் றனேது
சோதியென்று தொல்லுலகி லாரறிவார் — வாதிகள்தாம்
கடைச்சரக்கைத் தான்சுட்டுக் காய்ந்தார்க ளல்லால்
இடைச்சரக்கால் ஆவதுதான் இன்று. (௱௫௮)

* சேவி - குருசேவை அதாவது குருவுக்குச்செய்யும் தொண்டுகள்.

சுத்தச் சுகாதீதச் சோதிச் சுடருப்பு
இத்தலத்தில் விந்துவென ஏகமாய்ச் — சித்தர்களும்
வைத்தார் அதன்பெருமை வையகத்திலே யறிந்தால்
இத்தரணி ஞானி இவர். (௱௫௯)

வேறு.

அண்டபிண்டம் ரெண்டுமாகி ஆனதோர் கல்லுப்பினால்
விண்டநாத மேலெழும்பி விளைந்தது உவர்க்காடதில்
தெண்டனிட்டுத் தூபதீப பூசையிட்டுத் தெளிவதாய்க்
கொண்டபேர்க்குக்கூற்றுமில்லை கூறினேன்மெய்யாண்டையே

நாதமென்ற உப்பினோடு நவின்றவிந்து கூடியே
ஆதிகார சாரத்தாலே அமைந்ததே சொல்முப்புவும்
நீதியாக யிந்தவந்த ரங்கங்கண்டு நேர்த்தியாய்ச்
சாதனைசெய் வாருமாகில் சண்டனேது ஆண்டையே(௱௬௧)

சாகரத்திலே தெளிந்த சலந்தனில் கலக்கியே
வாகுரத் தெளிவிறுத்து வைத்தநீரும் காடியாம்
ஏகமான இந்தவஸ்து இனிமையாக நீயறிந்து
பாகம்செய்யச் சுண்ணமாச்சு பார்த்திடு மதீதமே (௱௬௨)

உலகமீதில் முப்புவின் பெருமையால் உணர்வினோர்
கலகமாதின் வாழ்வைநீக்கிக் காஷிமேவி மௌனமாய்
இலகுவாலை கன்னியின்பம் ஏறியண்ட மீதினில்
மலையுமித்தை யறிவரோகாண் மகத்துவ மீதாண்டையே.()

மன்னுமுவர்க் காடதனில் வைத்திருக்கும் உப்பதை
இன்னிலத்தி லேயறிந்து ஏகியே எடுத்திடில்
சொர்னமாகும் சுத்தமாகும் ஜோதியுப்பின் பாகமாம்
இன்னமும் ஏமாற்றமேன் இந்தநூல்போ லில்லையே (௱௬௪)

வேறு.

சந்திரனொளி மேவிச் சாகர நீருப்பாச்சு
சுந்திர காயமாச்சு ஜோதிமுடி துலங்கலாச்சு
இந்திர னுப்பறிந்து இதுதனை முடிக்கவல்லார்
சந்ததம் யோகநிட்டை சாதித்து மிருப்பாராண்டே.(௱௬௫)

வேறு.

மாதுநாதமே காரசார மகிமையால்
மகிதலத்தி லுவரது போக்கும்
தீதுராதுமே அணுகாது திகழ்பெரு
முதகநீர் சுத்தஜலப் பெருமை
ஓதுமிந் நூலைந்நூறில் உணர்த்தினேன்
உலகின ருய்யும் வண்ணம்
சாதநீரதே சுத்தஜலம் சந்தேகமில்லை
சாஸ்த்திரங் கள்கூறிய தாண்டே. (௩௬௬)

ஓங்காரநாதம் பிரணவ மூலம்
உதித்த மதியமுதம் உந்திக்கமலம்
தாங்காத சத்திதன்னருட் சுயம்பிரகாசம்
சவிஸ்த்தார மீதாச்சுது காண்
பாங்கான மாது வாலாம்பிகை
*செகஜ்ஜோதி பாதாரவிந்த சூக்ஷமம்
நாங்காணறிந்த தில்லைநடனப் பிரபல்யம்
நாடும தீதமெ ஞண்டே. (௩௬௭)

விந்துநாத மிவ்விரண்டும் விஷம்போக்கும்
வெகு கடினமிதை யாரறிவர்
தந்தையோடு தாய்மருவிய தன்மையைப்போல்
தாரணியில் செனித்த தாலே
அந்தமேது ஆதியேது அந்தவிந்துநாதம்
அடிமுடி நடுவு மின்றியே
வந்தவாறு வகை சொல்வேன்
வழலையுட கூத்திறு மாண்டே. (௩௬௮)

கற்பூரமொடு தீபம்கலந்த பாவனைபோல்
காணும்ந்த விந்து நாதம்
பொற்பாருஞ் சுத்தஜலம் புகலவாகாசமாச்சு
புதுமை வெகு அற்புதம்

---

* செகம் - உலகம்: சோதி - ஒளி அதாவது அகண்டவொளி.

கற்பான நல்மாது சுரோணிதநீரிற்
கண்ட கலசல மிதற்கு
ஒப்பான திப்புவி யிலேது
உலுத்தர் களுக்காகா தறிந்திடே. (௱௬௯)

சித்தாதி யோகி முனிவர்க்கிது
சிலாக்கியம் சிறப்புற் றிருப்பர்காண்
இத்தாதி மார்க்கமறிந்தார் வாழ்ந்தார்
எனையோ ரிறந்து பிறப்பரே
முத்தாதி சிப்பிமுனைத் தேடுப்பர்
முடிவில் முழுகியநல் வஸ்த்துவாம்
சுத்தோத கம்வெகு துல்லியம்
சுடர்நீர் சுயம்பிரகாச மதாண்டே. (௱௭௰)

ஞாலத்தினில் செனன உயிர்பிழைக்க
நல்லருட் சத்திரவி யுதயமாய்
மூலத்தினில் கண்ட வெப்பமது
முனைவழி கபாலமேற லாச்சுதிந்தச்
சாலத்தினை யறிந்தால் சடலமுறுதியாம்
சண்டன் வெகு தூரந்தான்
பாலொத்திடு மொழிச்சி வஞ்சிவாலாம்பிகை
பாதம் பணிகு வேனே. (௱௭௧)

வேறு.

நாடோறும் நானுண்ட கற்பம்
நாட்டினி லறிவாரில்லை நாதவிந்து
தாடேறும்படிச் சங்கற்ப விகற்பந்
தாண்டி நூல்வழி தெரிந்து
காடான மார்க்கக் கசடுநீக்கிக்
கடிதினில் ககனமார்க்கம் சென்றேன்
பாடானபாடிது பகரவொணுச் சூக்ஷமம்
பரதேசி யறிவா ராண்டே. (௱௭௨)

வேறு.

வித்தில்லையென்றால் விளைவேது காண்
வீணான மூடர்களழுது புலம்பிச்
செத்துமடிந் தாரிப்பூதலத்தில் சிவராஜயோக
மறிய மாட்டார் செப்பும்
வத்துவான திதுவெனவறிந்து வத்துவாய்
வனந்திர மோடிப் பிழைப்பார்
சுத்தசை தன்யப்பெரு வெளியில்
சுலபமாய்க் குருவருளா லாண்டே. (௱எ௩)

குருவிலார் கொடுமை.

நாட்டில்விளைந்த நாலுவித சரக்குகளை
நாய்போல் விலைக்கு வாங்கி
மூட்டையிட்டு எருமுட்டையில்
வன்னியிட்டு மூண்ட அழலில் மாய்வார்
சாட்டையின்றிப் பம்பரம் சுழற்றுவார்கள்
தமக்கான குண மிதுவே
எட்டைப்படித்து இஸ்டம்போல் பிதற்றும்
இழிவானவர்க ளாண்டே. (௱எ௪)

காயமழிந்தால் உலகிற் சித்தியேது
காரியமின்றிக் காரண மில்லை
ஓயும்கர ணங்களழிந்து உன்மத்தர்போல்
வாழ்வார் உய்த்து ணர்ந்தார்
பாயும்கலையறிந்து * பட்டியிட் டடைத்துப்
பரவெளி துரிய வாழ்க்கைக்
காயும் † அறுபத்துநான்கும் அடங்கும்
அதுவு முப்பினு லாண்டே. (௱எரு)

---

* பட்டி - மாடுகள் தங்கும்இடம், இங்குவாய்வு ஒடுங்கும்இடம்,

† அறுபத்து நாலும்-கலைஞானம், அல்லது சித்திகள், அல்லது சித்தர்கள், இதனை (எட்டெட்டா மரபிலுள்ள நாதாக்கள்) என்ற வாக்காலறிக,

வேறு.

நிலவுப்பும் நீலவுப்பும் நேர்மையாக ஒன்றினால
மலவுப்பும் மாய்ந்துபோக வாய்த்ததுமவ் வுப்புமே
சலவுப்பென் றேயறிவர் சாத்திரங் கைதேர்ந்தவர்
பவளமப் போருப்புமுவ ருப்பெனப் பகர்வாரரோ. (௱எசு)

நித்தமந்த வுப்பையுண்டு நீணிலத்தி லநேகரும்
மேத்தவும் மெலிந்துபோனார் மேன்மையாகச் செப்பிய
வித்தையை யறிந்துதீக்ஷை விதியதை உணர்ந்துமே
வைத்தவுப்பு வைப்புமாச்சு வஞ்சமில்லை யாண்டையே ()

நன்மைதீமை யென்றிரண்டு ஞாயமுமிப் பூமியில்
வன்மையாக வேகலந்து வைத்தனர் மகத்துக்கள்
பன்மைபோக்கி யேநுகரப் பாதைகாட்டக் குருவருள்
இம்மையிலே கிடைக்களய்தும் நன்மையென்ற றிந்திடே. ()

அப்புஅப்பு என்றுரைத்த அரியசூத சுத்தநீர்
இப்புவிச் சரக்குகட்கு ஏமனாயி ருக்கையில்
வைப்புவைத்த வுப்புவிட்டு வல்லமைகள் பேசினால்
தப்புண்டாகும் பொய்மையில்லை சயிலநீர் குறித்திடே. ()

கோடிசூரியப் பிரபையாற் குலாவுகின்ற வானநீர்
சாடியே கரைத்திடிற் சகலதோஷம் போக்குமே
காடிநீரி தற்குப்பேர் கருத்தறிந்து செய்திடில்
ஓடிப்போவ னேமனும் உண்மையாகு மாண்டையே. (௱அ௰)

கற்றவர்கள் காடதிற் கதித்தெழுந்த உப்பிணை
நற்றவப் பயனினாலே நாளும் சுத்தசாகரம்
உற்றநீரில் சுத்திசெய்ய உருதியாச்சு காயமும்
மற்றவாறி னாலுமாவ தில்லையே யேமாற்றமே. (௱அக)

பஞ்சபூத மொன்றுகூடில் பளிங்கு போலநீதமாம்
விஞ்சையுப் பென்றேவழங்கி விளையும் பூமிநாதமே
நஞ்சதாகும் நாதநீரில் நாட்டுதோஷங் காற்றினில்
பஞ்சுபோல்பறந்துபோகும் பாட்டைசொன்னே னாண்டையே

சுத்திசெய்த உப்பினேடு சொல்லும்விந்து கூட்டியே
இத்தலத்து விந்துவுந்தான் எய்தும்சுத்தி கெங்கையால்
வைத்தநற் சமாதியில் வதிந்தஉப்புச் சுண்ணமாம்
நத்தும்புட பாகங்கண்டு நாளும்நீ எடுத்திடே. (௱அ௩)

சுண்ணமென்றகுகையில்மூடிச் சுத்திசெய்த உப்பினை
வண்ணமாகச் சிலைசெய்தவ் வாறுபோல யெருவினல்
நண்ணியே அழலிலிட நல்லமுப்புச் சுண்ணமே
எண்ணினலு மாகுமோ எளிதலவீ தாண்டையே. (௱அ௪)

வேதையென்ற மாற்றினுக்கு வெய்யநற் குருவுமாச்சு
ஆதியென்ற உப்புமாச்சு அதீதசொர்னஞ் சித்தியாச்சு
சோதிகாண வழியுமாச்சு துரிசுமே பளிங்குமாச்சு
சேதிசற் குருவருளால் செனனமில்லை யாண்டையே. (௱அ௫)

வேறு.

மதிமயங்கிக் குருவருள் வழங்கா மாந்தர்
நதிமயங்கி நாதவிந் தறியார் நாதவிந்தின்
பதிமுயங்கிப் பலநாளும் பார்த் திருப்பார்கள்
விதிமயங் கிச்சேட்டை செய்வினை யகற்றியே. (௱அ௬)

வெட்டவெளியாகு மிந்நூல் விபர மறிந்தால்
தொட்ட சரக்கெல்லாம் சுருக்கினில் வேதை
இட்டமாக வாழலாம் ஏகாந்த மாகவும்
கட்டமேது கனகமுன் கைக்ககப் பட்டாலே. (௱அ௭)

வே.று

மாற்றுயர் வாயிரம் வழிபோற் சென்முருக்குக்
கூற்றுவ னேது குறையேது குவலயத்து
மாற்றமேது மண்பெண் ணுசையேது
ஏற்றும் வகையறிந் திருந்தார்க் காண்டே. (௱அ௮)

மூச்சைப் பிடித்து முனைவழி மாற்றறியார்
பேச்சைப் பேசிப் பேடிபோல் திரிவார்
மூச்சினல் ஆவதேது முடிவுண் டாகும்
எச்சுவாராத ஞானிகட் கிழுக்கி தாமே. (௱அ௯)

வேறு.

காற்றைப் பிடித்தடைத்த கரகங்கண்மூடும் கணக்கில்வருங்
கூற்றை யறிந்து குணுநுபவச் சுழிமுனைகண்டு
ஆற்றைக் கடக்கமயிர்ப் பாலம்யா ரறிவார்
நேற்றைக் கிருந்தவ ரின்றில்லையென்பது நிச்சயமே. (கக0)

சொன்ன ஞானவெட்டிச் சுருதி கண்டும்
பொன்னை மேவுவரோ பெரியோர் பொய்பேசார்
இன்னுமிவ் வுலகில் எத்தனைபேர் ஞானியானர்
அன்னை குண்டலி அடிமலர் அவாவினலே. (ககக)

ஆத்தாளருட் சத்தி ஆயிகுமாரி கன்னியவள்
பூத்தாட்பணியக் குருவருள் புனைந்து நிற்பார்
பார்த்தால் பரமம் படித்தால் பற்றெழியும்
* காத்தாடிக் கயிறிந்தக் காயபாச மாண்டே. (ககஉ)

வேறு.

பாசக்கயிர் தெரிந்தும் பந்தமெனு மாபாசக்
கோசங்கள் தாண்டிக் குண்டலியின் தாளின்ப
நேசத்திலே கலந்து நிர்மலமாய் நிற்குமவர்
வாசற்குளன்றே வையகமும் வாய்த்த தாண்டே. (ககங)

பாகினில் தித்திப் பெனப் பண்புடனார்ந்த
சாகசத்தில் சகலரும் மாய்ந்தார் சகதலத்தில்
† யாகமுட னனேக அதிக்ரமங் களினலாமோ
யோகநெறிபற்றி நின்றார் யூகிகள்தா ;னுண்டே. (ககச)

அட்டாங்க யோகத்திற் காதாரம் அபிராமி
தொட்டாங்கு நின்ற துரியாதிதச் சுழினைதனில்
பட்டார்க்குக் காட்டும் பரமபதம் பாதகர்க்குக்
கிட்டாது கிருபையின் குருவழி கேளாண்டே. (ககரு)

---

* காத்தாடி - பட்டம் என்றும் கூறுவர். இது, காற்றில், ஆடுவது.
† யாகம் - ஆரியர்கள்செய்யும் வேள்விகள்.

வேறு.

சாதிமத சமயபேதமதிற் சண்டையிட்டுச்
சலிப்புற் றகங்கார
மாதியான வல்லலிலகப்பட்டு அலறி
அலகை போலுலவும்
நீதியேது மறியாமனுவர்க் கத்தினர்க்கு
நிலேக்காது எண்சித்தி
காதுபோன ஊசி கடைத்தெருவில்
என்செய்யும் கடினமிதாண்டே. (கக௬)

வெட்கமே துமிலாதுவெய்ய வினைதான்
வெருவிட மிரண்டுகொண்டு
பக்கமேவும் பணியினர்அரவப் படமதனில்
பாகுதே னுண்டென்று
குக்கலேப்போற் குலவிநக்கிக் குலுக்கிதிரிந்து
குடிக்கு மடையர்கள்
சொர்க்கம் மேவச்சுருதி சொல்லுமோ
சூக்ஷம விந்தினையறிந்திடே. (கக௭)

எக்கலிட்டிருக்கு மடுவுதனில் இழிவரோ
மனிதரிளைப்பாற இதனல்
கைக்ககப்படுவ தெதுவெனக் காண்கிலார்
கடிதினில் நரகதுபுக்கி
மக்கியுமிரு கண்களிற் பீளைசொரிய
மழலேபோற்குரலது தளரப்பின்பு
விக்கலிட் டிறப்பர் இதுதினமறிந்தும்
விடுபடவழிதேடு கிலாரே. (கக௮)

வேறு.

மட்டற்ற செம்பொற் சோதி
மரகதத் தொளிதிகழ் மனேன்மணி குண்டலி
பட்டப்பகற் போல்பரந்த வெளிதனில்
பராபரை நடம்புரியப் பார்த்திருந்திங்

தட்டற்ற சுகவாரிதி யழுந்திச்
சகசவாழ்வுதா னித்திய சண்டாளர்கட்குக்
குட்டிச் சுவர்மேல் குவலயத்தில்
குருவருளால் முத்தி யாண்டே. (௱௯௯)

சத்தந் தன்னொடு புலனைந்தும்
சடலமிசை ஒடுங்கிச் சதானந்த மாயிருந்து
நத்தும் துறையறிய நாடோறும்
சற்சங்கமொடு ஞானநூற் கேள்விவேண்டும்
பித்தங்கொ ண்டுதலை கிறுகிறுத்துச்
சரக்குகளைப் பேதிக்கத் திரியுமூடருக்குச்
சித்தப் பிரமைதவிர வேறில்லை
சித்தர்சொன்ன மறைப்பி தாண்டையே. (உ௱)

வீரம்பூரம் குருவண்டு நாபியும்
விதியாகவே சேர்த்தரைத் திடத்
காரம்ஏறும் கடிதான நேரமதில்
காணுமே சதுர்சா மமே
சாரமோடு சவ்வாது தன்னைச்
சமன்தனி யிடையதாகவே கூட்டிப்
பாருமே அதீத சுண்ணமே
பகர்ந்தகுரு விதறிந்திடே. (உ௱க)

வேறு.

இந்தவகை வந்தகுரு இன்னதென யாரறிவார்
விந்தையிதன் வேதைதனை விண்ணவரு மெச்சிடுவார்
தந்தையொடு தாயினுக்குத் தானிகர்ப்பரோ தரையில்
தொந்தம் பலகோடிவிதம் தோன்றிடுந் தொடுத்திடே. ()

வேறு.

விந்துவுடன் நாதமது விகசித மதாகத்
தொந்தமுற வந்தவுடல் சொந்தம் நமதாச்சு
அந்தியொடு காலையு மருந்திவர க்காயம்
சுந்திரமும் கூடிடவே சொர்னமதுமாமே. (உ௱௩)

அண்டபகி ரண்டமெலாம் ஆனவோ ருருவாய்க்
கண்டபடி யாகுமிது கனகமிதற் கீடோ
உண்டோ யிதன்பெருமை உம்பரு முரையார்
விண்டவர்கள் கண்டதில்லை மேன்மை பெறலாச்சே. (உ௱௪)

அத்திமுத லீறெறும்பு வானவுயிர் கட்கும்
சத்தியுடன் நாதமின்றிச் சாவது முண்டாச்சு
சுத்தமிகு மிந்தமுறை சொல்லவுஞ் சடலம்
சித்திபெற வுற்றவழி செய்வதறி யாண்டே. (உ௱௫)

சர்க்கரை யிருக்குமிடம் சார்ந்திடு மெறும்பு
பக்குவ மடைந்தவுடன் பக்ஷமிகச் செப்பும்
சற்குரு தமக்குவரச் சஞ்சலமு மில்லை
பொய்க்கதை படிக்குமவர் போகும்வழி நீக்கே. (உ௱௬)

திட்டமுடன் சற்குரு தமக்கு வரச்சித்தி
எட்டது கிடைத்திடும் இதற்குத் தடையில்லை
விட்டகுறை வாய்த்திட விளங்கும் பரிபாஷை
தொட்டகுறை முடிவுவந்து தோன்றுமுட னுண்டே. ()

முன்னுரைத்த ஞானவெட்டி மூவைந்து நூறும்
பின்னுறைத்த எண்ணூறும் பேணியவை பார்த்து
இன்றுரைத்த வைந்நூறில் ஏற்றபடி தோன்றும்
* என்னுறைத்த நூன்முறையில் ஏகு † மூளைத் தோர்க்கே.

அப்புவென முப்புவென ஆயியவள்பாதம்
செப்பிய வகைப்படிக்குச் சேவை புரிந்திடவே
முப்பிறப்பில் செய்தபவம் மூளவகை யேது
செப்புபுழுப் போல்மனது செப்பியழிக் தோர்க்கே. (

வீட்டினிலே நின்றிலகல் விட்டு வெளிமேவிக்
காட்டினிலே சுற்றியதால் காணும் பயன்யாது
நாட்டினிலே பாரையுப்பு நானிலத்தி லுண்டு
பூட்டகமு ணர்ந்துதினம் பொருளெடுப்ப ராண்டே. (உ௱௰)

---

* என் - என்னல் - உரைத்த - கூறிய.

† மூளைத்தோர் - குறையால் பிறந்தவர்கள்

வேறு.

தொடுகுறி சூதம்விந்து சுரோணிதக் கெந்திநாதம்
விடுகுறி மானிடர்க்கு வீண்வாத மேன்விளம்பும்
படுகுறி ரெண்டும்கூட்டிப் பக்குவம்பெற முடிப்பார்
நடுகுறி விட்டுநீங்கா நாதர்கள் நவின்றூர்பாரே (உகக)

உப்பினிற் காரசாரம் உவர்நீருமுவர் மண்ணுப்புஞ்
செப்பிய சுக்காரேடு சிலாக்கியஞ் சாரமாச்சு
ஒப்பிய நூல்களெல்லாம் ஓதிய முப்புவாச்சு
இப்பிறப் பறிவிஞேர்க்கு இதுதெளிவாச்சு தாண்டே. ()

பற்றற்று நின்றுபார்ப்பார் பரமயோகிகட் கல்லாது
உற்றுற்றுப் பார்த்தாலாமோ ஓலமிட் டழுவார்தாமே
கற்றறிந்தா லும்காணக் கசடர்கள் முப்பிறப்பில்
உற்றதோர் குறையிருந்தால் உருதியாய்ப் பலிக்குந்தானே()

விந்துடன் சத்திநாதம் மேலுவர் நீரினுப்பு
சந்துடன் முப்புவாச்சு சலிப்பில்லை மாற்றமில்லை
இந்திரர் முதலாந்தேவர் இனியுனக் கேவல்கேட்பார்
மந்திரமில்லை சொன்னேன் மகத்தான மார்க்கமாண்டே. ()

பத்தியாய்த் தசமாம்பத்துப் பலிவுள தீக்ஷைசெய்து
உத்தியால் மூன்றும்கூட்டி உறுதியாய் புடந்தான்கோழி
எத்திடச் சுண்ணமாச்சு எழிற்குரு தப்பாதாண்டே
செத்தவர் போற்றிரிந்து செகம்புரந் திருந்திடாயே. (உகரு)

வெட்டவெளிபோற் சொன்னேன் வேறில்லை நூல்களாலே
பட்டதொரு பாடுனக்குப் பலனது மென்னுலாச்சு
தொட்டதோர் சரக்குகட்குத் துரிதெம ஞேலயீதால்
இட்டமுட் சித்தியெல்லாம் என்னுலே யாச்சுதாண்டே.(உகசு)

வேறு.

முடிப்பதென்றால் யெளிதல்ல முப்புவொன்றே யிகத்தில்
பிடிப்பதற்கு நல்லாசான்பெரிது மநுபோக மொடும்
அடுப்பெறி யோகம்செய்கை அணுவளவும் தப்பலாமோ
படிப்பதில் பயனுமில்லை பக்குவம் முன்னூறுபாரே. (உகஎ)

கருதிடு மார்க்கத்தோடும் கைமுறை செய்பாகங்கள்
சுருதியோ டுக்தியனு மானமும் சொன்னேன்பண்டு
விரிதிறை யெனவும்ஞான வெட்டியா மூவைந்நூறில்
அரிதிதன் அநுபோகத்தால் ஆமிகத் தெளிவாமீதே. ()

வாலைரசம்.

மதிசூதவிந்து மறைத்தார் மாநிலத்தி லிங்கம்
பதிவானதாகு மதுபரிந் தெடுத்துத் தூள்செய்தே
விதிபோலத் தோண்டிதனில் வெல்லரிய * நாறிமூலி
அதிகாரமுடன் கூட்டி அசையாமலறிந்து கொள்ளே (உகூ)

அறிவோடு சிலைமண் ணேழும்செய்து அனலேற்றி
நெறியாகக் காடாக்கினி நிமிடமது சோருமலே
பறியாமல் வாலுகைமேல் பலமாக யேற்றியே
குறியாகச் சாமமொன்று குணமாக எறித்திடாயே. (உ௦)

எரித்திடவு மேற்றூண்டி மேலு மெழிலதாய்ப்
பரித்திடும் கண்ணைப் பளபளப்பாகப் பனிபோல்
தரித்திடும் சூதமது தப்பாது வெகுசுளுவாம்
சரித்ததைப் பேணி எடுத்திடு சாகாதாண்டே. (உக)

குறிப்பறி யாமற்சடர் கொண்டார் செயரசம்
தெறிப்பேது மாசேதிதில் தினையளவும் தோஷமேது
மறிப்பேது சுத்தியேது மார்க்கமு மினியுமேது
கறிப்பேது கவலையேது கனகமுமிது தானுண்டே. ()

தொண்டொரு சட்டியது சோதி மயமதாம்
மண்டிடத் தீயிட்டு மாட்டிவிடு தீபத்தால்
விண்டதில்லை யிந்தவழி விட்டிடு நாதத்தைலம்
கண்டதில்லை விந்துவுந்தான் களைக்காது காணிலியே.

முன்னமும் சொன்னரசம் முந்திடு யிடைக்கிடை
இன்னமும் தைலமது இனியதொரு நாதமும்
பின்னமிலா வெட்டையாம் பிசகாது குழிக்கல்லிற்
பின்னமும் நீர்விடுத்துப் பிரியமோ டரைத்திடாயே. (உச)

* நாரிமூலி - நன்னாரி,

அறைத்திடு நாற்சாமம் அணுவும்கை சளைக்காமல்
உறைத்திடு சுத்தஜலம் உருதிபடப் பின்புநான்கு
கரைத்திடு சாமந்தன்னில் கசிவது மற்றுப்போகும்
விரைத்திடு ரவியில்வைத்து வெளியேநீ எடுத்திடே. (உஉரு)

அருக்கனைப் போலநிறம் அம்புவியி லதீதவிந்து
சுருக்கமது பற்பமுறை சுருதிகளில் சொன்னதில்லை
கருக்கவழி யாச்சுமுன்னே கண்டதொரு மார்க்கமெல்லாம்
உருக்கமுடன் அகலில் உருதியாய்ச் சிலைஏழே. (உஉசா)

ஏழது சீலைசெய்து எழில்படரவியில் வைத்துப்
பாழது போகாமற்றுன் பக்குவமா யெருவும்பத்து
ஊழது ஏதுனக்கு உறுதியாய் பற்பமாச்சு
வாழ்வது வந்ததென்று வைரிபோ லிருந்திடாயே. (உஉஎ)

சூதமது பற்பமனல் தொட்டது முடியுமற்றும்
வேதையும் கோடாகோடி வெகுசுருக் கிதற்குமுப்பு
ஓதிடத் தானுமொப்போ உண்மையாய்ச் சொன்னேனிந்தப்
பாதையை உணராமற்றுன் பதர்களு மானுராண்டே.(உஉஅ)

நீலியுடரசமும் முன்சொலும் பற்பமும் கூட்டி
* வேலியுடன் நின்றரசம் விரிவுறவதையும் கூட்டிச்
சாலவும் மூவிரண்டு சாமமும் கல்லிற்பாய்ச்சிக்
கோலமா யரைத்துக்கொண்டு பின்பு † நிம்பழச் சாற்றாலே

வேறு.

சாற்றாலே ஐந்துசாமம்
    சாடிடு வெண்ணை போலே
மாற்றாதே பின்னும் கேளீர்
    மகத்தான கையான்சாறு
தூற்றோடே சேர்த்தும் பின்பு
    துகளவே ஐந்துசாமம்
வீற்றோடே அரைத்துப் போடு
    மேலும் வெண் கருவினாலே. (உஉகூ)

---

* வேலியுட நின்றரசம் - வேலிப் பருத்திச்சாறு.

† நிம்பழச்சாறு - வேம்பின் பழச்சாறு

வேறு.

சோதியின் கருவைச் சொல்லவும் எளிதுமாமோ
வாதிகளினி வாரிதுதான் வர்ணம்செகச் சோதியாமே
சாதிசம யங்களற்ற சத்தர்களிதன் பெருமை
பேதியாமலு மறிவார் பிறவாத நிருவிடமே. (உ௬௧)

சாவலின் கருவதென்று சண்டாளர் கொலேக்குள்ளானர்
ஆவலின் கருவிதென்று அறியார்கள் அவனியிற்றன்
ஓவியக் கருவிதற்கு ஊறுசுரோணித நீரென்று
பாவியர் அறியமாட்டார் பகாறு திங்கணீரே. (உ௬௨)

திங்களுமாறு சென்றால் திகைப்பில்லாக் காடிநீர்தான்.
மங்கல்வெண் கருவிரங்கு மகத்தான தாயுமாச்சு
சங்கைகள் வேண்டாமின்னும் சற்குரு வகத்தீசனர்
எங்களுக் குரைத்ததாலே இயம்பினே மிதைவிட்டேகி ()

விட்டுவெண் கருவினலே விளேந்திடச் சாமமைந்து
மட்டும்நீ அறைத்தெடுத்து வாயகன் றகலில்வைத்துக்
தட்டற ரவியில் வைத்துத் தன்மையாய் அகலால்மூடி
இட்டிடு சிலேயேழும் இன்பமாய்ப் பின்னும்கேளே (உ௬௪)

வேறு.

பின்னுமொருமுறை குக்குடம் புடமிடப்
பேசவும்தகுமோ வகல் நீக்கினல்
இன்னதென் றதன்சோதியைச் செப்பிட
யாருளா ரிப்புவிமிசைச் சூரியன்
தன்னிலு மதன்வண்ணம் கண்கூசிடும்
சற்றுமே தவறுதிது பற்பமே
என்னிலத்திலும் ஈடிதற்கே யிலே
இயம்பினே னகத்திச ரருளினல். (உ௬௫)

அந்தி காலேயுமாக வருந்திநீ
அன்பினேடு மதனே யணுகினல்
சொந்தமாகப் புசித்த்வர்க்கே தினிச்
சொல்லும் பல்வினேயோடும் புகன்றிடும்

பந்தமாகுஞ் சஞ்சித வாகாமியம்
பாரினிற் கடற்புக்கிடும் மாண்டுமே
விந்தினு லுயிருகிய குருவிது
விண்டிலாரிதைக் கண்டவ ராண்டையே. (உ௧௬)

சொல்லும் பயருடன் பச்சையரிசியும்
தூயவாவினன் பாலுமுட் கொண்டுமே
வெல்லும் மூலத்திருந்து சுகித்திட
வேணவெண் பெரும்சித்தியும் கூடிடும்
கல்லும் கனகமதாகக் கனிந்திடும்
காயமோ மலைபோல வலுத்திடும்
நல்லவமென்று நாட்டி யிருந்துமே
நம்பி யம்பிகையோகம் பயின்றிடே. (உ௧௭)

தென்பொதிகையின் மீதில் விளங்கிடும்
செந்தமிழ் முனியா மகத்தீசனர்
முன்புதானிந்த விந்துவினல் மலம்
மூன்றையும் பொடியாகவு மூதினர்
பின்பெனக் கவரோதிய மார்க்கத்தால்
பெருமையா யன்னைதன்னையும் சேவித்தேன்
நம்பினோர்க்கெந்தன் நூன்முறை யணுவதும்
நாட்டினிற் றவதருதையக் தீர்ந்திடே. (உ௧௮)

அன்றவர் செய்தநற் றவத்தாலுமே
அம்பிகை பதமாய்ந்து தெளிந்திட
நன்றெனப் பஞ்சரெத்தின மைந்துநா
ருகவும் புவிமீதினில் நாட்டினேன்
குன்றமேவிக் குகையி லிருக்கினும்
கூடுமோ குருவன்றியும் குண்டலி
என்றனீஸ்வரி யாளருள் தானுமே
இந்தநூற் குருவாகுந் தெரிந்திடே. (உ௧௯)

பூநாகச் செம்பு.

நாகமென்றது பூமியில் வாழ்ந்திடும்
நல்லவர்க் கதனேகம் கிடைத்திடும்
ஆகமென்ற நான்குமுழ வாழமே
அன்பினுலும் சிவந்த நிலந்தனில்

வாகுடன் வரகாதி வைக்கோலதில்
வைத்துமே மண்ணைமூடிட மண்டிலம்
ஆகுமேலும் பிறித்து எடுத்திட
அகப்படுமவை பாண்டத்தில் வைத்திடே (உசய)

தூயமா நருமாவின்தன் பாலினில்
சுத்தமா மரைத்தாலு மகன்றிடும்
பாயுமே பலஞ் *செம் பழத்துமே
பாலினிற் குழம்பாகக் கசிந்திடும்
மாயமா யரைத்தானு மெடுத்துமே
வன்னி யிட்டுமோர் சட்டியில்வைத்துநீ
தீயேரித்திடச் சிவந்திடுமே பினுந்
தீய்ந்துமே கருப்பாகும் கடிதினில். (உசக)

வேறு.

கொண்டொரு அகலில்கொல்லுலே யூதினல்
மண்டித்தீயிட மாசறும் செம்பதாம்
எண்டிசைதனில் ஈடிதற் கேதுகாண்
மண்டலத்தறி மகத்துவ மாகுமே. (உசஉ)

அற்பமென்றிதனை எண்ணமலே
உற்பவந்தனில் உண்மையா யோதிய
பற்பந்தன்னில் அரிசிபகிர்ந்துமே.
தற்பவங்கெடத் தாக்கிடு செம்பிலே. (உசங)

சற்குரு வகத்தீசன் தயவினல்
பொய்க்குரு வலசெம்பின் புகலறும்
மெய்க் குருவருள் விளங்குமே
பொற்குவியிது பூதலத்திலே. (உசச)

வேறு.

வானமொடு பூமிதனில் வாய்க்குமோ யிதற்குமிணை
கானமலே மீதினிலும் கனகமிதற் குயினி
ஈனமிலே வாய்த்ததுவும் ஏழெனவே நீயறிந்து
தானமும் வழங்கியே தணிவாக விருந்திடாயே. (உசரு)

* செம்பழம் - எலுமிச்சம் பழம்.

ஆதிமறை சூதமுடன் ஆகமசு ரோணிதமும்
நீதியுடன்நீறுபட நீட்டிடவும் செம்பதனில்
சோதிமிகவானதிது சொர்னம் வயதேழதுவே
வேதையும் வெகுளளிது வேணும் வழியாண்டே. (உசசு)

அண்டர்முனிவரும் காத்திருந்தார் அமுதமிதை உண்டிடவும்
கண்டவ ருரைக்கவில்லை கையழிந்து சூலைந்துபோனர்
பெண்டிரொடும் வாழ்பவர்க்குப் பேராசையால் மனது
கண்டதினைக்கவர்ந்திடவும் கருத்தறியார்க ளாண்டே.(உசஎ)

கருத்தறியாமலும் மார்க்கந் துறையறியாமலும் கசடராய்க்
குருத்தெறி யாமலும்கோப காமிகளாகவும் சூலைந்தனர்காண்
திருத்தமிகும் சூதவிந்துசிவ சத்திநாத கெந்திவாய்நீர்
அருத்தமுண ரார்அகில மிசைக்கோடி யாவராண்டே. ( )

தொட்டுவிட்டுக் கைவிட்டவர் கோடி தொல்லுலகில்
சுட்டுவிட்டுக் கைவிட்டவர் கோடி சுருக்கிலுயிர்
விட்டுவிட்டு மடிந்தவர்கோடி மாய்கையிற் குள்ளே
பட்டுவிட்டுப் பதைத்தவர் கோடிபலி யாமலாண்டே.(உசகூ)

வேறு.

கனகமென் றதனைக் கரியாக்காது
மனமது வசப்பட வழியறியவுமே
தினகரன்போல் செனிக்காம லிருக்கும்
இனமறிந்திடு மார்க்க மெடுத்திடே. (உருய)

வேறு.

முன்போற் பணிநீரதில் முனைந்துமே பற்பமதை
அன்போ டரைநீலி யவள்சாற்றுலைந்து சாமம்
மின்போல வெளுக்கும் சேயமேவுரசமும் சமனிடை
தென்பாக மத்தித் தரைத்திடு திரும்பவுமே. (உருக)

தாக்கிடு கெந்தி சமனிடைதாளக மரைதான்
தூக்கிடு கௌரி பாஷாணம் சிலைதொக்கவுமே
போக்கிடு வெள்ளையும் சமன் அரைசாம மைபோல்
ஆக்கிடுகுழிக் கல்லினில் அதைவழித் தெடுத்திடே. (உருஉ)

ஓங்கிடும் மலைகள்மேலே உயர்கம் பம்போலும்
மூங்கிலென்றும் புகல்வார் மூலமாஞ் சாம்பலுப்பு
வாங்கியொரு பாண்டத் திட்டுவகை பெறவுமே
பாங்குடன் முன்சொன்ன படியோன் றிட்டிடே. (உருங)

உப்பினை யாழும்செய்து உலர்த்தியவதையும் வைத்துத்
தப்பித மின்றிநீயும் தன்மையாய்க் காடாக்கினியால்
ஒப்பியே யாறுசாம மெரித்திட உருவுமாச்சு
இப்படியார் தான்சொல்வார் இதற்கினி உயிருண்டாக்கே. ()

வேறு.

உயிர துண்டாக்க ஓவியமாகப் பின்பு
பயிரது வேலியின் சாறது படியுமாகும்
செயலுட னதிலரைத்துச் செப்பிடும் நீலியின்சார்
அயலுறவைந்துசாம மரைத்துமே மெழுகு மாக்கே.(உருரு)

வேறு.

அரைத்திடு அந்தநீர்சுண்ட அழகாகச் சிலைசெய்
குரைத்திடப் புடமதும் குக்கிடம் குளிரவிட்டு
விரைத்திடவ் வோடுநீக்கி வெகுபதன மாகவுந்தான்
பிரித்திடு வாய்பேசாதே பிணிகடல் புக்குந்தானே. (உருசா)

பஞ்சபாஷாண பற்பமிது பாரினி லாரறிவார்
மிஞ்சிய நோய்கள்தான் மேலாகா தோடிவிடும்
அஞ்சிட வேண்டாம் அரிசியிடை கொடுத்தால்
தஞ்சமென்றுனை அரசர் தாள்பணிவா ராண்டே. (உருஎ)

குட்டமோடு ஈளை யிருமல் குடல்வாதம்
நட்டமுறு மெய்வலிப்பு நசிவு மிசிவும்போம்
துட்டமெனும் சூலை கிரந்தி தொலைந்தோடும்
* சட்டமதும் சொர்னமெனத் தான்வலுத் தேறுமே.(உருஅ)

வேறு.

மேனியது சொர்னமென வேதிகழு மண்டலம்
தானுமுண வாசியது தணியுமேல் வாங்காது
ஏனுமினி வையகத் திருந்து பலவாக
ஊன வுடலானு முயிரழிய வாண்டே. (உருகூ)

---

* சட்டம் - உடம்பு.

வேறு.

உற்பவக் கருத் தொண்ணூற் றுறினல்
பிற்பவத் திறும் பீழைக் கிடையாகும்
விற்புரு வத்திடை வேதை விசித்திரங்கோடி
அற்ப வித்தையிலே யாருமறி யாரே. (உகஸ)

வேறு.

வழலையின்ன தேன்றறியார் மாநிலமுழுதும் சுற்றினர்
அழலதில் உப்பைபிட்டு அகங்குலைந்து வெம்பினர்கள்
விழலுக் கிறைத்தநீரென வெந்துசாம்ப லாய்க்கண்டார்
மழலையாமென்றுய் மகத்துவ முணர்ந்தார்க் கதுவாகுமே. ()

கருவங்கச் சுன்னம்.

வங்கமது வழியாய் மடிந்தால் மாந்தர்க்கதுதான்
தங்கமது வாகும்துறை யார்கண்டார் தரணிதனில்
சிங்கமது ராசயோகம் செய்யும் திறமைபதனல்
பங்கமுறுது பலிதமிதன் வேதையதிகம் பார்த்திடே. ()

உலகுதனில் வங்கந்தனை ஓதினர்பெரியோர் உடலுக்காக
இலகுமதுதன்பெருமை இயம்பிடவெகுகடினம் எண்ணுவாயே
விலகுமினிச் சலனம் ஐயமில்லையப் பொன்றுமில்லை
அலகைதனைப்போல்திரிந்தா லார்செப்புவா ரறிந்திடாண்டே.

வேறு.

சுத்தியேது வங்கமிதற்குச் சுத்தசலமது
தனிற் தூய்மை யாகும்
வித்தையோ தினேன் பன்னிரண்டு
சாமம் விகசிதமதாக வைத்து
நத்தியேயுருக்கி யெருக்கன் பாலில்
நலமுடன் தோய்த்தெடுக்கச்
சித்தியாகும் இனிச்சுத்தி வேறில்லை
தெளிந் திடாண் டையே. (உகச)

வேறு.

உருக்கியேநற் சுண்ணமும் உறுதியாய்ப்
பெருக்கினற் கழஞ்சி இடைபேணியே
தருக்கின லதன்வீறு சளைத்துமே
அருக்கன் போலவு மாகுமறிந்திடே. (உகரு

கலக்க மேனிலி வங்கமும் கட்டிடும்
திலக்க மேவெட்டை யாகவும் தோன்றிடும்
நிலக்க வேகுகை தன்னினீ ரூட்டவே
வலுக்கு மேபொடியாக மடிந் திடும். (உசுசு)

மடித்துமே குகை மாறி மறுதரம்
பொடித்துமே சுத்த கெங்கையைப் போற்றியே
விடுத்துமே யொரு சாமம் வியப்புடன்
கடுத்துமே யரைப் பாய்நீ கலுவத்தே. (உசுஎ)

கலுவத்தே யொரு சாமம் கடிதினில்
அலுவல் யாதுமே அன்றி அரைத்துமே
நலுவத்தால் ரவி நாட்டத்தில் வைத்திட
உலகத் தார்க்கிது உற்ற முறையிதே. (உசுஅ)

முறைப தாய்மாது நாத முணர்ந்துநீ
நிறைவ தாகக்க மூஞ்சி நீரூட்டிடக்
குறைவ தேது குருவிதற் கானதோர்
துறையி னுலினித் திப்புற வாகுமே. (உசுகூ)

ஆகும் வங்கம் அதனை யரைத்துமே
வேகும் பரிதியாம் வெய்ய லுலர்த்தியே
வேகமாய்க் கெச புடத்தில் வெளுத்திடும்
யூகமா ரறிவார்க ளுணர்ந் திடே. (உஎ0)

உணர்ந்துமே மறுதரமும் உறுதியாய்த்
திணிந்துமே கரிசாலைச் சுருக்கிடப்
பணிந்துமே சீலைபாங்குடன் செய்திட
இணங்குமே யினிச்சேவற் புடமிடே. (உஎக)

வேறு.

குளிர்ந்ததும் பரிக்கெடுத்துக் குறிப்பதாய்
விளங்குமே கோடிசூரியன் வெம்மைபோற்
பளிங்குதா னிதற்குப் பாரில் நிகராகுமோ
உளங்குளிர்ந்திடும் உண்மை யிதாண்டையே. (உஎஉ)

வேறு.

வங்கமது தரணிதனில் செய்ய வென்றால்
வாதிகட்காகாது மகத்தான கடினமது
பங்கமடைந்தார் பலபேர் வழலை யென்றிருந்தும்
பரிபக்குவ முணராது பலிக்காமலும்
சங்கை யறுமிந்த முறை சாற்றினர் எவருமில்லை
சலுதியாய் யேக்கமது தானுமின்றித்
துங்கமுறும் வங்கமதைத் தொட்டு நோய்கள்
துலைதூர மோடிக்கடல் புக்கிவிடு மாண்டே. (உஎங)

வேறு.

காலை யொடுமாலை இருவேளை கருதியெண்ணி
வாலை குண்டலியபிராமி மலர்த்தாள் தனைப்பணிந்து
ஞாலமதில் நோயாளிகட் கீந்திடு நயமதாய்ப் பயர்தான்
ஓலமிடு நோய்கடாம் உறைத்தேன் அறியிதாண்டே. (உஎச)

ஓடிடும் சூலைக்கிரந்தி உற்றிடுமாந்த மோரெட்டும்
சாடிடும் வாய்வு விக்கல் சன்னி கக்கலொடு சூதகம்
நாடிடும் சேத்தும நோய்கள் நல்லரவெனக்கண்டு சாகரம்
தேடிடும் வங்கபற்பம் சிவபற்பமிதனை யறிந்திடே. (உஎரு)

குன்மம் வச்சிரகண்டம் கொடிய மகோதரமும்
அன்னத்துவேஷமும் அரியமேக மிருபத்தொன்றும்
பன்மையாம் காசமும குலைப்பும்பட்ர் வெள்ளைக்குட்டமும்
நன்மையாம் நாள் மூன்றருந்த நலிவுற்றிடுமே. (உஎசு)

தக்கதொரு வநுபானத் துடனருந்திடச் சண்டனில்லை
தொக்கதாம் பிணிகளோடும் துலைதூரம் துயர்கள்நீங்கும்
மிக்கவுமுண்டால் உடல் கருக்கும் மேனியுங் தங்கமது
முக்கிய மிதையறிந்து மூன்றுநாளுண்ண முனைந்திடே. ()

எடுத்திரு பணவிடை இனிமையாய்ச் சூதமேல்
தொடுத்திட ரசிதமாம் சுருக்குவெகு கவனமாய்
நடத்திட வழியறிந்தால் நாட்டினில் துக்கமில்லை
கெடுத்திடு மாசைநீக்கிக் கிருபைபெற்றிருந்திடாயே. (உஎஅ)

உள்ளிய ரசிதந்தன்னை உருக்கியே சமனெடுத்து
மெள்ளவும் பரியிலீய்ந்தால் வேதையு மெண்மாற்றுகும்
கள்ளமு மொன்றுமில்லை கடிதிது கருத்தில் கொண்டால்
சள்ளையுமில்லை சொன்னேன் சாஸ்திர நுட்பமாண்டே. ()

வேறு.

உறுதியா யகத்தீசர் உரைத்திட்ட
சுருதிபோல் முறைசொல்லவும் கூடுமோ
கருதியேபடி காத்திருந் தாலுமே
அரிது இம்முறை யாருமறிவரோ. (உஅ௰)

பொய்க்காதன் மடவார் போகத்தில்
மொய்க்கா மலும் மோனம தாகவும்
கைக்கானபடி கனகஞ்செய் துண்டுமே
மெய்க்காய சித்தி விரைந்திடே. (உஅக)

வன்னியும் வாயுவ மப்புவும் வாய்த்துமே
நன்னயம் பெற நன்மையாய்க் கூடினல்
இன்னிலந் தனில்முப்பு வென்றுச்சுதே
பின்னுமற்றும் பிறப்பகற் றும்மிதே. (உஅஉ)

யோகிகட்கிது மண்டலம் உண்டிடத்
தேகமும் பிலமாக வலுத்திடும்
ரோகியென்று யிரப்பவர்க் கீந்துமே
போகம் நீக்கிப் பொருளை யறிந்திடே. (உஅங)

சன்மமே தினிச்சஞ்சல மில்லைகாண்
கன்மமேது கடல்புக்கி யோடிடும்
இம்மையோக மறுமை யிழித்திடாத்
தன்மையே வந்துதான் சித்தியாகுமே. (உஅச)

உண்மை ஞானவெட்டி உரைத்தநூல்
திண்மை தானறிந்தே குறிகண்டிடில்
பெண்மை யேதுபிறழா துடற்குளே
அண்மையா மம்மை அருளும் விளங்குமே. (உஅரு)

வேறு.

சொல்லிய மூலியோடுந் துரிதமா யமுரிச்சுண்ணம்
வல்லமையுடனே சூதம் கழஞ்சிட வளமாயின்னும்
மெல்லவே விடுகல்லுப்புஞ் சாரமும் பதனமாக
நல்லதா முப்புவுவந்து நிற்கும் நானிலத்திலாண்டே. ()

உத்தமமாய் ஈறெட்டுச் சாமமறை இருகவும்
வித்தகமாய் மெழுகுபோல் வருமளவும் விறைவினிலே
நத்தியே விடுகெந்தித் தைலம் நயப்படப்பின்பு
சித்தியாகு மிதுரெண்டு சாமமரை திடமுடனே. (௨௮௭)

திடம்பெறவும் ரெண்டு சாமம் திரும்பவுமரை
படமரவஞ் சீறும்பார் கெந்தித்தைலப் பான்மையினல்
அடம்படவு மினிவிடு மேனிச்சார் அதுவும் நான்கே
உடன்படவும் சாமமரை உறுதியினி யாண்டையே. (௨௮௮)

தொல்லை வராமலு மரைத்துச் சுருக்கிலிடு கவசம்
அல்லலேதுயினி அருணன் முகம்படவைத்து
மெல்லவுமெடுத்துச் சில்லிட்டு மேல்மூடிச் சீலைசெய்து
வல்லமையாக மணற்கொட்டி எரித்திடே. (௨௮௯)

வேறு.

வன்னியிட்டு யெறித்திட மேலுமே
அங்கிறமும் முருக்கன் மலரது
என்ன நாளுமிலங்கு மிமையவர்
நன்னயமுட ஞடுவ ரித்தையே. (௨௯௰)

வேறு.

செந்தூரமிது செயசூத ரசகெந்தி சேர்க்கையால்
விந்தூறு முடற்குருதி விஞடிதனில் நாடிமிசை
வந்தூறும் காயம் வலுக்கும் கூற்றுவனும்
நொங்தோடுவ னித்தைநுகர்ங் திருந்தாலுமே. (௨௯௧)

ஆச்சுது ெ ங்தூர மரிதாகு மிதிற்பணவிடை
பாப்சிட ரசிதம்கனகம் பார்வேதையுஞ் சுலபம்
ஆச்சரிய மாற்றுமெட்டு அவனியில் கண்டவுடன்
கூச்சலிடு வகத்தீசர் குருவருள் வாய்த்ததென்றே. (௨௯௨)

வெண்கார வைப்பு

தரைக்குள் வெண்காரவைப்பைப் பற்றியார் சடுதியாக
உரைப்பதற் கந்தமார்க்கம் உள்ளமும் கபடமில்லை
தெரிப்படவும் காரவைப்புத் தெரியாமல் வேதையாமோ
சரிப்படாது முறைதெரிந்து சங்கையற் றிருந்திடே. ()

கல்லுப்புடன் பூநீரெண்டும் கடிதினிலொன்றதாய்
மெல்லவுளுத்தமாவுடன் மேன்மையா * மணிவித்ததும்
வல்லமை யாங்கள்ளி வளஞ்சேர் பாலுமொன்றாய்த்
தொல்லேயே யறச்சிலையதும் தொக்கவுமூட்டிடு மாண்டையே.

வைத்திடுமண்டலம் குழிவெட்டி வகையாய்ப் பாண்டம்
வைத்திடும் பூமிதனில் நாடிப்பின்னெடுக்க நவின்றிடும்
பொய்த்திடுமோ பாருமினிப் பலகைபோல் நின்றிடும்
பைத்தியருக்கோ இதுசொன்னேன் பார்தனில் சூக்ஷமிதே.

பிசகாது யிந்தமுறை பிரியமுட னறிந்தபேர்க்கு
நிசமாகும் வேதைதான் நீடியவெண்காரவைப்பால்
ரசவாத மோடுநல ராஜயோக மதுதான் சித்தி
உசவாத வீணருக்கு உதவாது யிதுதானுண்டே. (உகசு)

வேறு.

தோகை நீரினிற் சுத்தியா றுப்பதும்
ஆகுமென்று மநேகர் அறிவரோ
மேகநீரென்று வீணில் விளம்புவார்
ஏகநீரன்னே நீரது வென்றுமே. (உகஎ)

என்றுமே தசதீக்ஷை இசைந்துமே
நன்றுமே பெறநாட்டிடிற் கற்பமும்
ஒன்றுமே உலகற்கது முப்புவாம்.
சென்று பார்த்தவர் சேதியறிவர்காண். (உகஅ)

---

* மணிவித்து - சித்தாமணிக் கொட்டை.

தொந்த வேதை

வேறு.

தாளகந்தனைத் தாக்கிடு சுருக்கினிற் சட்டியில்
மாளவும் சுத்தகெங்கையை மாட்டிடு சுருக்குமே
மீளவும் தீபந்தன்னில் மெதுவதாய் விடுத்திடு
வேளையுமொரு சாமந்தன்னில் வெம்பிக் கட்டுமே. (உகூகூ)

இன்பமொடு சற்குரு இசைசந்திடில் யாவருக்கும்
அன்பினல் வேதை அத்துடன் யோகமாகு மம்புவியில்
நம்பியே காமக்குரோதலோப நாசமத மோக மாச்சரியம்
வெம்பியே விட்டால் மெய்க்குரு விளங்குமுண்மையே.(கூா)

காரமென்ற பூரமது பலந்தானென்று கண்டுமே
சாரமென்ற சுத்தஜலம் சாடிவிடுதிரி சாமமும்
வீரமுட னிரவியிலிட் டதைவழித்து வெகுபதனம்
தீரமுடன் வெண்கருவால் திரும்பியாட்டே. (கூாக)

ஆட்டியே வெண்கருவும் அதைமென்மேல் விடுவழகாய்ச்
சூட்டியே லிங்கமதைத் துரிதமாய்ச் சேர்த்தரைத்துமே
நீட்டிடு முப்புக்கழஞ்சி யிடைநிச்சயமா யகலிலிட்டுச்சீலை
ஊட்டிடுவா யேழுமுறை உறுதியாய்ப் புடமுமாண்டே. ()

குக்கிடபுட மதுகொண்டு குளிர்ந்த பின்னெடு குவலயத்தில்
மிக்கவும் இதையாரறிவார் விவேகிகளுணர்வார் வேதையாகும்
ஒக்கவும் செந்தூரம் விட்டாட்டு வெண்கரு வொல்லையில்
தக்கவும் தரமேழுபுடம் குக்கிடம் தன்மையா யாண்டே. ()

லிங்கமொடுபூரம் இரண்டெனி லிலகும் சூதஞ்
சிங்கி செந்தூரமும் தொந்தமிது செய்வது வெகுவேதை
பங்கமேது பாரினிற் பார்த்தெடு சுயம்புவாகும்
வங்கமீதினில் தாக்கிடு வன்மையாய் உலையிலே. (கூாச)

உருக்கு முகந்தனி லீந்திட உடனே கண்விட்டாடும்
தருக்கமில்லை முன்சொன்ன முப்புவிடை தான்கழஞ்சி
பெருக்கவும் நீதாக்கிடு பேதகமில்லை வங்கமும்
சுருக்கினில் ரசிதம் சோதிமயம் சுயம்பிரகாசமே. (கூாரு)

சோதிமயரசிதம் வங்கம் தொடுமுப்பு வினல்
பேதகமாகுமிது பேசரிது பெருமையா ரறிவார்
வாதிகள் கூடிமயங்கினர் வாயாறச் சொன்னேன்
நீதியுடன் ரசிதம் தன்னொடு நேர்மையிதே. (௬௱௯)

கொண்டிடுரசிதம் சமனிடை குலவியே செந்தூரம்
மண்டிடு துருத்தியில் மாட்டிடு குகையிற்றூனும்
கண்டிடு சாமந்தன்னிற் கனகம் வயதுபத்தரை
விண்டவர்யார் என்போல் வெகுசுலப மீதாண்டே. (௬௱௭)

வேறு.

இந்தப்பாகம் அறிந்தவற்கே தினி
முந்தும் பாவவினையும் முளைந்திடா
தொந்திப் பானவழுமை தொலைந்திடும்
சந்திப்பா மகத்தீசன் தயவினல். (௬௱௮)

வேறு.

கானகத்தி னுப்பதனைக் கண்டறிந்து சாரமெனும்
பானகத்தினேடு சுத்தி பாலித்தால் — ஊனகத்தில்
மாசில்லைமாற்று மருளில்லை ஈதறிந்து
ஊசரத்தைக் கண்டு உணர். (௬௱௯)

ஈரைந்து தீக்ஷை எழிலாகச் சுன்னமதின்
சாரந்தனை யுணர்ந்து சாதித்து—நீரிந்த
மண்டலத்தில் மாயோகம் மாசித்தி வாய்த்திடவும்
கண்டு கடைத்தேறக் கருது. (௬௱௰)

வேறு.

சடமிருந்தா லன்றோசாதிக் கலாம்யோகம்
திடமிருந்தா லன்றோசித்திக் கும்வாசி
விடமானவரவம் விட்டோட்ட வேணும்
உடல்போனு லுனக்கு உறுதியே தாண்டையே. (௬௱௰௧)

குடமது உடைந்துபோனற் கூடு மாகாசம்போலத்
திடமது குறைந்ததானல் சிலேத்தும மீறிப்போகும்
நடமிடும் குண்டலியாம் நாரியவள் பாதம்நம்பிச்
சடம்இது இறுகுமாறு சாதித்திடு நாளுமாண்டே. (௬௱௰௨)

மனைவிமக்களோடு மண்ணாசையால் மயங்கி
வினைகளைமேலும் கொள்ளும் விவகாரங் கழன்றுவிட்டுப்
புனைந்திருந்திடாது தனித்துப்புதுமையாய்ப்பதுமையென்னத்
தனியதா யிருந்து அந்தி சந்தியும் சாதியாண்டே. (௲௧௩)

துறவியெனவும்வேடம் துலங்கவும் வழக்குப்பேசி
மறலிவாய்க் குள்ளேசிக்கி மடிவார்கள்கோடாகோடி
இறையவ னடிமலர் ஏத்திடாப்பதர்கள் தமக்குப்
பிறவியும் கோடாகோடி பிசகில்லை அறிந்திடாயே. (௲௧௪)

மூப்பாவ தென்னமுடிந்த பேர்க்கன்றோ மொழிந்தேன்
துப்பாளி யறிவான் தொடர்மலமாய்கைக் குள்ளாய்
இப்பாரதனிற் பொய்வேடமிட்டுப் பொருள்பறிக்கும்
தப்பானவர்க் கில்லையது சண்டாளர்க் காகாதாண்டே. ()

அட்டாங்க யோகம் அதுபலித்திட அருளும்முத்தி
தொட்டாங்கு நின்று துணையா யியம நிய மாசனம்
பட்டாங்கி லுள்ளபடியறிந்து பாலிக்காதார்க்கு
முட்டாகும் மூப்பு முடியாது மொழிந்தேனிது சத்தியமே. ()

இயமமொடு நியமாதிகளை நீக்கி இட்டப்படிகள்ளும்
வயமதாய்க் கஞ்சா வபினொடு வனமூலி தனையுமுண்டு
நயம்பேசும் சண்டாளர் நாட்டினி லறியாவண்ணம்
பயமாகச் சொன்னேன் பரிபாஷையுணர்வார் பக்குவரே. ()

வேறு.

பக்குவிக ளறிவார் சற்
குருவால் பார் பயமேதுமில்லை
நற்கரு மாதிகளை நீக்கி
நாட்டிலலையு முலுத்த ரறியார்
தற்குறியாகத் தடித் தனமாய்
வாய்வாதம் பேசும்சழக்கர்கள் தாம்
மக்குவார் வாதம் செய்து
மண்ணாக மண்ணோடு மடிந்தே. (௲௧௮)

வேறு.

இட்டனர் சித்தர்கள் தாம் சாபம்இயைபிலா மாந்தருக்குத்
தொட்ட தும்கருக்கும்அன்றித் துலே தூரம்பாக்குமென்று
விட்டகுறை வந்தால்வாய்க்கும் வேணும்சாந்தமு மன்புமிது
மட்டுடன்வாய்மைதூய்மை வள்ளன்மை அருளுந்தானே.

அண்டபிண்டசராசரம் அனைத்தையும் ஆதியுப்பாற்
கண்டுகொண் டேனென் குருகருது மகத்தீசனருள்
உண்டு அதன்சூக்ஷமம் ஓதினேன் ஞானவெட்டி நூலதில்
மண்டலத்தில்முப்பு வழலைமார்க்கமும் தெளிந்திடே. (௩௨௰)

சொன்னதொரு வுப்பது சுயம்பிரகாச நீரதில்சுத்தி
பின்னமேது பிசகாதே முறைபிறழா துமே முடித்துத்
தன்னையேயறியத் தனித்துத் தணிவதாய் கற்பமுண்டு
அன்னை யபிராமி யவளருள் நாடிஅமர்ந்திடே. (௩௨௧)

விந்துவுடன் நாதம்கூடி விளைவான திந்தவுடல்
அந்தத் தந்திரந் தானறிந்தால் அறிவுண்டாச்சு
தொந்தமே செய்ரசசூத விந்துசுத்த சத்திநாதம்
கெந்தியொடு மென்போற் கிருபையால் சொல்வாராண்டே.

தொந்தித்திடச் சுருதியுடன் புக்திதோண வேண்டும்
தந்திரத்தினை யறிந்தவர்க்குச் சடலமது வலுத்துப்போகும்
அந்தரத்தினில் நின்றிலகலாகும் ககனவெளியிலதனுல்
வந்துசித்தித்திடும் வண்மையாம் ரசகுளிகையாலே. (௩௨௩)

துருசுநீறு – வேறு.

தூக்கிடு ரசபூரவீரமதில் துணிவதாகத்
தூக்கிடு சுத்தகெங்கை துரிதமாய்ப்
போக்கிடு குழிக்கல்லில் புதுமையாய்
நீக்கிடு மபனமாய் நெறியிதெ. (௩௨௪)

நெறியதாய் வருமெமழுகை நீயுமே
குறியாதாய்த் துரிசதைக் கொண்டுதான்
தறியதாய்க் கவசமும் சாடிடு
சிறியதா யிரண்டெரு தேர்ந்த்திடே. (௩௨௫)

தேர்ந்தெடுத்திடு திரமாய்த் துரிசதும்
சார்ந்திடும் சுயச்சுண்ணமா மிதனால்
ஆர்ந்திடும் ரசம் ஆடிடும் பிட்டதாய்ச்
சார்ந்திடு மிந்தச் சூக்ஷமந் தன்னினால். (௧௨௬)

சூதமணி.

சொல்லொணா ரசசூதவிந்து தொகுத்திடு சட்டியில்
வெல்லொணாத் துரிசதின் சுண்ணமே யதில்மேவிடு
மெல்லவும் வன்னியிட்டு மென்மையாக வெரித்திடு
வல்லராசனும் சிறைவசமதாகு மாண்டையே. (௧௨௭)

சூதராசன் சிறைபட்டுப் பிட்டென சுழன்றான்
வாதராஜன் வகையான தால் * மத்தை வகிர்ந்துந்
தீதுமேயறத் தீபமேயிடு திரும்பவும் செம்மையாய்ப்
பூதமேயென வெண்ணெய்போல் புறண்டிடு மாண்டே. ( )

வேறு

வாய்த்திடு மத்தை தன்னில் வளமதாய்த்
தீய்த்திடு தீபத்தால் திரும்பவும் தசமுறை
சாய்த்திடு † பொன்மூலிச் சாரதில் பின்புமே
பாய்த்திடு மணிபோ லாச்சு பாரினியாண்டே. (௧௨௯)

பின்புநீ யெடுத்தொரு பீங்கானி லிட்டுமே
அன்பதாய்க் கையா னதன் சாற்றினால்
தென்பதாய்க் கொடுப்பை சுருக்குத் தீவரத்திட
இன்பதாய்ச் சாரணை எற்றிட ஓடுமே. (௧௩௰)

ஓடுமே ககனமிசை உறுதியாய் யோசனைதான்
நீடுமே அண்டரண்ட மெல்லாம் நிலையதாய்த்
தேடுமே யதைவிடா மலும்தீப தாபமிட்டுப்
போடுமே யிதனாற் புனிதராகுவர் காணண்டே. (௧௩௧)

---

* மத்தை - ஊமத்தன்காய்-

† பொன்மூலி - பொன்னாங்காணி - கொடுப்பை- அல்லது - பொன்மேனி

சாதித்திடும் யோகிகட்குத் தானதிங் திலங்கும்
வாதித்ததி னற்பயனும் வழங்காது மார்க்கம்
சோதித்துமே சூதமணி சூடியே விண்சாரி
பாதித்திடு வார்பரம சற்குரு பரனலே. (௧௧௨)

வேறு.

சோதித் துரிசத்தின் சுண்ணத்தால் சூதமும்
ஆதியொளி மணியு மாந்தானே — சேதி
அறிந்தார் முடிப்பார் அறியார் மதிமயங்கி
வெறியார்போற் றனலேவார் வீண். (௧௧௩)

தாளக நீறு.

புகலுகிறேன் தாளக நீறுபுனித முடன்
அகலுமே நோய்கள் அணுவும் கைதப்பிடா
துகளு * மாதிமூலியினல் தோன்று முடலும்
சகலமும் வலுக்கும் சந்தேகமில்லை யாண்டே. (௧௧௪)

அமுரியினற் றளகத்தை அரைத்து மைபோல்
குமுறிவிடச் சுண்ணமதிற் கொஞ்சமிடு நீதான்
அமைவளவும் வட்டோடு அடுப்பிற் கேற்றி
சமைவுபெற வன்னியிட்டுச் சமைத்திடு மாண்டே. (௧௧௫)

அனலிடவும் அதுகருத்து நீர்வர ண்டுமே
புனலெனவும் போமதற்கும் புதிதாம் வாழ்வு
கனகமுட னதன்நிறமும் கருத்துக் காணும்
இனமுடன் பின்னதை வழித்துக் குழிக்கலிடே. (௧௧௬)

இட்டுமே குருமூலி இதனற் சாமம்
மட்டுமே மயனம தாகவும் பதமாய்
விட்டுமே யரைத்து வில்லைசெய் ரவியில்
பட்டுமே புடம்குக்கிடம் பிசகாதிதே. (௧௧௭)

---

* ஆதிமூலி - விந்துநாதங்கள்.

பிணமதாகிலும் வாய்திறந்து பேசுமொரு நாழிகையேனும்
குணமதாகும் கொடுநோய் களுக்குக்காலன் குவலயந்தன்னில்
மணமதாகு மகாகேசரி மெழுகிதன் மகத்துவத்தினை
உணவிவ காரமறும் உந்திக்கமலச் சுழிணைஉற்பவமே. ()

வேறு - மகாகேசரி மெழுகு.

பாஷாண மென்னப் பளிங்குபூரம் வீரம்பரிவுறவும்
வேஷாண மேதுகௌரி மனோசிலை வெள்வங்கம் நிமிளை
ஆஷாட பூதிபோலலை யாமலும்தாம்பிர மயம்வங்கம்
காஷாய மான * குடவன் லிங்கமும் காணுகம்தே. (௬௬௬)

காரமெனும் சிங்கிரசிதம் வெங்கலங் காணரிதாகும்
தாரமுடன் ரசசூதம் சத்திநாதம்கேந்தி யிவை சமனும்
நீரதுதான் சுத்தஜலம் காரசாரம் நேர்மையாய்க் கரைத்துத்
தீரமுடன் லோகங்களவை தூளதாய்ச் சிதைத்திடாயே. ()

சூதரசமதனைத் தொந்திகெந்தி சுகமாம் சத்தியதனுல்
ஆதிநவபாஷாணமும் அவைதான் பொடிஅணுவும்தவறிடாது
ஏதமேதினி எங்குமம்புவி மிசைஇனிக்கார சாரத்தினுல்
நாதமோடு குமுறவடுப்பேற்றி நளினமாயெரித்திடாயே. ()

காலைமாலை யிந்தப்படி சுண்டிடவும் கடினமதமாய்
வேலையாகும் வெகுவிகசிதம் மேன்மையிதை யார்காண்பார்
சேலைமூடு மாதராசை செகதலத்தற்று வாலைதிருவருட்
பாலையுண்டு காலைமாலை பணிந்தவ ணிருந்திடாண்டே. ()

பாச்சிடு செங்குமரி நீர்ப்பனிபோலு மாதவிடாய் நீரதே
கூச்சலிடும் சரக்கெல்லாம்கூவென்றலறிக்கட்டும்மெழுகதாய்த்
தீச்சலிடாம லும்பதனமாய் நீர்சுண்டு மட்டும் தீயுமிட்டு
ஆச்சுதென்று அம்மைகுண்டலி அடிவணங்கி யாறவிடே. ()

எடுத்திடு நற்குகையில் இன்னலறச் செம்பிட்டு ருகியபின்பு
கொடுத்திடு பச்சைப்பயரளவு குலவும்திரி சகன்றுபோம்
மடித்திடு மதன்களிம்பு மாசறும் மாவேதை யிதுயார்தான்
தொடுப்பாரிவ் வையகத்தில் துரிதமாம் வேதையீதாண்டையே

---

* குடவன் - பித்தளை.

பேதமற்று விளங்குமெய்ஞ் ஞானப்பெரி யோர்கள்தாம்
ஏதமுற்று வாடாமலும் இரந்துண்ணுமலும்
வாதமுற்று விற்றுவழி பார்த்திருப்பர் வகையிதுகாண்
தீதகற்று மகாகேசரி மெழுகுசெகதல மீதிலறிந்திடே. ()

பூமிதனி லின்னமும் புகன்றிடும் பித்தவாத சிலேத்துமம்
காமியற்கு மேதரிதுகாண் கடிதினில் பயறதன் வீதமாய்
வாமியபிராமி யவளடிமலர் வணங்கியுஞ் சிரமதில்
தாமிதன்பெருமை யுணரத்தாக்கிடச் சந்தேகமில்லைதானே.

வேறு.

செத்தவரு மெழுந்தொரு கணமேனும்
சேர்ந்துநின்றவரை
நத்தியுமுரைப்பர் நடுக்கமுறூர் நாதனுயிர்
விடுக்குமட்டும்
பித்தசன்னியும் தலைதூரம் போகும் பேசாது
கடல்புக்கிடும்
முத்தணி மாதர்முலைப் பாலில்முனைந்து
பயிறளவியவே. (௧௪௭)

இலங்கு * மிளகுடன் முக்கடுவும் சமனதா யிசைத்தரைத்து
நலங்கிளர் நல்லாவின் பாலுடன் கூட்டியே நயந்துமேவிச்
சலங்குமுறும் மேகம்பதினெட்டும் சார்ந்திட்ட பிணிகளுக்குந்
துலங்கிடவும் பயறளவு நீட்டத்தோன்று தோடுமேகமே.()

வேறு.

கருத்திடுங் கையானுடன் சங்கன்கருந்துளசி
யிலையின்சாற்றில்
கருத்துடனும் பயறளவு மகாகேசரி
மகராஜமெழு கிழைத்துப்புவியில்
பொருத்தி யருந்திடவும் கொடுபோகும்
காமாலை சோகைபலவும்
வருத்தமினி யேன்உலகுள வன்பிணியெல்லாம்
நாசமாமே. (௧௪௯)

---

* மிளகு - வெள்ளை மிளகு.

சுக்குடன் கஸ்தூரியஞ்சள் கடுக்காயிவை பொடிக்கவளமாய்த்
தொக்கவும் யிடெசமனுய்த் தொந்தியதில் மெழுகுபயறது
விக்கலுடன் மேவுவிப்புறுதி விஷப்பாண்டு விண்டிட்டேன்
தக்குமோ சடலமுயிர் பிரியாது தரை தனிலாச்சரியமாண்டே.

வேறு.

துரிதமுடன் காயசித்தி தோன்றுமுடல் வலுக்கும்
பெரிதரிதென வென்றும் பிசகாது வாசிகட்டும்
அரிதுதான் மகாகேசரி அதன்மகிமை யாரறிவார்
விரிதிரைப் புவிதனில் வீணர்க்குதவா திதுவாண்டே. ()

தீபகுண்டலி மூலாதாரத் திருந்துபொழிந் திடுமமுதம்
ஆபத்தில்லை யினியுடற்கிதை யநுதினமு முண்டுவரத்
தாபமேது வையகத்தில் சாவேது தகமையோடுங்
கோபமோடு மகங்காரம் கொள்ளி யிட்டுச்சுட்டிடே. (கருஉ)

தப்புமே உப்புறைப்பும் புளிப்புத்தள் ளாதிருந்து
ஒப்புமாத ரல்குல்உரக படந்தனில் நிலைத்துச்
செப்பும் நோய்கள்பலவும் மென்மேற் பெருகவுமாசை
கைப்பும் விடாதவர்க்குக் கிருபையே தாண்டே. (கருஙு)

சிலமாய் வாசிஉனக்கு ளடங்கச் சித்தி யாம்காயம்
வாலிபனுய் வாழ்வாய் வருவார்க ளுன்பாற்சித்தர்
தூலமும் கடந்துசூக்ஷம தேகியாய்க் ககனமேவி
ஞாலமீதிருக்க ஞாயமிதுநல்லவனு யிருந்திடாயே. (கருச)

சனகாதிகள் முன்கண்ட சச்சிதாந்ந்த ரூபகற்பம்
கனகமதாகும் காயம்கல்லுடன் வாள்வில்லடி யேறுது
வினவுகலை யாதியிடைபின் னிரண்டும்விர வியேமூலக்
கனலைமேவும் சுழினைகாணும் கபாடந் திறந்தே. (கருரு)

வேறு.

காலையொடு மாலைகடுகளவும் பிசகாமலும்
பயறதுதான்
வாலையவள் பாதம்பணிந்து * வாசியுடன்
கூட்டியுண்ணவும்

* வாசியுடன் - சூரியநாடி நடக்கும்போது.

சீலமுடனேடும் தொல்வினைத் தோஷம்
பறக்கும் திகைப்பில்லை
பாலனென்ன வானம்பூமி யிரண்டிலும்
வாழ்வா ராண்டையே. (கருசு)

வேறு.

காயம் வலுத்திடும் கவலைக் கடல்மூடும்
ஆயுளிவ னுக்குமிது வென்னலு மாகாதே
ஓயும் மனேவிருத்தி உடலில் * குருதிவாயும்
மாயும் வகைக்கிதை மாற்றயா றறிவாரே. (கருஎ)

காமப் பாலுண்டுங் கருத்தை யழிக்காது
வாமப் பாலமுரி வழங்கிவைய கந்தனிலே
நேமகத் தோடுநிட்டை தனிலிரு ந்திடில்
ஏமனேது இனியிழுக் கேது ஆண்டையே. (கருஅ)

ஒத்துப் பாய்ந்திடும் உலகில் திரிதரும்
பத்துத் தசநாடியும் படிந்து ஒருமித்துச்
சுத்த சிவாநந்த சூக்ஷமது கையுறும்
வித்தை பஞ்சரெத்தின மேன்மை யறிந்திடே. (கருக)

அண்ட மொடுபிண்ட மாதார வாசியதால்
விண்டிடவு மாகாதிதன் மேன்மை பூதலத்தில்
கண்டதுவும் காயமெனும் கற்பத்து றுதியதால்
பண்டு செய்தபாக்கியம் பலிதமு மிதாண்டே. (கசும)

கற்பமது கலந்துதின முண்டிடக் கலக்கமுடன்
முற்படு மரவதுங் கடித்தாலு விஷமேறாது
சொற்பமாம் பலவிஷமும் துயர்தராது தோன்றும்
அற்பமா ந்தருடன் கூடியழி யாமலுமாண்டே. (கசுக)

---

* குருதிவாயு - இரத்தமும் வாயுவும், மாறும்என்றது மாறிவிடுமென்பதுகருத்து, இரத்தம் வெள்ளிய அமுதமாகவும், காற்று- நீக்காற்ருகவும் மாறும்என்க, இதுவே அமிர்தசித்தி பெற்றூர் உடல்நிலையென்க, இவ்வுடலைப் பூதபரிணமங்கள் ஊறுசெய்யவியலா - பசி, உறக்கம், நீர், மலம் கிடையாது.

சூத நீறு.

செயரச சூதமொரு கலுவத்திட் டுச்சிறப்புடன்
நயமெனு மூமிநீர் சுத்தசலம் நாட்டிமத்தித்துப்
பயமுடன் தகரைப்பனிச் சாறளாவி யறிந்துமினிச்
செயமிதி லதிசூக்ஷமம் செந்தீயி லெரித்திடே. (௱௬௨)

எரித்திட வும்பாலாடை போலுமினி மையாகத்
தரித்திடு மேல்வழித்துத் தனித்துமே ரவியிலுந்தான்
பொருத்தியே நீர்சுண்டப் பொலிவுடன் * குகைதன்னில்
இருத்திடச் சுண்ணமாம் குகைச்சுண்ண மிதாண்டே. ()

உருக்கிடு வெள்வங்கம் உலகுதனிற் பதருமலும்
பெருக்கிடும் சுண்ணமீயப் பேசாதுகண் விட்டாடும்
சுருக்கினில் ரசிதம்தூய்மை சோதிபோல் துலங்கும்
அருக்கனைப் பழிக்கும் அறிதரி தாண்டையே. (௱௬௪)

சுண்ணமு மரிசியிடை சுருக்கத்தில் காலைமாலை
திண்ணமா யுண்டிடவும் திரேகம் கனகமாம்
எண்ணமே யலையாது எகாக்கிரச் சிந்தையாம்
நண்ணுமே குண்டலிநாரி யவள்பதந் தன்னிலே. (௱௬௫)

நாட்டிலே சிவயோகி கட்கிது நளினமாய்ப்
பூட்டகந் திறந்திடும் புறட்டில்லை யந்திசந்தி
தாட்டிக மாயுண்டு சடலத்துறுதி கூட்டி † யுச்சி
மேட்டதி லேறிவெகு சூக்ஷமித மிந்திடே. (௱௬௬)

வாதநோய்களுக் கதிகாலையில் வாங்கியுண்டு
தீதறும்படிச் சுழிமுனைத் திருமுனை யூடுபோய்
பேதமேது முறுது பேணிக்கருத்தோ டிருந்திடில்
நாதமே யொலிக்கும் நன்மையா யிதுசுண்ணமே. (௱௬௭)

அகார மென்ற வமுரிதன் சாதனையால்
உகாரமது உனக்குள் உறுதியாய் வலுத்தது
மகாரமென்ற மௌனம் மடைதி றக்கும்
சிகார சிதாகாசப் பெருவெளி சித்திக்குமே. (௱௬௮)

---

* குகை - பஞ்சு சுன்னக் குகை.

† உச்சிமேடு - தலையில் நடுவிடம் - விந்து நிலை.

தீக்ஷையினல் அகார உகாரந் தெளிந்திடும்
காக்ஷி கைகூடும் கருத்துடன் குருவால்
சூக்ஷமமிது சொல்லார் பெரியோர் சோதிப்பார்
தாக்ஷண்ய மும்தயை யோடருள் கூடிடே. (கசுகூ)

வேறு.

முப்போதும் வாசி முனை நோக்கித்
தப்பாம லம்மையின் தாள் பணிந்து
இப்பாரில் யோகமீ தெனத் தெளிந்தேன்
செப்பார்கள் சிலாக்கிய * மீதாண்டே. (கஎய)

தள்ளி னேன் தனிப்புளியு முப்பும்
துள்ளி னேன்உரை ப்பும்துலை தூரம்
உள்ளி னேன்உந்திக் கமலமுறுசோதி
மெள்ள வேயிகம் வெறுத்து மேலாண்டே. (கஎக)

அறுத்தேன் அந்நிய மாதராசை
வெறுத்தேன் வெறுங்கள் கஞ்சாவும்
குறித்தேன் குண்டலிஇரு செழுமலர்ப்பதம்
† நெறித்தேன் வாசிதனை நேர்மையாய். (கஎஉ)

கண்டதும் குண்டலி காலன்போலுமே
மண்டில மட்டும்சிறி மதர்த்துத்தான்
கொண்டதும் யான்பதறி னேன்கொலு
மண்டபத் திருந்துமதி வந்ததெனண்டே. (கஎங)

அண்டமுங் கடந்தேனதி யாச்சரியம்
பிண்டத்தினுட் பிறழாமலும் பிழைத்தேன்
உண்டன னமுரிஉச்சி யிருவேளையிலும்
எண்டிசை யிலும்யானுயர் ந்தேனண்டே. (கஎச)

நிலைத்தது அருத்தி நின்றது ஓடாமலும்
குலைத்திடு மிந்திரியம் குலைந்தது மாயமாகச்
சிலிர்த் ததுமேனி சிவந்ததுமுகம் திட்டமாய்
வலுத்தது காயம் வையகத்தி லாண்டே. (கஎரு)

---

* ஈது என்றது-சித்தயோக நெறியினை யென்க.

† நெறித்தேன்-வழியே சென்று கிட்டினேன்-

வேறு.

ஊதிநான் கண்டலுங் காரவாசி யதால்
சாதிசமயம் சண்டாளர் வகுத்ததென வேதேர்ந்து
ஆதிசக்தி யவளருள் வாய்க்க அனுவளவும்
பேதியா திருந்தேன் பிசகாமலும் நிதமே. (கஎசு)

செம்பு சுத்தி.

மட்டறும் துருசதின் சுண்ணமும் மகிழ்ந்தம் முறைத்
திட்டமும் பதனமாய்ப் திடமுடன் வராலி யிலையதில்
இட்டமாய் இடித்திடச் சாறுவழிந்து ஏகோ பித்துத்
தட்டற நீராய்ஓடியது வெள்ளத் தன்மைபோலே. (கஎஎ)

வேறு.

உச்சிதமாய்த் தாம்பிரம் உறுதியாய்
　　தகடதும் வெகுமெலினம்
சொச்சிதமா யடித்து முன்சாற்றினில்
　　தோண்டி யிட்டுப்
பச்சிதமாய்க் குழிவெட்டி மண்டிலம்
　　பாய்த்து வைத்து
இச்சிதமாய் எடுத்திடக் களிம்பற்
　　றிருந்த தாண்டே. (கஎஅ)

துரிசற்ற தாம் பரத் தகடது
　　தூய்மையா மாற்றுறுகாண்
பரிசற்றவே தையிதால் அதிகம்
　　பகரும்வெள் வங்கமாம்
பெரிசுற்றசுண் ணமும்திணையா
　　னதற்குப்பிச காதியினி
வரிசையாம் மாற்றேழு
　　வாய்த்தது வழங்குவாயே. (கஎகூ)

வேறு.

கொல்லுலையி லும்பதமாய்க் கொண்டுகுகை யிட்டூதி
வெல்லுமுருக் கும்முகத்தில் மேன்மையாய் * லிங்கமது
மெல்லவும்சம னிடையிட்டூதிப் போடுவியப் பேதுகாண்
சொல்லவும் போமோமாற் றெட்டுசுயம் பிரகாசமே. ()

---

* உருகிக் கட்டியதென்க.

மூட்டிடு பின்னுமக்குகை முனே தவறுதே எடையது
நீட்டிடு செங்குமரிச் சாற்றின்சுருக்கு நிச்சயமாய்ப்
பூட்டிடு பின்னும்ரச சூதபற்பம்புனித முடனே
தாட்டிக மாம்வயதொன்பது தரணியிலாரறி வார்காணே.

உள்ளமது கனகமானல் உறுதிவெளி லோகமெலாம்
கள்ளமதிரு ந்தால்கபடினல் சடுகளவும் கைகூடாது
தெள்ளமுத முண்டுசிவயோக நிட்டைத் தெளிவினலே
பள்ளமும் மேடும்இன்னதென்று தெரிந்திடும் பாரினியே.()

மதியமுதம் பொழியும் மகவானகை யோகம்
பதியளவும் பனிரெண் டாண்டென் பார்கடாம்
விதியது மேவினல் விட்டகுறை தரலினென்றும்
துதிகுண்டலி யவளால் சொரியு * மமுதமே. (௧அ௩)

உதகமென் றவமுரி உனதுள்ளே தான்வழியும்
இதயகம லந்தனில் இருவிகற்ப மறவும்
சதமெனவும் சதாயோக நிட்டை சாதித்து
நிதமும் அமுறியுண்டு நீடித்திருப்ப ராண்டே. (௧அச)

குறிப்பான முலைப்பால் கொண்டிடார் கசடர்
வெறுப்போடு உலகம் சுற்றிவெறுங் கையாய்ப்
பறிப்பார் கள்பின்பு பணந்தான் பதர்கள்போல்
† நெறிப் பார்வையில் நின்றிடாமூடர் களாண்டே. (௧அ௫)

பரிகாசமல்ல விந்நூல் பஞ்சரெத் தினம்
துரியமும் அதீதத்துணை நிலையுமுணர்ந் திடவும்
கரையேற லாகும்கருத் தால்வழி யுணர்வார்
சரியாக வன்னைவாலை தாள்மலரர்ச் சிப்பாயே. (௧அ௬)

ஓயாமலும் கனகம் உலுத்தாவர் செய்யவென்று
வாயாலும் பேசிவழி யுணராது வையகத்தில்
நோயாளி தமைக்கொன்று நொந்து போவார்
பேயாவ ரிவர்பேச்ச றிந்துவிலகு மாண்டே. (௧அ௭)

---

* உதகமென்றும் பாடமுண்டு.

† நெற்றிப்பார்வை யென்றது செய்யுள் எதுகைநோக்கி நெறிப்பார்வை யென்றுவந்தது இதனைக்கேசரி முத்திரையென்பர்.

அருள்வந் தெய்திடில் அருட்கண் பார்வைத்
தரும்கற் பமதுதள்ளா ட்டமின்றித் தானறிந்து
* குருவந்தவன் குவலயந் தன்னிலும் கூறுன்
மருள்கொண்டு மயங்காது வழியறி ந்திடே. (௧அஅ)

அப்புடன் தேயுவாயு ஆகாசம் பிரிதிவியும்
ஒப்புடன் பஞ்சபூத மதனுல்உலகி னிற்† கோசமைந்துந்
தப்பியே வெளியைநோக்கித் தனித்துரிய நிலையமர்ந்து
இப்புவி யிருப்பர்விதி இல்லாருக் காகாதாண்டே. (௧அக)

நாகநீறு – வேறு.

விட்டிடு மிலுப்பைநெய் யதுவெகு பதனம்
பட்டிடும் கரண்டியில் பணிவதாய் ஏழ்முறை
தொட்டிடு நாகம்துாய் மையாம் துணிவாக
நெட்டிடு பற்பமாக நீள்புவி பிழைக்கவே. (௧கூ0)

கம்பியுப் பொடு சீனம்கா ரம்சாரம்
வெம்பி யப்பதும் மேன்மை யமுரிநீர்
நம்புங் கடல்நுரை உப்புமந் ஙினமாய்
வம்பிலா மலுமிடித் துவை சூரணம். (௧கூக)

தாக்கிடு வீரச்சுண்ணம் தகமை யாக
வீக்கிடு சமன்பூரம் வெள்ளையு ந்தான்
ஆக்கிடு ‡ சுண்ணக் குகைஅது தன்னில்
மூக்கிடு மூசைதன்னை முனைந்து மணலிலே. (௧கூ௨)

வன்னி யிட்டெரி வண்மையாய் நாற்சாமம்
இன்னி லந்தனில் இதற்குநிகர் ஏதுமில்
சொன்ன வாறிடச் சுண்ணமும் பற்பமாய்ப்
பின்னமில் லாமலும் பிரித்தெடு உறுதியே. (௧கூ௩)

---

* குருவந்தவன் - என்பது குருவைக்கண்டு அடைந்தவ னென்று பொருள்.

† அன்னமயம்-பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயம் என்னு மைந்து மென்க.

‡ பஞ்சசுண்ணக்குகை யென்றுணர்க: அதுசித்தண்டஓடு, பேரண்டம், நண்டோடு - சங்கு, கற்சுண்ணம், ஐந்துசுண்ணமும் கூடியது.

சுன்னமோ டுசேர் துரிதறுட னதித
மென்னும் வீரமும்மேலும் ரசசூதம்
இன்னமும் சுத்தநாத மிதுவுஞ்சேர்த்து
நன்னய ம்பெற நாட்டு குழிக்சல்லிலே. (௩௯௪)

கல்லிலிட் டமுரி மூலப்புளி கடிதிலூட்டி
அல்லியின் செஞ்சா றதுவும் அளவதாக
மெல்லவும் சேர்த்து அரைத்தும் பதனமாய்
வல்லடாத் தோடுமே வழித்திடு மகலிலே. (௩௯௫)

கதிரொளி தன்னிலும் முகம்படக் காணும்
பதிந்திடும் நீர்வறண்டு படியும் பச்சையாம்
எதிரிதற் கேதினி சீலேழு பிசகாமலும்
சதிருடன் செய்சடுதி யிற்புடம் குக்கிடமே. (௩௯௬)

பிரித்தெடு சீலையைப் பேதமும் ஏதுகாண்
தரித்திடும் பற்பமும் தவளமாம் தாழ்விலா
திருத்திடும் இதனையே இருவேளை தன்னிலும்
பொருத்தியே உண்டிடப் போகும் *பல்நோய்களே. (௩௯௭)

காசமெ ட்டும்காத தூரம் கடிதான
ஈசரோகமி தற்குள் நாசம் குன்மம்
பாசமும் பதறும் நீரெறிப்புப் பறக்குமே
நாசமாம் வாந்தி சோபதாபமும் நாடிடே. (௩௯௮)

கண்டமா லைபிர மேகம் கண்டவிஷம்
சுண்டுமேகம் சூலைஆகாத விக்க லேப்பமும்
தண்டிடா தரோசிகம் தள்ளாடும் வாயுக்கள்
விண்டி டாதுஓடும் வெகுவியப் பிதாண்டே. (௩௯௯)

கருமவினை யினற் கட்டிய நோய்களும்
தருமம் புரியாது தடித்திடும் பலபிணிகளும்
பருவகால முணராது பாவித்த புணர்ச்சிப்
பிரியத் தாலுறும் பிணிகள்வாய் பேசாதாண்டே. (௪௦௦)

* பல்நோய் - பலநோய்கள்,

வஞ்சக மில்லை மாதுளங் கனியினீரும்
அஞ்சிடும் பனிநீர் இளநீர் இதற்கனுபானம்
மிஞ்சிய கஞ்சாவபின் மெலிவுறும் கள்ளும்
அஞ்சியே நீக்கி அருந்திடத் தெளிந்திடுமே. (சாக)

பத்தியம்.

மங்கையர் புணர்ச்சயும் *மயக்குறு வத்துவும்
பொங்கிய துர்கருமம் பொல்லாத சினமும்
தங்கிய நடையதிகம் தான்பலவும் நீக்கியே
திங்களும் பத்துமுண்ணச் சித்தியுட லாண்டே. (சாஉ)

பலவினைப் படாமலும் பச்சைப்பய றரிசியும்
நலமாகு மாவின்பாலும் நன்றாகக் கூட்டித்
தலமேற் சர்க்கரை சற்றுக்கலந் துபொங்கி
அலையா திருந்திட நோய்கள் அலறுமாண்டே. (சாங)

வேறு.

கதிரொளி யோடு கடிதினில் திங்களும்
வதியொளி யுந்தானே வாய்க்கும் — பதியொளியா
மூலப்பதி யிருந்துமூளும் சுழிமுனையில்
சாலத் தெரியும் அதுந்தான். (சாச)

முப்பாழுக் கப்பால் மூளைத்த தரியமது
இப்பாரில் யாரறிவார் யோகிகடாம் — தப்பாமல்
அன்னை அடிமலரை ஆதாரத் தேயிருத்தி
இன்ன லறக்கண் டிருப்பாரே. (சாரு)

காயமது குலைந்தாற் காரியமும் சிக்காது
ஓயும் காரணங்க ளோயாது — பாயும்
வகையது தான்மாற்றும் வழியமுரி பானந்
தகைமை யுடனே யருந்தத் தான். (சாசு)

ஆகாசத்தே தோற்றும் அந்தரங்கந் தானேகம்
வாகாக வாசிவசப் பட்டால் — தேகாதி
மூன்றும் திடமுடனே முப்பாழுமே கடக்கும்
சான்ற அறிவோர் தமக்கு. (சாஎ)

* சாராயம் - கஞ்சாமுதலியன.

* நாதத் தயிலம் – வேறு.

உயர்ந்த வெண்காரம் சாரம் உவருப்புமே
அயர்ந்த கம்பியுப்பும் அதீதபாரை யுப்புடன்
வியந்த கடலுப்பும் மேவுசவட் டுப்புமூலம்
பயந்த அமுரியும் கலக்கிப் படியவை திரிநாளே. (சுரு அ)

வைத்திடு திரிநாளும் தெளிய வந்நீரிலே
உய்த்திடு மால்தேவி உதவிடு வீரம்வெளரி
நத்திடு மேற்சிலே நாதகெந்தி யதுவும்
எத்திடு வெள்ளிலிங்கம் இவைகளைத் தூளதாய். (சுயகூ)

வேறு.

தூளதாகவும் தூக்கிடு கிழிதனில் துறையாகவும்
மாளவு முன்னீரில் மாட்டிடுகிழியிதை வயணமாய்த்
தாளவும் வன்னிகமலந் தாக்கிடு நுரைவராது
தேளது போலவும் தூளும்கட்டிடும் தெரிந்திடே. (சுகய)

சீர்மேவிய கதிர்முகம்படவுஞ் செயமுட னிதனைப்
பார்மேவி யோர்பாண்டத் திட்டபின் படரும்
கூர்மேவிய கிரணச்சூடதனால் குணமாய்ச் சுண்டும்
ஏர்மேவிய இதைவெகு பதனமாய் எடுத்திடே. (சுகக)

சங்கையே தினியொரு வாலுகையில் சடுதியாகத்
துங்கமா முப்புத்தூள் தனைவிரல் தவைக்காமலும்
தங்கவோட் டினிற்கட்டிடு தாட்டிகமாக மேலும்
பொங்கவே வேறுபாண்ட மிட்டுப்பொ திந்திடே. (சுகஉ)

வழிந்துவரும் வாலுகையின் வழியதாய்த் தைலம்
இழிந்துவரும் இதற்கீடேன் சொல்வேன் இனிநான்
அழிந்த உடலும் வலுக்கும்அரியரச சூதம்கட்டும்
பிழிந்தரச மிதைப்பிசகாது சுருக்கிடப் பேறிதே. (சுகங)

சொன்ன முறையைந்து தரம்துரிதமா கவும்செய்
பின்னமு மில்லைபின்புறச் சூதம்பிலம தாகும்
இன்னமு மிந்நூற்பஞ்ச ரெத்தினமிதன் மகிமை
தன்னைய றிந்தால்சந்தேக மில்லைதா னுண்டே. (சுகச)

---

* இங்குச் சொல்கின்ற சரக்குகள் கட்டியதென்க.

நவலோக மாற்றுகும் காடியிந்தத் தைலமதால்
சிவலோகம் போகலாம் சித்தர்களும் மயங்குவார்கள்
தவலோக மகிமையும் யிதற்குச்சற்றுத் தாழ்ந்திடும்
பவலோகங் கடந்துவாலைப் பதமலர் பணிந்திடாண்டே. ()

பத்துக்கொன்று தாக்கிடுதாம் பிரமதனிற் பணிவாய்
வித்தையிது மாற்றுத்தசபத்து வெகுமேன்மை வேதை
முத்துப்போலச் செயசூதரசமதை முனைந்துதைல மிட்டுச்
சுத்தத்தீ பாக்கினிதொடுத் திடக்கட்டி விடுமாண்டே. ()

வேறு.

காரசாரத்தால் சூதம்கட்டுண்டு
தீரமாகவும்வீர மேறும்திடமுடன்
தூரமோடவும் தொல்லையேதிதனல்
* சாரணையும்புட மொன்றொன்றாய்த்தானே. (சகஎ)

பங்கமறச்சார ணையும்பத்துப்பத்துத்
துங்கமுடனிட்டி டவும்தூய்மையாய்
வங்கமதைவைத் துருக்கிமாட்டிடவும்
பொங்குமதனீர்பிரி ந்துபோகுமாண்டே. (சகஅ)

வைத்திடுவாய் வாயதனுட்கண்டத்தில்
பொய்த்திடுமே லோகம்போம்ககனமும்
உய்த்திடுமண்டபகி ரண்டமும் உண்மையாய்
எய்த்திடச்சுற்றி வரலாம்இசைந்துமே. (சகக)

வெள்ளை யாம்ரசித மதில்வியப் புறவும்
மெள்ள வுமிதைத் தாக்கிடவும் மேன்மையாய்த்
துள்ளுமே ரசிதமுலை யில்தூய தாமாற்று
விள்ளுமே சோடசம் விந்தை யிதாண்டே. (சஉ0)

வேறு.

இந்தவிதம் சட்டமுனிக்குக் ககனமேற வும்யானும்
சொந்தமுட னருளினேன் சுற்றினாண்ட கடாகம்
வந்தவிதம் போல்வழக்க மதுதானறிந் திருந்து
விந்துவினல் கனகமும் விளம்பி னேனாண்டே. (சஉக)

---

* சாரணைக்குறிய பொருட்கள் பலவாதலால் விரித்துக் கூறுமிடங்களில் உணர்க.

சுருக்குடனும் குடவனில் தைலம்தொடுத் திடவும்
கருக்காது மாற்றுப்பத் தரைகனக மதாகுமிதைப்
பெருக்காது நூற்றுக்கொன்று பெருமைய தாயீய்ந்து
இருக்கா திருக்கும்வகை யறிந்திருந் திடாயே. (சுஉஉ)

செம்பொன் னல்துரிசி னல்செய மதாகும்
வம்பில்லை யிதனுள்மாட் டிடுபத்துக் கொன்று
நம்பிடுவாய் வயதிபத்து நாட்டினில்கடினம்
அன்பினுலிவ் வழிஅறைந் தேனினியறி யாண்டே. (சுஉரு)

குற்றமேது யினிவெள் வங்கம் குறிப் பதாகச்
சற்றுமசங் காமலும்தா னுகுநூற்றி லொன்று
உற்றிட வும்மாற்று உண்மையாய்த் தசமே
பற்றற்ற வர்க்குதவும் பரிசிது வாண்டே. (சுஉச)

தயிலமித னற்சடலம் தான்வலு வாகும்
* சயிலநீரறி வார்செய் வார்சங் தேகமில்லை
செயலுசா விடுமூர் களிற்சேர்ந்து மாந்தர்
வயமுலா விடவழியீ துளவுமிது தானுண்டே. (சுஉரு)

மூலப்புளிச் சுண்ணத்தால் முடிந்தது முப்புவுமே
ஞாலத்தினில் ஏமமும்காயமும் ஞானமும் சித்தியாம்
சீலத்துடன் தினம்இரு வேளைகற்ப முண்டால்
பாலத்தைத் தாண்டிக்கரை சேரலாம் பரிந்துமே. (சுஉசு)

தானுகநின்று தவித்துத் தள்ளாடிப் புகையுண்டு
போனர் கள்செத்துப் புவிதனில் கோடாகோடி
ஏனேயிதை யறியாமலு மிருந்தார் யானிரங்கி
வானுளச் சொன்னமுறை யிதுவகை யறிந்திடே. (சுஉஎ)

துரிசினுற் செயரச சூதமும் துலக்கமாய்
வரிசையுடன் கட்டும் வாதிக ளறியார்
அரிதாகு மிந்தவைந் நூற்றிற் சோன்னேன்
பெரிதென்று நம்பிப் பிரியமாய்த் தெரியவே. (சுஉஅ)

---

* சயிலநீர் - சுத்தகெங்கை.

வேறு.

நாழிகையில் வந்திடுவான் நமனென்றும் பாராமல்
பாழினிலே மனதைப் பாயவிட்டார் — சூழிரவி
சூதமதி கெந்திதனைத் தொட்டும் பிடிக்காமல்
வாதமது வாமோ வழுத்து. (சஉ௬)

சுட்டுக் கரியாக்கித் தொல்லுலகிலே தொலைத்தார்
கட்டுக் கடங்காது காணுமோ — பட்டுமினிப்
பாராத பாவிகட்குப் பழாச்சு லோகமெல்லாம்
ஆராய்ந்து ஓதி அறி. (சஙய)

ஞானிகட்கு வையகத்தில் நன்மையுடன் தொட்டதெல்லாம்
ஆனியறத் தான்பழுக்கும் ஆய்ந்துபார் — மேனியது.
வெம்பிக் கருகினவர் வீணுவார் வேறேது
அம்பிகை பாதமலர் ஆர். (சஙக)

இவ்வுலகில் ஏமமது எங்கும் இலகுமதைக்
கவ்வினவர்க் காகாது காணுவீர் — அவ்வும்
உவ்வும் உணர்மவ்வும் உற்றறிந்தா லதுவே
வவ்வும் கனகமது வாம். (சஙஉ)

வேறு.

கலியேதுகாண் ஞானிகட்குக் கசடற்ற பெருமையினல்
நலிவேது அரசரும் நபந்து மவரடி பணிந்து
மெலிவாகப் போற்றுவார் விடுபட்ட வர்க்காசை
உலையாது உறுதிகடைப் பிடித்தொழுகி னர்க்கே. (சஙஙு)

பொய்ஞ்ஞான முற்றுப்பூவையர் மயக்கிற் பொருந்தியினி
எஞ்ஞான முங்கூடாதென யிவர்இறக்கும் வழிகண்டு
விஞ்ஞான முத்திசித்தி யருள்மேம் பதியைநாடிடார்கள்
மெய்ஞ்ஞான சற்குருவகத் தீசர்மென்பத மலைபோற்றி.()

வேறு.

கட்டோடே அழியத்துறை கண்டார்
கருது வார்கள்பெண்கள்
பட்டாலே பொட்டாலே பாழ்கிணற்றில்
முங்கி மெய்ச் சேறு

பட்டாலும் சந்தனம்சவ்வாதெனப்
பரவசமா வார்காண்
விட்டார் புவிமாய்கை வாழ்ந்தார்
மதிப்புற் றுத்தாமே. (சஙடு)

தப்பாதகற்ப வழிலமுறை யெல்லாம்
தழுவி மெய்ஞ்ஞானம்
சொற்போத வெட்டியொடு தொடரெண்
ணூறில் தானறிவார்
ஒப்பாதபேர் கட்குரைத்தேன் உலகின
ரறியப் பஞ்சரெத்தினம்
இப்பாரிலிதற் கேதிணை என்குரு மலர்ப்பாத
மாணை யாண்டே. (சஙசு)

வேறு.

சித்தாதிகள் விடுத்தகதைகளைச் செகதலமாண் பர்காணூர்
சுத்தோதகம் சொன்னேன் சுரோணித நீர்க்காடிதன்னைச்
சத்தானதிதைக் கைவிடார் சகலமும்கை வசமாச்சு
செத்தாற்பிழை ப்பதேதுகாண் * தீரிமூல வட்டம்பாரே. ()

பாஷாண பற்பம்

நன்றானகள்ளி சதுரமதுதான் நாட்டினில் மெத்தவுண்டு
குன்றேறிக் கண்டுமதுதனைக் கொண்டதிதப் பாலெடுத்து
இன்றோடு நாண்மூன்று வெள்ளைஎழிற் பாஷாணம் விரவி
அன்றுடம்வை ரவியில்பெரு மகவிலிட்டதுவும் சுண்டிடவே.

கற்பூரமானும் பூரம்சூடனது கவின்பெறத் தூளதாய்ப்பொடி
பொற்பாகச் சேர்த்தரைசாம மட்டும்புகழ்பெற மயனமதாய்த்
தற்போதர் தருமதீதவண்டு நாபிதனை யொக்கவும்விடு
முப்பாலும் தவறுதிந்தமுறை மொழிந்தேன் ரவியில்நாட்டே.

நாட்டிடவும் சுக்கானதின் பொடிநவிலும் பொற்சுண்ணமதைச்
சூட்டிடுநீ சிலையதுஏழு முறைசுருக்கினி லகவிலிட்டு
மாட்டிடு குக்கிடப்புடம் மௌனமாயிரு வாய்பெசாதே
காட்டிடும் பாஷாணபற்பமிது கண்டவரெவர்க ளாண்டே.

---

* மூலாதாரத்தில் குண்டலியைக் காண்பா யாக.

வேறு.

கொட்டாவி விட்டுமுயிர் சூலந்த சவமேனும்
தட்டாது உக்கிரமாய்த் தானெழுந்து பேசும்
எட்டாது பற்பமிது ஈரரிசி யாகக்
* கெட்டாருக் கிட்டாவரு பானமுங் கோண்டே. (௪௪௧)

வேறு.

சங்கனது சாறதனில் சற்றும் பிசகாமல்
மங்களம ஞென்மணி யாம்வாலே யருளாலே
இங்கிதமு டன்தர வும்எகு முடன்சன்னி
சங்கையினி யேதுசிவன் தந்தமுறை யாண்டே. (௪௪௨)

வன்மைபெறு குட்டமுடன் வாதமிளை நோய்கள்
கம்மிடுசி லேத்துமமும் கடல்புக்கி யோடும்
உண்மையுடன் குன்மமுள மாந்தையொடு வாய்வும்
செம்மைபெற யிந்தமுறை செப்பினேனு ணண்டே. (௪௪௩)

குக்கல்வலி காக்கைவலி குமட்டுமரோ சிகமும்
விக்கல் விஷப்பாண்டு டனேவெள்ளை குறைநோயும்
பக்கம்னு காதுயினிப் பாகவிலைச் சாத்தில்
சிக்கெனக் கொடுத்திடவும் சிலாக்கியமு மாமே. (௪௪௪)

விப்புருதி † யாப்புமெலி விக்கல் பக்கசூலை
ஒப்புவிரை வாதமுக மூதலானைக் காலும்
தப்பும் பிசகாது உடன்தாக்கு கரிசாலே
அப்புவினி லச்சம தகற்று புளியாகா. (௪௪௫)

வேறு.

அயமெனும் செம்புருக்கி அரிசியிடை அதில்தாக்கு
சுயமெனும் சொர்ணம் சொல்லரிய சோதிப்பிரகாசம்
வயததும் தசமாற்று வளமுடனதனை மறுமுறையும்
நயமுட னுலை யிலிட்டுநாத கெந்தித்தைலம் சுருக்கிடே. ()

---

* கெட்டாருக்கு - பாவிகளுக்கு.

† யாப்பு அரையாப்புக் கட்டி.

சுருக்கிடவும் சொர்ணம் துரிதமுடன் வெட்டையதாம்
நெருக்கிடவும் பொற்றலை நெல்லிச்சா றதுதன்னில்
பெருக்கிடவு மிடுபுடம் பிசகாமலும் குக்கிடம்
எருக்கிடவும் செந்தூரம் இதுவெகு சூக்ஷமமாண்டே. ()

*கற்பழியாமலும் கள்ளபினி யுடன்கஞ்சா புகையாமலும்
வெற்பான உடலதுமெலி யாமலும்மேன் மையாயமுத
நற்பானமுடன் கொண்டிடவும் நலிவேது காயமது
†பொறபோலு மிருகும்பூரண மாம்வாலை யருளாண்டே. ()

முளைத்தெழுந்த செழுஞ்சோதி மூலத்திடை யேநின்று
விளைத்தெழுங் கனலைமே லெழுப்பியம்மை யருளால்
களைத்திடாம லதீதப்பார்வை கண்முன்கண்டு கற்பமுண்ணத்
துளைத்திடு மாருதாரமுந் துரிதமாயூடு றுவித்தானே. ()

செந்தீக்கன லெழுப்பியதில் செலுத்தும் பனிரெண்டாண்டு
நந்தீசருரைத்த வாணையிதுநாட் டினில்சூக்ஷம மறியாமலும்
‡விந்தானும் வன்னியென விதாணையது தெரியாமலும்
நந்தீமை விலகுமெனச் சாடினூர் நாட்டுநெருப்பிலே. ()

பிண்டத்துறுஞ் சுடர்பேதித்துச் சிறிப்பிதிர்ந் தெழுந்து
அண்டத்தினுச் சியில்தாக்க அமுதமது சுரந்திடும்
கண்டத்தி னிடைவாசி கால்விட்டோடா தயர்ந்திடும்
சண்டப்பிர சண்டசமர்த்த வாலாம்பிகை சாதகத்தால். ()

சொற்குறி காணமலும் மனிதர்கடாம் சோலைபுக்கித்
தற்குறிபோல் சுள்ளிகள் பொறுக்கித் தணலிலிட்டும்
விற்குறிமேவ விழைவார் வீணரவரை நீக்கிடு
சற்குருபாதம் சதாகதியெனத் தாழ்ந்திடாண்டையே. ()

சட்டைகக்கு மோராண்டின் சாதகத்தால் தணியாத
வெட்டைய கலும்பலநோய் வெடுவெடுத் தோடிடும்
நட்டமும் படாதுநானு மஞ்சியோடிப் போவேன்
இட்டமுட னேதினூரகத்தீ சர்எனக்கு மாண்டே. (சுருரு)

---

* கற்பு - பெண்ணாசையில்லாமை, இதனை, பிரம்மச்சரியமென்பர்.
† பொன்போலு மென்றது பொற்போலு மென வந்தது.
‡ விந்துதானும் - என்றது விந்தானும் எனக்குறைந்து வந்தது.

சதானந்த் செந்தூரம்.

கெந்தியரி தாரமனோ சிலையோடு கேளும்
விந்துரச பூரம்விளை வானநவச்சாரம்
இந்துவத னுப்பொடுந் தா * னீசனவன்பாரி
இந்தவகையத் தனையும்ஏற்று கலுவத்தே. (௪௫௪)

விட்டுவிடு வெண்கரு வும்விட்டு மறைசாமம்
பட்டவை கள்தான்மெழுக தாகவுமே பாங்காய்த்
திட்டமுடன் சிவந்துவருஞ் சீறமுரி மேலும்
இட்டுமறை பின்னுமொரு சாமமினி தாண்டே. (௪௫௫)

தீதற்றுச் செந்தேன்பாயும் சிகரனச் சிதாகாசப்
போதுற்றுத் தலைழக்கப் † புழைவழிகண் டார்க்கென்றும்
யாதற்றும் பிறப்பிறப்பற்றும் என்னம்மை வாலையம்மை
தாதிற்ற அடிமலர்த்தாள் சதாநந்த ‡தூர மொழிவேனே.()

பாசவறையில் செல்கின்ற பணமுடியா வெனும்தீய
வாசியைக் கூட்டிவழிதனில் மடைமடக் கிக்கபாலம்
‡‡ ஊசித்துவாரத் திடைச்செலுத்த உபாயமிச் செந்தூரம்
தேசிகனற்பாதம்தெண்ட னிட்டுச்செய்யுமெனச்செப்புவேனே.

வானுலாவும் பனிவரைவாய் மருவற்ற நீரொருபடி
தானளந்து மொருபாண்டத் திடுசற்குருவைப் போற்றி
ஈனமென்று கருதாமலும் இனிதாகவும் கரைகம்பியுப்புப்
பானமிதனைத் தெளியவை பரிதிதனில் திரிநாளே. (௪௫௮)

சாகரமும்வற ண்டுமேகமாம் தனிக்கதிர் வேம்மையினால்
தாகநீரது தான்சுண்டும் பதமறிந்து தவறாமலும்
ஏகமான இதன்குழம்பை யினிவேறுபாண் டத்திட்டும்
ஏகவிந்திரச நாதகெந்தி சேர்த்தரைத் தாண்டே. (௪௫௯)

---

* ஈசன்பாரி - கெவுரி.

† புழைவழியெனினும் ஊசித்துவாரமெனினும் ஒன்றே.

‡ செந்தூரமென்பது முதல்குறைந்து தூரமென வந்தது.

‡‡ திட்டிவாசல் - கண்டத்துள் வழி. ஊசித்துவாரம் ஒன்றே.

பாகமாகவும் யிருநான்கு சாமம்பக்குவ மாகவும்
சோகமின்றி விடாமலும் துரிதமுடன் அரைக்கவும்
வேகமாக மெழுகதுபோல் விகசிதமாகத் திரண்டு
போகும்பின்னும் விட்டமுரி புதுமையாக வும்கல்லிலே. ()

தாக்கவுமிடைக் கிடையரிதார மனேசிலை லிங்கம்
பார்க்கவும் பஞ்சபூதமாச் சுதுபவுஷா ரறிவர்காண்
ஊக்கமது விடாமலுமரை உரைத்துப் பின்னுமுந்தான்
வீக்கமுடன் சாமந்தான் மூன்றுமேல் விளம்புவேனே. ()

பூதவுடற் சித்திபுகழதீதப் புளியாரைச் சாறும்வெகு
ஆதரவுடன் பொற்றலை அதிசயமாம் சீந்திலதன்வழி
நாதமாஞ்சாறும் நளினமுடன் நல்லவுரி யதினுடன்
நீதறும்சாறும் தினுசுக்காகச் சாமமொன்று தேர்ந்தே. ()

காலமது வீணுகாமலும் கடிதினில் மெழுகதைப் பதமாய்ப்
போலுமது குழிக்கல்லினிற் புதுமையுடன் திரண்டுமேலும்
சாலவும்வரும் பாகமறிந்து தவறிடாமலும் தாக்குடனே
காலனெனவும் வீரச்சுண்ணம் கடுகளவுங் கவனமாண்டே.()

ஊட்டிவிடு சுண்ணமாம் வீரம்ஒருகடுகள வும்துரிதமாய்
மாட்டிவிடு குழிக்கல்லினில் மத்தித்திந் தப்படியும்
நாட்டிவிடு வகலதனில் நளினமாய் ரவிமுகம்படவும்
ஓட்டிவிடு சீலையேழும் உண்மைபதாய்ப் புடம்கௌதாரியே.

சீக்கிரமாய்க் கௌதாரிப்புட மிடவும்திர ண்டுகட்டி
நோக்கிடவுஞ் செம்மையிதன் வண்ணம் சிறுமையது
போக்கிடவு முன்சொன்ன சாறுபுறட்டி மறுபடியும்
தாக்கிடவு மரைத்துச் சளையாமலும் புடமிடே. (௪௬௫)

அடுத்துமேதா னிந்தவிதம் ஐந்துமுறை யாகவும்
தொடுத்திடச் செந்தூரமாகும் தோஷமேது மின்றியே
எடுத்துமே * பணமதாக ஈந்திடத்தீர்ந் தோடுமே
கடுத்துமே நோய்களெல்லாம் காணுமோ சகத்திலே. ()

---

* பணம் - பணவிடை, மூன்றுகுன்றுமணியிடை.

கண்டதொரு வல்லாரை கனமூலியது காய்ந்திடித்து
விண்டதொரு பனைவட்டதில் வெம்பிடவும் தீயில்
சுண்டிடவும் இளகியமாகத் தேன்விட்டுப் பிசைந்து
மண்டிடவும் செந்தூரம் * கழஞ்சிமடிந் திடுமேகமே. (சுகூஎ)

மேகமென்ற தெல்லாமடி ந்திடும்மேன் மையாகச்
சாகசமுடன் கையான் சூரணத்திற் கழஞ்சியது
போகவும் கொடுக்கப் புக்கியோடும் சாகரமே
சோகமுட னீளைப்சிரண மும்துரி தமாகவே. (சகூஅ)

கோபமுடன் முப்பானெட் டட்டகுட்ட குன்மமும்
† சாபமுட னகலும்சகல தோஷங்களும் சன்னியும்
தீபமுடன் கற்கண்டதின் பொடிதனில் தேன்விட்டுத்
தாபமிட்டுத் தரத்தொலை தாரம்போர் சிலேத்துமமே. ()

சேர்த்திடும் விலாமிச் சுச்சிறிய தாகவும்
பார்த்தெடு வில்வம் பழமதன்சா றும்நன்னாரி
ஆர்த்திடு ‡ வெட்டியின் வேறதுவும் ஆகவும்நீர்
சார்த்திடு வன்னியிட்டுச் சட்டியி லாண்டே. (சஎய)

அடுப்புறவும் அனல்மீறி அதுகொ திக்கவும்
கொடுத்திடு செந்தூரமது கழஞ்சி துரிதமாய்
விடுத்திட வும்சுண்டி மேலும்வரும் இளகியம்
மடித்திடும் நோய்களுக்கு மகாகால னுண்டே. (சஎக)

காலனுமி தைக்கண்டு கடிதினிலோடிப் போவான்
ஆலகாலமு மிதைஅசைக் கொணுது அதிகமாம்
தூலதேகமும் வலுக்கும் திணிந்தொரு மண்டிலம்
மேலுமுண் டிடவேறு கற்பமினியே னுண்டே. (சஎஉ)

---

* கழஞ்சியென்றது பனிரெண்டுபணவிடையென்க. பணவிடைமூன்று குன்றிமணியென்க

† சாபம் - மனக்கொதிப்பால் கூறுவது, ஆனதால் இது கருமநோய் வகையில் அடங்கும்.

‡ வெட்டிவேர் - இதனைக்குருவிவேரென்பர். (கருமையானது)

சுத்தமாம் சுத்தோதகப் பெருமையினல் சுருதிசொன்ன
வித்தையெல் லாமாகும் வேறுசலன மிதற்குமில்லை
சத்திநாத விந்துமொக்கச் சலந்துசலனமு முண்டாகும்
* எத்திதனை யறிந்தால் இனிபிறப்பில்லை யாண்டே. (௪எ௩)

கட்டுக்கதை கள்மொழிவார் கனகமும்செய் வோமென்று
துட்டைச்சுட்டு வழியறியாது துடுக்காக வாய்மதம்பேசிக்
கெட்டுவிட் டோடினவர் கோடியுண்டுகேவல மாகாமற்றுன்
இட்டமுடன் பஞ்சரெத்தின மிதில்இயம்பினே னறிந்திடே.

வேறு.

இன்பமுடன் கடுக்காய் தான்றி
இனியதாம் நெல்லியதின்ரசம்
தென்பருளும் கீழாநெல்லியுந் தேனதும்
விட்டு நன்றாகத்தான்
அன்புடன் பழச்சாறதும் அதீதமாங்
கருந் துளசிச்சாறும்
நம்பியே விட்டுநன்றாய் நளினமாக
வன்னியிட்டிடாயே. (௪எ௫)

இட்டிடவும் பாகதன்பதபாக இனியது
சுண்டி வரும்போது
விட்டிடுநீ ஆவின்நெய்தான் மேலு
மதைக் கிண்டிப்பின்பு
சட்டெனவு மிறக்கியாறவிட்டுத்
தவறுமற்செந் தூரமதனிற்றுன்
பொட்டென வுங்கொடுக்கப் போகுமே
மகோ தரமுமாண்டே. (௪எ௬)

வேறு

சுக்கானற்ற கப்பலைப்போற் சுழன்று தாளதாகும்
இக்காயகற்ப மறியாமலும் இசைத்திட்ட நாதவிந்து
எக்காரண மெனவும்காணு மலும்இகந்த னிற்பல்லோர்
மிக்காவி விட்டழிந்தார் வேணபேர்களு ந்தானுண்டே. ()

---

* எத்து - உளவு.

விந்தான சுக்கானதின் விநோதமீ தென்றறியார்
* சந்தான மூலிதனைச் சரக்கென்றுந் தாணியிலே
நொந்தார்க ளனேகர் நொடிதனி லாகும்நாதமது
விந்தோடு கூடிக்குருவாச்சு வெட்டவெளி யாண்டே. ()

ஊசித்துவார மொன்றுண்டு உலைக்கள த்திலதனை
நாசித்துவா ரத்தினடுவணை யில்நன்மை யாயூதி
வாசியெனும் பரியேறிவை யாளிபோ வார்காண்
யோசியாம லும்சிவயோக உத்தமர்கள் தெளிந்திடே. ()

ஊற்றுநீர் போற்பெருகும் உதகமெனும் சுத்தசலம்
மாற்றும்வகை யறிந்ததின் மாநிலத்தில் நாதவிந்தைப்
போற்றித்தச தீக்ஷைபத்தும் புனிதர்கள் முடிப்பர்வாசிக்
காற்றைப் பிடிக்கும்வழி கண்டார்கள் யோகிதாமே. ()

சத்தான வாழ்க்கைதனில் சடலமதை மறந்துநாளும்
வத்தான பானம்செய்து † வைதீகமெனும் சன்மார்க்க
‡ சித்தமெய்ம் மார்க்கத் ‡‡ துறவுதனில் கழிப்பாருக்கு
வித்தையறி வாரிதன் சூக்ஷமம் விளம்பினேனே. (சஅக)

ஓங்காரவட் டக்குண்டலி உண்மை யையறிந்து
நீங்காதவள் மலரடிநித்த மும்நிலையிற் றுழ்ந்து
சாங்கோப மாகவும்தனித் திருந்திலகி வாழ்வார்
ஏங்காணும் உலகோர்க்கு இந்தமுறை யாண்டே. (சஅஉ)

---

* சந்தானம் - பரம்பரை - இது குருபாரம்பரை வழியில் கேட்டுவருவ தன்றி வேறுவகையில் உணரவியலாது. இதனுண்மை தெரியாமல் பலர்பல வாறுமனம்போனவாறு சுட்டுக்கெட்டு மடிவாரென்க.

† வைதீகம் - வேதாசாரம் - அதுதமிழ்வேத நெறியென்றுணர்க.

‡ சித்தமார்க்கமென்றது சித்தர்கள்கையாண்டுவந்த வழியென்க. அது உடல்சித்தியும் உயிர்முத்தியும் பெறுவான் மணிமருந்துக்களைத் துணையாகக் கொண்ட நெறியென்க.

‡‡ துறவு-இருப்பதைவிடுதல்-என்பதால் இருக்கும் பொருட்களில்உள்ள பற்றை விடுப்பதே துறவென்று கருதினர்கள்அன்றி வேஷம் பெரிதாக மதிக்கார் தமிழர்என்றுணர்க. காவி தண்டம்மொட்டை முதலியயாவும் தமிழ ருக்கின்று இக்காலத்திருப்பது கலப்புஎன்க. இதனைக் (கற்றேய்த்துடுத்தபடி வப்பார்ப்பான்) என்னும்பரிபாடல் உரையில்காண்க.

எக்கலிடும் குருதியும்சீழும் இனிவழியும் சலமும்
கக்கலெனும் குழியில்கச டர்கள்கண் மூடிகளாய்க்
குக்கல்போற் றிரிவார்க்குக் குண்டலித் தாயுமிவர்
பக்கம்வரு வாளோபா வியவராகு மறிந்திடே. (௪௮௩)

உக்கிரமாய்ப் பெண்கள் மாய்கையிலே உரமழிவார்க்குத்
தக்குமோ உடல்தப்பாது காயசித்தி செய்துமென்ன
பக்குவமாகவு மவர்பாழ் நேசமே உதறினல்
எக்காலமும் காயம்இருகு மினிச்சித்தி யாண்டே. (௪௮௪)

சுருக்கான வாலையவள் சுருதிமுப்பு வாய்முடிந்து
கருக்கான சரக்கிற்கெல்லாம் காலனென வுந்தான்
பொருக்கான வர்க்குப்பொலி வுறுநேராகு மென்று
இருக்கான வகத்தீச ரினிதுரைத்தா ராண்டே. (௪௮௫)

* வேதாகமங்க ளெல்லாம் விநயமதாய் மறைத்த
சூதானவிந் ததின்சூக்ஷ மதைமுறை யாய்க்கண்டு
ஊதாரியா காமலும்வாசியை ஊதிஉந்தி யில்நின்று
ஆதாரமாறுங் கடந்தார் அறிவாளர் கள்தாமே. (௪௮௬)

முடியுமெய்ஞ் ஞானக்குருபரன் மேன்மை முன்சொன்ன
படியில்ஞான வெட்டிப் பரிபக்குவங் கண்டால்
கொடியதா மூப்புக்கசிவும் குலைந்துட லும் இறுகி
நொடியதில் சித்தியாகும் நுண்ணறி வாலாண்டே. (௪௮௭)

கனகமாம் செம்பினைக் கனமுடனு லைதனில்
வினயமுட னுருக்கிச் செந்தூரம் வியப்புடனே
நினைவதா கவும்பணவிடை நீட்டிட வுடனே
முனையும் சோதிவண்ணம் முக்கா லாண்டே. (௪௮௮)

---

* வேதாகமங்க்ள்என்றுகூறியது, தேவாரதிருவாசகம் வேதமும், சித்தர் நூற்கள்ஆமங்களுமென்க. (சித்தர் இயக்கர் கந்தருவர்-உரைத்த ஆகமங்கள்) என்று சூதசம்மிதைகூறும் கருத்தை யூன்றி யுணர்க.

பத்தியுட னிந்தப் பரீகைஷய தைப்பார்த்து
வித்தியா சமுமன்றி வெகுபதன மாகவுந்தான்
நித்தமும் மண்டிலம் நிச்சயமாக வுமுண்டிடச்
* சித்தியாச் சுதுகாயம் சிறப்பாகவு ந்தானே. (சஅகூ)

காயமது மிறுகிக் கனகம்போல் செவக்கும்
பாயும்கலையு மாறுமற் † பாலவழி யூடுபோகும்
‡ சேயைப்போல் சென்மங் கோடிவருட மூலகில்
மாயமாக வாழலாம் மகத்தான போக்கிதாண்டே. (சகூ0)

காலையிரு வேளையிலும் கருத்தோடுந்தாறுக
மூலப்புளி யுடன்செந்தூரம்முக் காலுமுண்டு
சாலவுமம்மை குண்டலித்தாள் மலர்நோக்கி
ஞாலமிசைச் ‡‡ சித்தனென்று நாளும்வாழலாமே. (சகூக)

வெண்பா.

பிண்டத்துட் பேதைப் பிறப்பகற்ற வேபிறந்து
மண்டலித்த தாயும் மகத்தாமே—குண்டலியின்
தாளைத்தினந் தோறும் தான்பணிந்து காயகற்பம்
வேளை யிருபோதும் விழை. (சகூ௨.)

மூலப்புளி யென்னும் முன்னோர்கள் தாமுரைத்த
சீலத்தினை யுணரச் செப்பினேன் — ஞாலத்தில்
சுத்தசலம் கெங்கைச் சுயம்புவாம் நீரமுரி
சித்தங் கலங்காமற் றேர். (சகூ௩)

---

* சித்தியான உடலுக்கடையாளம் பசி நித்திரை நீர் மலம் நிழல் கிடையாது என்றுணர்க.

† பாலம் - நெற்றி.

‡ சேயைப் போலவென்றது 16 வயதுடைய சிறுவர்வடிவென்க.

‡‡ சித்தர் - சித்தானவர் சித்தர், இவர்கள் தமிழ்மொழிக்கும், தமிழ் நாட்டுக்கும், நாகரீகத்துக்கும், தலைவர். என்றுய்த்துணர்க.

சோற்றைச் சுருக்காமல் தூய்மையாய்த் தானிருந்து
எற்றி யிருகாலும் இன்பமாய்க்—காற்று
வழியோடு ககன மார்க்கமே நுழைவார்க்கு
அழியாது இக்காயம் அறி. (சகூச)

ஆண்டதில் மலமற்று அந்தரங்க நாடிகடான்
வேண்டும் வகைக்கிசையும் வேறில்லை—தாண்டிடவும்
திரிமூன்று ஆண்டதனில் திரேகம் வயிரமாம்
வருமூன்று யோகமதில் வாசி. (சகூரு)

வேறு.

இருபத்தோ ராயிரத்தறு நூறெனும் சுவாசம்
விரிவாக விருந்ததெல் லாம்வியப்புட * னொன்றுச்சு
சரிபத்துத் தீக்ஷையும் சாதித்ததினால் தன்மயமாம்
பெருமையாம் சிவயோகப் பிராப்திதரணி யிலாண்டே. ()

இந்திரிய மெனுமமுரி இதன்நுணுக்கமு முணர்ந்து
சந்துவெனவும் அண்டத்தில் தள்ளாடித் திரியாமல்
வந்தவழி நோக்கி வாயிற்படி காத்திருந்தார்க்கு
முந்தும் முத்திசித்தி யெல்லாம் மொழிந்தே னண்டே. ()

சிட்டருக் கெனச்சொன்ன நூல்சிலா க்கியமாம்
வெட்டியாயிர மும்ஞானமெ னமுந்நூற தினாலும்
தொட்டவெண் ணூறும்நூறும் தொடுகு றியாய்
விட்டபஞ்ச ரெத்தினமும் விரிவான தாமாண்டே. (சகூஅ)

பஞ்சரெத்தின மெனப் பக்குவர்க் குரைத்த
விஞ்சை நூலாமிந்நூல் வெட்டவெளி யாகவும்
சஞ்சலத்தினை யறுத்துத் தற்போதகிலே யளிக்கும்
மஞ்சலமிசை வளர்குரு † வர மகினை லாண்டே. (சகூகூ)

---

* ஒன்றுச்சு - விரிந்தமூறையே ஒடுங்கியதாலென்க.

† வரம் - கருணை, அருள், தயவும்ஆம். குரு கருணையன்றி எவ்வகை நிலையும் அடையவியலாதென்க. ஒருக்காலடைந்தாலும் மாறிவிடுமென்க.

ஓதிடும் ஆதியாம் உத்தமநாத விந்துபோற்றி
நாதராம் * பதினெண்மர் நற்றுட்பத மும்போற்றி
நீதியாயன்னை வாலாம்பிகை மேகத்தாள் போற்றி
மேதினிப் பஞ்சரெத்தினம் மேன்மையும் போற்றிபோற்றி.

திரு வள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்த
ஞானவெட்டி நூறாக்கும் நவரெத்தின சிந்தாமணி ஆக்கும்
திறவு கோலாகிய,
பஞ்ச ரெத்தினம் முற்றும்.

முற்றிற்று

பதினெண் சித்தர் துதி

* நந்திய கத்தியர் மூலர் புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும் பூனைக்கண்ணர்

கந்திடைக் காடரும் போகர் புலிக்கையீசர்
கருவூரார் கொங்கணர் காலாங்கி யன்பிற்

சிந்திலழு கண்ண ரகப்பையர் பாம்பாட்டி
தேரையருங் குதம்பையருஞ் சட்டைநாதர்

செந்தமிழ்ச் சீர் சித்தர் பதினெண் பேர்பாதம்
சிந்தையுனிச் சிரத்தணியாச் சேர்த்தி வாழ்வாம்.